III.—PRESENTATION OF THE REPORT OF THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION

16th March 1960]

SRI T. SAMPATH : Mr. Deputy Speaker, on behalf of the Committee on Subordinate Legislation, I present its Seventh Report to the House.

IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1960-61—*con*.

SRI C. N. ANNADURAI : கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது நான் நாளையதினம் பேசுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

DEPUTY SPEAKER : நாளைய தினம் எதிர்க்கட்சித் தலைவரும், நிதி அமைச்சர் அவர்களும் பேசுவார்கள்.

SRI C. N. ANNADURAI : கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்களின் உத்தரவின்படி இந்த நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஆண்டிற்கு ஆண்டு தயாரிக்கப்படும் நிதி நிலை அறிக்கை ஒவ்வொரு ஆண்டின் முன்னேற்றத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்படவில்லை. ஒரு சிலருடைய தகுதிக்குத் தக்க வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப் பட்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டிலேயும் தரப்படும் நிதி நிலை அறிக்கையில் இருந்து அடுத்த ஆண்டிலே எந்த அளவிற்கு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதை சுட்டிக் காட்டத்தக்க வகையில் நிதி நிலை அறிக்கை தயாரிக்கப் படுமானால் மிகவும் உபயோககரமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்பட்டது என்பதும், எத்தனை தொழிற்சாலைகள் நாட்டில் உள்ளது என்பதையும் அவைகளில் எவ்வளவு எவ்வளவு தனியார் துறையில் இருக்கிறது என்பதைப்பற்றி விவரங்கள் எல்லாம் தரப்பட்டது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அதனைத் தொடர்ந்து எத்தனை பேர்களுக்கு இப்பொழுது புதிதாக வேலை வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது, எத்தனை புதுத் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டிருக்கிறது என்ற வகையில் நிதிநிலை அறிக்கை இருந்து இருக்குமானால் துரைத்தனத்தார் செய்திருக்கும் காரியங்களின் சாதனைகளைப் பற்றி அதன் ஆதரவாளர்கள் மகிழவும் அதிலுள்ள குற்றங்குறைகளை எடுத்துக் காட்டக் கூடியவர்கள் அவைகளை எடுத்துக் காட்டவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால் இந்தாண்டு நிதிநிலை அறிக்கை வேறு ஒரு வகையில் திருப்பப் பட்டிருக்கிறது என்பதை நான் கவனித்துப் பார்க்கிறேன். இது, முறை தவறான காரியம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் வளர்ந்து கொண்டு வருகிற ஜனநாயகத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் கடமைகளைச் சரிவர செய்ய

[Sri C. N. Annadurai] [16th March 1960

வேண்டுமென்று துரைத்தனத்தார் விரும்பினால் நிதிநிலை அறிக்கைகள், ஒவ்வொரு ஆண்டும் தரப்படுகிற நிதிநிலை அறிக்கையின் முறை மாறுபடாமல் அவைகளைத் தொடர்ந்து ஒப்பிட்டுப் பார்க்கும் விதத்தில் அமைந்திருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை எந்த கண்ணோட்டத்தோடு தயாரித்திருந்தாலும் நாட்டு மக்கள் இதை எந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்களோ அதன் அடிப்படையில்தான் அமைச்சர் அவர்கள் தனது நிர்வாகத்தை நடத்திச் செல்ல வேண்டும். பொதுவாக நம் நாட்டில் இன்றைய தினம் தொழில் வளர்ந்திருக்கிறதா என்று கேட்கிறபோது ஒருபுறம் தொழில்கள் வளர்ந்திருக்கிறது என்று கூறத்தக்க வகையில் நமக்கு தகவல்கள் கிடைக்கிறது. நம் நாட்டில் டன்லப் டயர் கம்பெனி, டி.ஐ. சைக்கிள்ஸ் கம்பெனி, செயற்கை பட்டுத் தொழிற்சாலை, என்ஜினியரிங் தொழிற்சாலைகள், ஜின்னிங் பாக்டரி 256, அரிசி மில்கள் 661, மோட்டார் போக்குவரத்து, தனியார் துறையில் காகித ஆலை, தனியார் துறையில் அலுமினியம் தொழிற்சாலை, சேலம் மாக்னிஸைட், தனியார் துறையில் அமைக்கப்பட்டுள்ள சோடா உப்புத் தொழிற்சாலை, மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன, சிமெண்ட் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள், சர்க்கரை உற்பத்தி செய்யும் இயந்திரங்கள், பட்டாபிராமில் ஏற்படுத்தப்பட்டுள்ள ரயில்வே வாகன்கள் கட்டுவதற்கான தொழிற்சாலை, மோட்டார் சக்கரங்களும் ரிம்களும் தயார் செய்வதற்காக டி.வி.எஸ். தொழிற்சாலை, டால்மியா சிமிட்டி கம்பெனி, தாழயத்து சிமிட்டி கம்பெனி, மதுக்கரை சிமிட்டி கம்பனி, சேஷசாயி கம்பனிகளும், பாரி கம்பனி நடத்தும் பல்வேறு தொழில்களும் சேர்ந்து இந்த நாட்டில் தொழில் வளர்ந்திருக்கிறது. தனியார் துறையில் இந்தளவு இருக்கிறது. பெரிய தொழிற்சாலைகள் என்று சொல்லக் கூடிய அளவிற்கு இங்கிருப்பது நெய்வேலியும், பெரம்பூர் கோச் பாக்டரிகளுமாகும். இந்த இரண்டும் மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் இருந்து அதிலிருந்து வரும் லாபத்தில், பிச்சைக் காசு என்று சொல்லும் வகையில் ஒரு குறிப்பிட்ட தொகைதான் நமக்கு கிடைக்கும் வகையில் இந்தத் தொழில்கள் அமைந்திருக்கின்றன. பட்டாபிராமில் ஏற்படுத்தப்பட்டுள்ள ரயில்வே வாகன்கள் கட்டுவதற்கான தொழிற்சாலையில் மூலதனமாக ஒரு கோடி ரூபாயில் சென்னை சர்க்காரின் பங்குத் தொகையாக 2 லட்சம் ரூபாய்தான் போட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையும் இந்த சர்க்கார் நடத்தும் பெரிய தொழிற்சாலை என்று சொல்வதற்கில்லை. நாஷனல் இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் மூலம் கிண்டியில் ரண சிகிச்சைக் கருவிகள் உற்பத்தி செய்ய மத்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இதற்கு ரஷ்ய அரசாங்கத்தின் உதவியும் கிடைக்கப்போகிறது. இரண்டாயிரம் பேர்களுக்கு இதனால் வேலை கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவும் மத்திய சர்க்காரிடம்தான் இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் மூன்று சர்க்கரை ஆலைகளும் நூற்பு ஆலைகள் மூன்றும்

16th March 1960] [Sri C. N. Annadurai]

நம் மாநிலத்தில் இருக்கின்றன. இந்த நூற்பு ஆலைகளுக்கு 31·78 லட்சம் ரூபாய் நமது அரசாங்கம் முதலீடு போட்டிருக்கிறார்கள். இவைகளை நீக்கிப் பார்த்தால் நமது துறைத்தனத்தார் நடத்துகிற தொழில்களில் ஒன்று பஸ் போக்குவரத்து, இரண்டாவது சிங்கோனா, மூன்றாவது என்ஜினியரிங் வொர்க்ஷாப், நாலாவது பால் பண்ணை. நான் கேட்கிறேன், இந்த சாதனைகளைக் கண்டு நீங்கள் பெருமைப்படுகிறீர்களா? என்று. தொழில் முன்னேற்றம் குறித்து நேற்று தொழில் அமைச்சர் அவர்கள் கூறியபோது ஐந்து கோடி ரூபாய் முதல் போட்டு ஒரு தொழிற்சாலையை நடத்தும் விதத்தில் இந்த நாட்டில் ஒரு முதலாளி இருக்கிறாரா, இருக்கிறாரா அப்படி ஒரு முதலாளி கிடைப்பாரா, கிடைப்பாரா என்று தேடிக் கொண்டிருந்தேன் என்று சொன்னார்கள். நீங்கள் முதலாளிகளைத் தேடுகிறீர்கள் என்பது நாடு உணர்ந்ததே. ஆனால் ஐந்து கோடி ரூபாய் மூலதனம் போட்டு ஒரு தொழிற்சாலையை நடத்துவதற்கு இந்த நாட்டில் ஒரு முதலாளி இல்லை என்று கூறும்போது, அந்த அளவிற்கு இந்த மாநிலத்தில் பணப் புழக்கத்தின் பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது என்றால், இந்த வகையில் வட நாட்டில் பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்றால் ஐந்து கோடி அல்ல ஐம்பது கோடி கூட முதல் போட்டு நடத்தக்கூடிய முதலாளிகள் அங்கு இருக்கிறார்கள் என்பதிலிருந்து, அதில் தொக்கி நிற்பது, வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்பதற்குள்ள உதாரணத்தை தொழில் அமைச்சர் அவர்களே தெரிவிக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். தனியார் துறையில் ஐந்து கோடி ரூபாய் மூலதனம் போட்டு நடத்தக் கூடியவர்கள் இந்த மாநிலத்தில் இல்லாமல் இருக்கலாம். நமது துரைத்தனத்தாருக்கு ஆண்டு ஒன்றுக்கு 80 கோடி அளவில் வருவாய் கிடைக்கிறது. நூறு கோடிக்கு மேல் கடன் பெற்று வாழ்க்கையை நடத்தும் துறைத்தனத்தார் ஐந்து கோடி ரூபாய் மூலதனம் போட்டு நடத்தும் தொழிற்சாலை ஒன்றாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். பெரிய பெரிய தொழிற்சாலைகள் மத்திய அரசாங்கத்தினிடமும், அதற்கு அடுத்திருக்கிற தொழிற்சாலைகளை தனியார் துறையிலும் கொடுத்து விட்டு நமது அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்ப்போம். பொள்ளாச்சியில் ரம்பச்சாலையுடன் மரம் பக்குவப்படுத்தும் நிலையத்திற்காக 1.64 லட்சமும், சென்னையில் ரம்பச் சாலையுடன் கூடிய மரம் பக்குவப்படுத்தும் நிலையத்திற்காக 3·69 லட்சமும், தீக்குச்சிகள், மருந்து தடவிய தீப்பெட்டிகள் தயாரிப்புத் தொழிற்சாலைக்காக 1·09 லட்சமும், காலனி தயாரிப்பு-பயிற்சி யூனிட்டுகளிற்காக 0·17 லட்சமும் தச்சுப் பட்டறை-கொல்லப் பட்டறைக்காக 1·25 லட்சமும், கிண்டியில் கைக்கருவிகள் தயாரிப்புப் பணி நிலையத்திற்காக 2·17 லட்சமும், துணி ஆலைகளுக்கு வேண்டிய பாகங்கள் பிரிவுடன் துணி ஆலைப் பாகங்களுக்கான பணி நிலையத்திற்காக 1·30 லட்சமும், பண்ணைக் கருவிகள் தயாரிப்புக்கான பணி நிலையத்திற்காக 0·02 லட்சமும், ஹரிக்கேன் விளக்கு தயாரிப்புப் பணி நிலையத்திற்காக 1·11 லட்சமும், பித்தளைப் பாத்திரம், வெட்டுக் கருவி பணி நிலையத்திற்காக 1·30 லட்சமும், கிண்டியில்

[Sri C. N. Annadurai] [16th March 1960

அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தயாரிப்புப் பணி நிலையத்திற்காக 0·18 லட்சமும், மின்சார சாமான்கள் செப்பனிடும் பணி நிலையத்திற்காக 4·22 லட்சமும், தராசுகள், துலாக்கோல், ஆய்வுக் கூட விஞ்ஞான கருவிகள் தயாரிப்புப் பணி நிலையத்திற்காக 0·61 லட்சமும், விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையத்திற்காக 0·44 லட்சமும், விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் தொழிற்சாலைக்காக 2·10 லட்சமும், கிண்டி தொழில் பேட்டைக்குப் பணி நிலையக் கார்ப்பரேஷனுக்காக 1·88 லட்சமும், தென் ஆற்காடு மாவட்டத்தில் மட்பாண்டத் தொழிற்சாலைக்காக 0·80 லட்சமும், கற்றாழை நார் பொருள்கள் தொழிலை அமைத்து அபிவிருத்தி செய்வதற்காக மூன்று செயல்முறை பயிற்சி நிலையங்களை நிறுவ 0·37 லட்சமும், பனை ஓலை பொருள்கள் தொழில் அபிவிருத்திக்காக உற்பத்தி பயிற்சி நிலையங்கள் நிறுவ 0·55 லட்சமும், பனைமரத்திலிருந்து கட்டில்கள், மேஜை, நாற்காலி போன்ற பொருள்கள் தயாரிக்க 0·34 லட்சமும், பிரம்புத் தொழில் பயிற்சி நிலையத்திற்காக 0·24 லட்சமும், மூங்கில் பொருள் செய்வதற்காக 0·08 லட்சமும், கண்ணாடி வளையல் தொழிலுக்கு 0·11 லட்சமும், படிகக் கூழாங்கல் உடைத்து பொடியாக்கும் யந்திரச் சாலைக்காக 0·14 லட்சமும், ஈரோடில் தாழ்ப்பாள், ஆணி, திருகுமரை தயாரிப்பு யூனிட்டிற்காக 0·47 லட்சமும், வெண்கலப் பாத்திரத் தொழில் அபிவிருத்திக்காக பணிப்பயிற்சி நிலையங்கள் நிறுவ 0·19 லட்சமும், காகித விளையாட்டு சாமான்கள் தயாரிக்க 0·34 லட்சமும், சரிகை, சித்திரப் பூ வேலைகளுக்காக 0·24 லட்சமும் இந்த வகையில் இந்த நிதிநிலை அறிக்கையில் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுக்கு. நான் இந்த அமைச்சரவையைக் கேட்கிறேன், முற்போக்கு துரைத்தனத்தார் என்றும், இந்திய துணைகண்டத்திலேயே எங்களைப் போல் நன்றாக நிர்வாகம் நடத்தக் கூடியவர்கள் அதிகம் பேர்கள் இல்லை என்று தங்களைத்தாங்களே பாராட்டிக்கொள்ளும் இந்த துரைத்தனத்தார், தங்களது அபாரமான அறிவைப் பயன் படுத்திக் கொண்டு பெரிய பெரிய தொழிற்சாலைகளை இந்த மாநிலத்தில் நிறுவுவதற்குப் பதிலாக, கற்றாழை நார் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையையும், பனை ஓலையினால் செய்யப்படும் பொருள்கள் செய்யும் தொழிற்சாலையையும் மட்டும் வைத்துக்கொண்டு, பெரிய பெரிய தொழிற்சாலைகளை மத்திய அரசாங்கத்தினிடத்திலும், அதற்கு அடுத்து இருக்கிற தொழிற்சாலைகளை தனியார் இடத்திலும் கொடுத்து விடுவார்களானால் நமது நாட்டில் தொழில் வளர்ந்திருக்கிறது என்று மக்கள் பெருமைப்பட்டுக் கொள்வார்களா? என்று கேட்கிறேன். நேற்றைய தினம் தொழில் அமைச்சர் அவர்கள், தனியார் துறையில் விடப்பட்ட தொழில்களை சர்க்காரே ஏன் ஏற்றெடுத்து நடத்தக்கூடாது என்று கேட்டதற்கு தனிப்பட்டவர் பேசுவதுபோல் அதற்கு எங்களிடம் பணம் எங்கேயிருக்கிறது என்று கேட்டார்கள். உங்கள் திறமை பணத்தைப் பெற பயன்படவேண்டும். அதை விட்டு விட்டு எனது மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் ஒரு இடத்தில் என்னைப் பற்றி சொல்லியதுபோல், பண்டாரங்கள் கூடிக்கொண்டு இல்லை என்று சொல்வது போல் இவ்வளவு பேர்கள் இருந்து, இவ்வளவு

அனுபவம் பெற்றவர்கள், இவ்வளவு ஆற்றல் உள்ளவர்கள், ஆற்றல் இருப்பதோடு மட்டுமல்ல, ஆற்றல் எல்லாம், உலகிலேயுள்ள தெல்லாவற்றையும் உருட்டித் திரட்டி எங்களிடம் தரப்பட்டி ருக்கிறது, மிச்சம் ஒருவரிடமும் இல்லை என்று கூறக் கூடிய நீங்கள் செய்யக்கூடியதெல்லாம் இதுதானா என்று நான் இந்த சட்ட மன்றத்தின் முன் கேட்க விரும்புகிறேன்.

ஆகையினால் இந்த துரைத்தனம் நடத்துகின்ற விதத்தைப் பார்த்தால் உண்மையிலேயே தொழில் துறையில் இந்த சர்க்காருக்கு இருக்கின்ற திறமைகளை சரியான வகையில் பயன் படுத்துவதற்கு வாய்ப்பு அளிக்காத வரையில் தனியார் துறைக்கு எவ்வளவுதான் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதனால் எந்தவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை. இதை பேசுகின்ற சமயத்தில் இங்கிருக்கின்ற அமைச்சர்கள் மார் தட்டிக்கொண்டு ஆம், இது தான் எங்களுடைய கொள்கை என்கிறார்கள். நாங்கள் சொல்லு வதுதான் சோஷியலிஸம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நல்ல வேளையாக இவர்கள் எல்லாம் தோன்றுவதற்கு முன்னாலேயே சோஷியலிஸ தத்துவார்த்தங்கள் தோன்றியிருக்கின்றன. ஆனால் சோஷியலிஸ தத்துவார்த்தங்களை கடைபிடித்து வருகிற உலகத் திலுள்ள யாராய் இருந்தாலும் சரி, அந்த அறிவாளிகள் எல்லாம் உண்மையிலேயே இவர்களுடைய சோஷியலிஸக் கொள்கையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இவர்கள் வேண்டுமானால் நாங்கள் செய்து கொண்டிருப்பதுதான் சோஷியலிஸம் என்று வாதாடலாம். அதல்லாமல் இதுதான் உண்மையான சோஷிய லிஸம் என்று இவர்கள் சொல்லிக்கொண்டிருப்பார்களானால், நிச்சயமாக சோஷியலிஸத்தை எழுதியவர்கள்—இன்று மறைந்து போனார்கள் என்றாலும்—அவர்கள் தங்கள் கல்லறையை பிளந்து கொண்டு வெளியே வந்து உங்களை சபிப்பார்கள். நாங்கள் செய்வது வேண்டுமென்றால் சமய தர்மம் என்று வாதாடுங்கள், முதலாளிகள் இருக்கத்தான் வேண்டும் என்று வாதாடுங்கள், தேர்தல் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது, ஆகவே தனியார்கள் துறையைப் பெருக்கிக்கொண்டிருக்கவேண்டியதுதான் என்று வேண்டுமானால் வாதாடுங்கள்—அது வேண்டுமானால் ஒரு அரசியல் யூகமாக இருக்கலாம்—ஆனால் அறிவாளிகள் எல்லாம் எழுதி வைத்த சோஷியலிஸத்தை இது ஒத்திருக்கிறது என்று பேசாதீர்கள். அவ்விதம் பேசிக்கொண்டிருப்பது—நாங்கள் 150 பேர்கள் இங்கு இருக்கின்றோம்—எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்று மேதைத்தனமாக சொல்லும் கருத்தாகவே இதைக்கொள்ள முடியும். இந்த மன்றமாய் இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த மாமன்றமாய் இருந்தாலும் சரி, இவர்கள் சொல்லுகின்ற சோஷியலிஸ கருத்துக்களை கேட்டு வெளியிலுள்ள வர்கள் கைகொட்டி சிரிப்பார்கள், அவர்கள் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள் என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இவர்கள் இந்த வகையில் சோஷியலிஸத்தை பரப்பி வருவது மட்டுமல்ல, நம்முடைய அமைச்சரவை தவறான முறையை கையாளுகிறார்கள் என்பதையும் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்பு கிறேன். இந்த சர்க்கார் மக்களுக்கு ஆசையை ஊட்டுகிறார்கள்,

[Sri C. N. Annadurai] [16th March 1960

அவர்களுடைய மனதில்—நமக்கு எல்லாம் இன்னும் கொஞ்ச காலத்தில் நன்மைகள் ஏற்படும்—நம்பிக்கையை வளர்த்து விட்டிருக்கிறார்கள். துரைத்தனத்தார் ஊட்டியிருக்கின்ற இந்த ஆசையில்—இந்த நம்பிக்கையில் மண் விழாமல் பார்த்துக் கொள்ளுகிற வகையில் இவர்கள் என்ன செலவு செய்து இருக்கிறார்கள், அதிலும் செலவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தில் எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள், வரவர எவ்விதம் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள், என்பதை எல்லாம் பார்த்தால் ஒதுக்கியிருக்கிற பணம் எல்லாம் சரியான முறையில் செலவு செய்யாமல் விடப்பட்டிருக்கிறது, அதோடு ஒதுக்குகிற தொகையும் குறைந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதை நான் எடுத்துக்காட்டுவதற்காக சர்க்கார் கொடுத்திருக்கின்ற அறிக்கைகளிலிருந்து சில விவரங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நெசவாளர்களுக்கு குடியிருப்பு காலனிகள் கட்டுவதற்காக திட்டகாலத்தில் 74·29 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதை நம்பிக்கொண்டு அவர்கள் தங்களுக்கு குடியிருப்பு காலனிகள் கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருந்தார்கள், இப்போதும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் 1960-61-ல் செலவழிக்கப்படுவதையும் சேர்த்து பார்த்தால் 59·61 லட்சம் ரூபாய் என்று காணப்படுகிறது. இவ்விதம் 20 லட்சம் ரூபாய் குறைந்திருப்பதற்கு காரணம் என்ன? தொழிலாளர்கள் வீடு வேண்டாம் என்று சொன்னார்களா? தொழில் அமைச்சர் அவர்களின் புன்னகையிலிருந்து தெரிகிறது, நாங்கள் என்ன செய்வது, தொழிலாளர்கள் தங்களுடைய பங்கை தரவில்லையே, என்று நினைப்பது போல் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு வீடு வசதி செய்து கொடுப்பதற்காக ஏன் நீங்கள் முதலாளிகளை வற்புறுத்தியிருக்கக் கூடாது? அவர்கள் பங்கு தரவில்லை என்று சொல்லுவதினால் மட்டும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை...

THE HON. SRI R. VENKATARAMAN: நான் சாதாரணமாக பேச்சில் குறுக்கிடுவதில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப் பற்றி பேசுவதில் குறிப்பிட்ட ஒரு விஷயத்தை கவனிக்கவேண்டும் என்பதற்காக சொல்லுகிறேன். பிஸிக்கல் டார்ஜெட் வேறு, பைனான்ஷியல் டார்ஜெட் வேறு. வீடுகள் கட்டின பிறகுதான் பணத்தை கொடுக்க முடியும். இதில் வீடுகட்டிக்கொடுக்கும் விஷயத்தில் பிஸிக்கல் டார்ஜெட் படி 1,600 வீடுகள் கட்டப்பட வேண்டும். அதில் இப்போது 938 வீடுகள் கட்டியாய் விட்டது. இன்னும் 200, 300 வீடுகள் அடுத்த வருஷத்திற்குள் கட்டப்பட்டுவிடும். பாக்கி 130 வீடுகள் பின்னால் கட்டப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI C. N. ANNADURAI: தொழில் அமைச்சர் அவர்கள் மறுபடியும் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு விளையாட ஆரம்பிக்கிறார். நாங்கள் எடுத்துச்சொல்ல விரும்புவது மக்கள் மீது ஏராளமான ஆசையையும் நம்பிக்கையையும் காட்டியிருக்கிறீர்கள், அதற்கு அல்லது அவைகளை நிறைவேற்ற நீங்கள் என்ன

16th March 1960] [Sri C. N. Annadurai]

முடிவு எடுத்திருக்கிறீர்கள். நீங்கள் காட்டுகின்ற புள்ளி விவரங்களையும், வீடுகள் கட்டின பிறகுதான் பணம் கொடுக்க முடியும் என்பதையும் நாங்கள் நன்ருக புரிந்து கொண்டிருக்கிருேம். அது பெரிய விஷயமல்ல, அதுவும் இந்த சபைக்கு வந்த பிறகு அறிந்து கொள்ளக்கூடிய அபாரமான விஷயமல்ல. அது சாதாரணமாக தெரிந்து கொள்ளக்கூடிய விஷயம்தான்.

காலனி தயாரிப்பு-பயிற்சி யூனிட்டுகள் என்ற இனத்தில் ஒதுக்கியுள்ள தொகை 5.54 என்று இருக்கிறது. ஆனல் 1960-61-ல் செலவு செய்யப்பட இருப்பதையும் சேர்த்து கணக்கிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் காணப்படுவது 2·32. ஏன் இந்தக் குறைவு ஏற்பட்டது?

மின்சார சாமான்கள் செப்பனிடும் தொழிலுக்காக திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது 17·70. ஆனல் 1960-61 ஆண்டுகளில் செலவழித்தான பிறகும் கணக்கிடப்பட்டிருக்கின்ற தொகை 11.95. விஞ்ஞானக் கண்ணுடித் தொழிற்சாலைக்காக திட்டத்தில் திட்டமிட்டிருப்பது 8.42, ஆனல் செலவழிக்கப்போவது 6.15. சில தொழில்களில் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்காக திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது 47.74. ஆனல் செலவழிக்கப்போவது 23·76. இவைகளை எல்லாம் பார்த்து கூட்டுறவு அமைச்சர் அவர்கள் பெருமைப்படுகிருர்களா என்று கேட்கிறேன். குறைந்த குதிரைத் திறனுள்ள மோட்டார் தயாரிப்புக்காக திட்டத்தில் ஒதுக்கியிருப்பது 11.07, ஆனல் செலவு செய்யப்படுவது 5.91. நான் சொல்லுகிற கணக்கு எல்லாம் 1960-61-ம் ஆண்டில் செலவு செய்யப்போவதையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். சென்னையில் சைக்கிள் தொழிற்சாலைக்காக திட்டத்தில் ஒதுக்கியிருப்பது 12.50 லட்சம் ரூபாய். ஆனல் இவர்கள் செலவு செய்யப் போவது 9.40 லட்சம் ரூபாய். கைப்பணிகளுக்காக திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது 57.50, ஆனல் செலவு செய்யவிருப்பது 33.26. கைத்தொழில் பொருள்களை விற்பனை செய்யும் நிலையங்களை நிறுவுவதற்கு திட்டத்தில் ஒதுக்கப்பட்டது 15·26, ஆனல் செலவு செய்யப்போவது 10.52. துணிகளுக்கும் பாய்களுக்கும் அச்சிடுவதற்கும் சாயமிடுவதற்கும்—இந்தத் தொழில் சாதாரணமான தொழில்—அதிலும் சாயமேற்றுவதில் நீங்கள் சிறந்தவர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்—அப்படியிருந்தும் இதில் செலவு செய்ய ஒதுக்கப்பட்டது 5.55, ஆனல் செலவு செய்யப்போவது 0.31. இதைப்பார்த்து அமைச்சரவை பெருமைப்படுகிறதா என்று கேட்க விரும்புகிறேன். இதற்கு வேண்டுமானல் நீங்கள் நடைமுறை சிக்கல்களை காரணங்களாகக் காட்டலாம். திட்டங்கள் எல்லாம் இந்தவிதமான காரணங்களினல்தான் காலதாமதம் ஏற்படுகிறது என்று நீங்கள் சொல்லலாம். அவ்விதம் நீங்கள் சொல்லுவதாக இருந்தால் நான் குறிப்பிடுகிற மற்றெரு குற்றச்சாட்டுக்கு நீங்கள் பதில் சொல்லியாகவேண்டும். இந்த திட்டங்களை எல்லாம் ஏன் வரைமுறை இல்லாமல் போடுகிறீர்கள். நிறைவேற்ற வேண்டிய திட்டங்களை கணக்கிட்டு அதற்குரிய காலத்தில் நிறைவேற்றுகிற

[Sri C. N. Annadurai] [16th March 1960

தக்க அளவுக்கு அதற்குத் தகுந்த அளவில் திட்டங்களை தீட்டி செப்பனிட்டு வைத்துக்கொண்டு வேலைகளை செய்யவேண்டும். அதல்லாமல் வரைமுறையில்லாமல் திட்டங்களை போட்டுவிட்டு அதற்குரிய காலத்தில் நிறைவேற்றுமல் தவறியிருக்கிறீர்கள், அதற்கு காரணம் என்ற குற்றச்சாட்டுக்கு நீங்கள் பதில் சொல்லியாக வேண்டும். மருத்துவத் துறையில் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது 813.65 லட்சம். ஆனல் 60-61-ல் செலவு செய்யப்படவிருப்பதையும் சேர்த்து கணக்கிட்டுப்பார்த்த பிறகும் வருகின்ற தொகை 528.73 லட்சம். நான் மருத்துவ அமைச்சர் அவர்களை கேட்கிறேன். மருத்துவத் துறைக்கு நாட்டில் எவ்வளவு அவசியம் இருக்கிறது? நீங்கள் திட்டத்தில் ஒதுக்கியிருப்பதே குறைவான தொகை. நாட்டில் இருக்கின்ற சுகாதார சீர்கேட்டினை நாம் எல்லோரும் அறிந்திருக்கின்றேம். மருத்துவ வசதியில்லாமல் நாட்டுமக்கள் நலிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் கூட இந்த குறைவான தொகையை ஒதுக்கி மக்களுடைய மனதில் ஆசையை காட்டிய பிறகும், ஒதுக்கிய தொகையும் செலவு செய்யப்படாமல், ஒதுக்கப் பட்டது, 813 என்று புள்ளிவிவரங்களை கொடுத்துவிட்டு, செலவு செய்திருப்பது அல்லது செய்யப்போவது 528 என்று புள்ளிவிவரம் தந்திருக்கிறார்கள். இதைப்பார்த்துவிட்டு மருத்துவ அமைச்சர் அவர்கள் மருத்துவத்துறையில் இந்நாட்டு மக்கள் மிகவும் திருப்தி அடைந்திருக்கிறார்கள், அல்லது சுபீட்சம் அடைந்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன். மாநில நெடுஞ்சாலைக்காக இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப் பட்டிருப்பது 370·85, ஆனல் 1961-61-ல் செலவான பிறகும் சேர்த்து கணக்கிட்டு இருப்பது 287.91 லட்சம். ஆகவே நீங்கள் வகுத் திருக்கிற திட்டங்கள் எல்லாம் சரியானபடி நிறைவேற்றப்பட வில்லை என்பது இதிலிருந்து தெளிவாகின்றன. அதிலும் போடப் பட்டிருக்கின்ற திட்டங்களையும் தனிப்பட்ட முதலாளிகளிடம் கொடுத்துவிட்டு, இந்த அமைச்சர்அவை, எங்களிடம் மிஞ்சுவார் யாரும் இல்லை, எங்களிடம் கெஞ்சுவார்தான் இருக்கின்றனர் ஏராளம் என்று சொல்லுகின்ற அளவில் இருந்து கொண்டிருக் கின்றன. ஏதாவது புள்ளிவிவரங்களை பார்த்துக் காட்டினுலும் கூட, இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள், இவர் களால் புரிந்து கொள்ளவும் முடியாது, என்று தனக்கு இருக்கின்ற திறமையை காட்டுவதாக, பாராளுமன்ற முறைக்கு உகந்ததல்லாத முறையில், பன்பாட்டுக்கு ஒவ்வாத முறையில் இதே சபையில், பல தடவையும் நம்முடைய சட்டசபை முதல்வர் அவர்கள் எங்கள் பக்கம் இருக்கின்ற உறுப்பினர்களைப்பார்த்து நான் தங்களிடம் மன்னிக்க வேண்டுகிறேன், இந்த வார்த்தையை உபயோகிப்பதற்காக—தனக்கு உரித்தான எதேச்சாதிகாரத்தை செலுத்திக்கொண்டு வருகிறார்கள். உறுப்பினர்களை பார்த்து இவ்விதம் எல்லாம் கேட்பதற்கு இவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்? இவர்கள் ஒன்றும் படிக்காமல் வந்துவிட்டு பேசுகிறார்கள் என்று சொல்லுவதற்கு இவர் யார் என்று கேட்க விரும்புகிறேன். நாங்கள் ஏதாவது வரைமுறையில்லாமல் பேசினல் அதைத்தடுத்து நிறுத்துவதற்கு இந்த சபையில் தாங்கள்

16th March 1960] [Sri C. N. Annadurai]

இருக்கிறீர்கள், நாங்கள் படிக்காமல் இங்கு வந்து பேசுகிறோம் என்றால் அதைப்பார்த்து கேலி செய்ய பொதுமக்கள் வெளியில் இருக்கின்றார்கள். எங்களுடைய படிப்பைப்பற்றி முடிவுகூற இவர்கள் எந்தவிதமான நீதிபதிகளும் அல்ல, அல்லது நாங்கள் படிக்காமல் வந்து பேசுகின்றோம் என்று சொல்ல இவர்கள் எங்கள் வழக்கறிஞர்களும் அல்ல. ஏதோ சந்தர்ப்ப வசத்தால் அமைச்சர்களாகிவிட்டார்களே தவிர இயற்கையிலே தங்களுக்கு ஏற்பட்ட திறமையினால் அல்ல . . .

SRI S. LAZAR : On a point of order, Sir. கனம் அங்கத்தினர் அவர்கள் ஆரம்பம் முதலே அவர்களுடைய உரையில் அமைச்சர்களை குறிப்பிடுகிற முறையில் " நீங்கள் " " நீங்கள் " என்று தலைவர் அவர்களையே பார்த்துக் குறிப்பிடுவதாக இருக்கிறது. முறைப்படி தங்களைப் பார்த்துத்தான் எல்லா அங்கத்தினர்களும் பேச வேண்டும். அப்படியிருக்கும்போது கனம் அங்கத்தினர் அவர்கள் இவ்விதம் பேசிக்கொண்டுபோவது முறையாகுமா என்று கேட்க விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member must address the Chair.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே எழக்கூடிய பிரச்னை இன்னொன்று இருக்கிறது. நான் நடந்து கொண்ட விதத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஒழுங்கை மீறி நடப்பதாகக் குற்றம் சாட்டினார்கள். இந்தக் குற்றச் சாட்டு சபாநாயகரைப் பற்றிக் குறிப்பிடுவதாகும். அதாவது நான் ஒழுங்கு மீறி நடக்கும்போது சபாநாயகர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்று அவரைப் பற்றிக் குறிப்பிடுவதாகும். ஒழுங்கான முறையில் இருந்தாலும் அது அவர்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். நான் ஒழுங்கு மீறி நடக்கிறேனா என்று குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 10-00 a.m.

SRI C. N. ANNADURAI : சட்டசபை ஒழுங்கை மீறி நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நடந்துகொண்டார் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : It is a reflection on the conduct of the Chair. He should withdraw it.

DEPUTY SPEAKER : The hon. Member must address the House through the Chair. Let him not address the Hon. Minister direct.

THE HON. SRI C. SUBRAMANIAM : He has said that I have acted beyond the scope of the procedure followed in this House and against the procedure of this House. That is a very serious allegation—leave alone me; I am a very poor Member of the House and he is entitled to attack me—unfortunately against the Chair in the conduct of the business of the House. It is a reflection against the Presiding Officer. Such a reflection should not be allowed and I would request you, Sir, to ask the hon. Member to withdraw what he has said which amounts to a reflection against the conduct of the Presiding Officer.

[16th March 1960

DEPUTY SPEAKER : The hon. Member will withdraw it.

SRI C. N. ANNADURAI : I unconditionally withdraw. நான் எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்தது, உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் பேசும்போது நிதி அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகின்ற நேரத்தில் அது அதிக யதேச்சாதிகாரப் போக்கில் இருக்கிறது என்பதைத்தான் தங்கள் மூலமாக நான் கவனப் படுத்தினேன். ஒழுங்கு முறைக்கு மாருக இருந்தால் நாங்கள் எப்படி தங்களுடைய ஆணைக்கு அடங்க வேண்டுமோ, அதே போன்று அவர்களும் தங்களுடைய ஆணைக்கு அடங்க வேண்டு மென்பது உலகம் அறிந்த உண்மை. இந்த தரப்பிலிருந்து ஒரு உறுப்பினர் பேசும் நேரத்தில், "விவரம் தெரியாமல் பேசுகிறீர்கள், உட்காருங்கள்" என்று அமைச்சர் அவர்கள் சொன்னது என்னுடைய காதில் கேட்டது. எது உண்மையில் ஜனநாயகப் பண்பு என்ருல், எது இந்த மாமன்றப் பண்புக்கு உகந்தது என்ருல், விவரங்கள் தெரியாமல் பேசினுல், அதனுடைய பூரா விவரங்களேயும் இந்த மாமன்றத்தின் முன்னுல் வைக்கவேண்டும். ஆனுல், தங்களுடைய மேதாவித்தனத்தைக் காட்டிக்கொள்ள வேண்டும் என்று விவரங்களே அவர்களுக்குத் தராமல், விவரங் களேத் தெரிந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அவர்களுக்குக் கொடுக்காமல், இப்படிப் பேசினுல் அது அவர்களுடைய யதேச்சாதிகாரப் போக்கைத்தான் காட்டுகிறது என்ற முடிவுக்குத் தான் நாம் வரவேண்டியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் சமூக நலத்திற்காகத் திட்டமிட்டது 47.256 லட்சம் ரூபாய், ஆனுல் செலவானது 10.14 லட்சம் ரூபாய், சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்திற்காகத் திட்டமிட்டது 1,392.39 லட்சம் ரூபாய், அதில் செலவானது 1,274.66 லட்சம் ரூபாய் மீன் வளத்தை அதிகப்படுத்தத் திட்டமிட்டது 95.14 லட்சம் ரூபாய், ஆனுல் அதில் செலவானது 84.63 லட்சம் ரூபாய். கால்நடை பராமரிப்பிற்காகத் திட்டமிட்டது 217.48 லட்சம் ரூபாய், அதில் செலவானது 195.65 லட்சம் ரூபாய். இப்படி செலவிடப் போவதாகச் சொல்லி, ஆசை காட்டி, வாக்களித்து, அந்தந்தத் துறைகளில் சம்பந்தப்பட்டவர்களும், பொது மக்களும், நம்முடைய துரைத்தனத்தார் இவைகளே யெல்லாம் செய்து கொடுக்கப் போகிருர்கள் என்று எதிர்பார்த்து நிற்கின்ற நேரத்தில், திட்டத்தின் முடிவில் நீங்கள் (சர்க்கார்) கணக்குக் காட்டியிருப்பது ஏற்கனவே போட்ட திட்டப்படி இல்லாது இப்போது கணக்கில் குறைந்திருக்கிற காரணத்திஞல், நீங்கள் (சர்க்கார்) வேண்டுமென்றே திட்டமிடுகிற நேரத்தில் ஏராளமாகச் செய்வதாக வாக்களித்து, பிறகு திட்டம் முடியும் போது அவசரம் அவசரமாகக் கணக்குப் பார்த்து காரியங்களேச் செய்ய முடியாது, உண்மையில் போதுமான அளவுக்கு பொது மக்களுடைய ஒத்துழைப்பு கிடைக்காத காரணத்தினுல், திட்ட மிட்ட அளவுக்குச் செலவழிக்க இயலாமல், குறைந்த அளவில் செலவழித்து, போட்ட திட்டங்களே நிறைவேற்ருமல், பொது மக்களுக்கு நீங்கள் நம்பிக்கை துரோகம் செய்கிறீர்கள் என்ற

16th March 1960] [Sri C. N. Annadurai]

குற்றச்சாட்டை இந்த அமைச்சரவையின் பேரில் தங்கள் மூலமாகச் சாட்ட விரும்புகிறேன். இது என்ன ஒரு குறைபாடா என்று யாராவது கேட்பாரேயானால், நமது மாநிலத்தின் வரவு-செலவுத் திட்டங்களையும், மாநில கணக்குகளையும் பரிசீலிக்கக் கூடிய உயர்தர அதிகாரி இதனைப் பற்றி கீழ்க்கண்டவாறு சொல்லியிருக்கிறார் :—

"The object of control over expenditure is to secure as close an approximation as possible between the actual expenditure and the final grant or appropriation under each subject of appropriation. The degree of closeness with which the appropriation for the year approximates to the actual expenditure as finally recorded is an index of the efficiency of Government budgeting and control over expenditure."

ஆக, முதலிலே ஏராளமான அளவுக்கு—தாராள மனப்பான்மை காட்டத் தக்க அளவுக்கு—ஏராளமான பணத்தைச் செலவழிக்கப் போவதாக நீங்கள் (சர்க்கார்) ஆசை காட்டுகிறீர்கள். பிறகு நிறைவேற்றித்தருகின்ற நேரத்தில் அது குறைந்து, நம்முடைய வரவு-செலவுக் கணக்கைப் பரிசோதிக்கின்ற உயர்தர அதிகாரி இது சரியாகாது, துரைத்தனத்தின் திறமைக்கு அடையாளமாகாது என்று எடுத்துக் காட்டுகிற அளவுக்கு நடந்துகொண்டிருக்கின்ற இந்த துரைத்தனத்தை தங்கள் மூலமாக நான் கண்டிக்க விரும்புகிறேன்.

நீங்கள் (சர்க்கார்) பெறுகிற வருவாய், இது வரையில் பெற்றிருக்கிற வருவாய், இந்த ஆண்டில் கணக்கெடுத்துப் பார்த்தாலும் அல்லது எந்த ஆண்டுக் கணக்கை வேண்டுமானாலும் எடுத்துப் பார்த்தாலும், இந்தத் துரைத்தனம் ஏழை—எளிய மக்கள் தரும் பணத்தை நம்பி நடத்தப்படுகிறதே தவிர, தனியார்களிடத்தில் தொழில்களை விட்டு விட்டபோதிலும், தனியார்களிடத்தில் மோட்டார் போக்குவரத்தை விட்ட போதிலும், செல்வம் குவிந்திருக்கக்கூடிய இடத்திலேயே மேலும் பணம் சேர்ந்து கொண்டிருந்தாலும், போடக்கூடிய வரிகளெல்லாம் மறைமுக வரி என்கின்ற காரணத்தினால், ஏழை மக்கள் பண்டங்களின் பேரில் கொடுக்கிற வரியைக் கணக்கிட்டுப் பார்த்தால், க்ஷேம நல சர்க்காராக இருந்தாலும், அல்லது சோஷலிஸ சர்க்காராக இருந்தாலும் வெட்கப்படவேண்டும். இப்படி மறைமுக வரி நாளுக்குநாள் அதிகம் ஆக ஆக, விற்பனை வரியானது எல்லாவற்றிற்கும் மேலாக 15 கோடி ரூபாய் அளவுக்கு —15·85 கோடி ரூபாய் என்று சொல்லத்தக்க அளவுக்கு— வந்திருக்கிறது. இப்படி விற்பனை வரியைச் செலுத்துகிற மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு செலுத்துகிறார்கள் என்பதையும், மக்களுக்கு வாழ்க்கையில் எவ்வளவு துன்பங்களைக் கொடுத்திருக்கிறோம் என்பதையும் அறியாது அமைச்சர்கள் பேசுகிறார்கள். அதோடு பேசும்போது மற்றவர்களைப் பார்த்து இதற்கு ஏதாவது பரிகாரம் சொன்னார்களா என்று ஒருவரையொருவர் பரிகாரத்தைச் சொல்ல மற்றவர்களைக் காட்டுகிறார்கள். நான் துரைத்தனத்தாரைக் கேட்க விரும்புவது தங்கள் மூலமாக, இந்த விலைவாசி உயர்வைக்

[Sri C. N. Annadurai] [16th March 1960

கட்டுப்படுத்தக் கூடிய உரிமை, கட்டுப்படுத்த வேண்டிய திறமை, கட்டுப்படுத்த வேண்டிய கடமை, யாரைச் சேர்ந்தது? யாரைப் போய்க் கேட்கச் சொல்லுகிறீர்கள்? யாரைக் கேட்டால் விலைவாசி குறையும்? இந்தத் திக்கில் இருக்கிற விலைவாசியைக் கட்டுப்படுத்தக் கூடிய இடம் என்று எங்கே கை காட்டுகிறீர்கள்? விலைவாசிகள் கட்டுப்படுத்தப்படும், விலைவாசிகள் கட்டுப்படுத்தப் டும் என்று இந்த மாமன்றத்தில் கேட்கப்பட்ட நேரத்திலெல்லாம் வாக்குறுதி தரப்பட்டு, நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம், நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்லி, அவ்வப்போது கொடுக்க வைத்துக்கொண்டிருக்கிற புள்ளி விவரங்களைக் காட்டி ஜால வேடிக்கை நடத்தப்படுகிறதும், விலைவாசி இறங்கி வருகிறது, இறங்கு முகமாக விருக்கிறது, இறங்கியே விட்டது, எதிர் பார்த்ததைவிட இறங்கி விட்டது என்று பேசுவதும், இதையெல்லாம் கண்டு நெஞ்சில் கை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற மக்கள் நிம்மதி அடைந்து விடுவார்களா? விலைவாசிகள் ஏறிப் போகுமானால் கூலியை அதிகப்படுத்தவேண்டுமென்று சொல்லும்போது, சம்பளத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று சொல்லும்போது, கூலி அதிகம் கொடுப்பதாலும், சம்பளம் அதிகம் கொடுப்பதாலும், விலைவாசிகள் மேலும் ஏறுகிறது என்று விலைவாசியை காரணமாகக் காட்டி தடுத்து நிறுத்தப் பயன்படுகிறதே தவிர, எந்த இடத்தில் நீங்கள் முயற்சி எடுத்து விலைவாசிகளைக் குறைத்துக் கட்டுப்படுத்தினீர்கள்? இதற்காகப் போடப்பட்ட கமிட்டிகள், ஏற்படுத்தப்பட்ட குழுக்கள் எடுத்துச் சொன்ன யோசனைகளை எந்த அளவுக்கு எடுத்துக் கொண்டீர்கள்? மத்திய சர்க்காரினால் அசோக் மேத்தா கமிட்டி என்ற ஒரு குழு நியமிக்கப்பட்டு, விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்கள் தந்த சில யோசனைகளையாகிலும் இந்த சர்க்காரும், மத்திய சர்க்காரும் எடுத்துக்கொண்டார்களா என்று அறிய விரும்புகிறேன். நீங்கள், செய்து பார்க்கத் தவறி விட்டோம் என்று கை விரிக்கப் போகிறீர்களா? அல்லது கமிட்டியால் சொல்லப்பட்டவைகள் நடைமுறைக்கு ஏற்றதாக இல்லை என்று குழுவிலிருந்தவர்களைக் குற்றம் சாட்டப் போகிறீர்களா? அல்லது மக்கள் கூக்குரல் இருந்தது, குழு போட்டோம், இப்போது மக்கள் அடங்கி விட்டார்கள், ஆகையால் குழுவைப் பற்றி கவனிக்கவில்லை என்று தந்திரமாய்ப் பேசப் போகிறீர்களா என்று அமைச்சரவையிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன், தங்கள் மூலமாக. இந்த அமைச்சரவை விலைவாசிகளைக் கட்டுப்படுத்த, விலைவாசிகளை மட்டப்படுத்தத் தவறிவிட்டார்கள் என்று மூன்றாவதாக நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஆக நான் மூன்று குற்றச்சாட்டுகளை இந்த அமைச்சரவையின் பேரில் சாட்டுகிறேன். தனியார் துறைக்கு எல்லாத் தொழில்களையும் ஒதுக்கி, பெரிய பெரிய தொழில்களையெல்லாம் தனியார் துறைக்கு ஒதுக்கி, சர்க்கார் கத்தாழை நாரும், பனை ஓலையும், மண்பாண்டமும்தான் எங்கள் தொழில் என்று சொல்வது முதலாவது குற்றச்சாட்டு. திட்டமிடுகிற நேரத்தில் இவ்வளவு செலவழிக்கப் போகிறோம் என்று ஆசை காட்டி, திட்டமிட்டதில் குறைத்துச் செலவழித்து மக்களுக்கு

நம்பிக்கை துரோகம் செய்வது இரண்டாவது குற்றச்சாட்டு. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்வதாக வாக்களித்து விட்டு, எந்த விதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளாமல் இந்த இடத்தில் சமயத்திற்குத் தகுந்தபடி பேசி, கடைசியில் விலைவாசிகள் இன்னும் கட்டுப்படுத்தப்படாத நிலையில் வைத்திருப்பது மூன்றாவது குற்றச்சாட்டு. இப்படி இந்த மூன்று குற்றச்சாட்டுகளை இந்த அமைச்சரவையின் பேரில் நான் சுமத்த விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் நான் சர்க்கார் கெஜெட் பதிவில்லாத ஊழியர்களைப்பற்றி பேசினால், நம்முடைய அமைச்சரவை, நாங்கள் அவர்களைத் தூண்டி விட விரும்புகிறோம், நாங்கள் அவர்களை எங்கள் கட்சியில் சேர்த்துக்கொள்வதற்காக எடுத்துச் சொல்வதாக உடனே துள்ளி எழுகிறார்கள். நாங்கள் யாரிடத்திலும் போகக் கூடாது. மாணவர்களிடத்தில் போகக் கூடாது, காரணம் அவர்களுடைய படிப்புக் கெட்டுவிடும்; தொழிலாளர்களிடையே போகக் கூடாது, ஏனென்றால் உற்பத்தி பாதிக்கப்பட்டு விடும்; முதலாளிகளிடம் போகக் கூடாது, ஏனென்றால் நீங்கள் அங்கே ஏராளமாக இருக்கிறீர்கள்; சர்க்கார் ஊழியர்களிடம் போகக் கூடாது, ஏனென்றால் அவர்கள் கட்சிகளில் சேரக் கூடாது; கிராம உத்தியோகஸ்தர்களிடம் சென்றால். . . . .

Sri M. C. MUTHUKUMARASWAMY : On a point of information Sir, கனம் அங்கத்தினர்கள் பேசும்போது, அவர்கள் எவ்வளவு நேரம் பேச வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால் கட்சித் தலைவர்கள் பேசும்போது அவ்வாறு நேரத்தை நீங்கள் தெரிவிக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கியிருக்கிறீர்கள், அவர் எப்போது பேச ஆரம்பித்தார், அவர் இன்னும் எத்தனை நிமிஷங்கள் பேசுவார் என்று அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : இரண்டு தலைவர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் 40 நிமிஷங்கள் ஒதுக்கினேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களுக்கு 40 நிமிஷங்கள் ஒதுக்கினேன். அவர் 40 நிமிஷம் பேசினார். ஸ்ரீ அண்ணாதுரை அவர்களுக்கும் 40 நிமிஷங்கள் ஒதுக்கியிருக்கிறேன். அவர் இதுவரை 30 நிமிஷம் பேசியிருக்கிறார். அவருக்கு இன்னும் 10 நிமிஷங்கள் இருக்கின்றன.

The Hon. Sri C. SUBRAMANIAM : If the hon. Member wants more time, he can have it. I have no objection.

DEPUTY SPEAKER : The Leader of the House says that the hon. Member may take more time, if he likes. He may continue.

Sri C. N. ANNADURAI : நாங்கள் என்.ஜி.ஓ.-க்களைப் பற்றிப் பேசினால் அவர்களுடைய பிரச்னையை நாங்கள் அரசியல் காரியத்திற்குப் பயன் படுத்துவதாக கனம் அமைச்சர்கள் கருதத் தேவையில்லை. நான் கள்ளம் கபடமின்றி தெளிவாக விளக்க விரும்புகிறேன். இந்த சர்க்காருக்குச் சங்கடம் கொடுக்கவேண்டுமென்ற

[Sri C. N. Annadurai] [16th March 1960

அவசியம் எங்களுக்கு இல்லை. இங்குள்ள எதிர்க் கட்சியினர் ஆளும் கட்சியினருக்குச் சங்கடம் கொடுக்க எப்போது விரும்பு வார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். உங்கள் கட்சியிலுள்ள வர்கள் 150 பேர்களாகவும் எதிர்க் கட்சியினர் 140 பேர்களாகவும் இருக்கும்போது, சங்கடம் கொடுத்து உங்கள் ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்ற நப்பாசை அரசியல் கட்சிகளுக்கு சகஜமாக ஏற்படும். இன்று நீங்கள் பிரும்மாண்டமான பலத்துடன் இருக்கிறீர்கள்; இந்நிலையில் எதிர்க் கட்சிக்காரர்கள் குற்றச் சாட்டுகள் சொல்லும்போது, அரசியல் காரியத்திற்காக அவர்கள் அவ்வாறு குற்றம் சாட்டுகிறார்கள், பிரச்னையை அரசியல் காரியத் திற்கு அவர்கள் பயன் படுத்துகிறார்கள் என்று நீங்கள் சொல்வது, உங்களிலேயே சில பேர்களிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லையோ என்ற ஐயப்பாட்டை எனக்கு ஏற்படுத்துகிறது. எனவே நாங்கள் என்.ஜீ.ஓ.-க்களைப் பற்றிப் பேசும்போது அரசியல் காரியத்திற்காக நாங்கள் பேசுவதாக நீங்கள் அருள்கூர்ந்து கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். என்.ஜீ.ஓ.-க்களின் பிரச்னை நீண்ட நாட்களாகவே, ஊறுகாய்ப் பானையில் நீண்ட நாட்கள் போடப் பட்ட ஊறுகாயைப் போல இருந்து வருகிறது. அந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், இந்த அமைச்சரவை மட்டு மன்றி இதற்கு முன்பிருந்த அமைச்சரவைகளும் அவ்வாறுதான் நடந்துகொண்டிருக்கின்றன. ஊறுகாய்ப் பானை என்ற வார்த்தைகளை நான் வெறும் சொல் அலங்காரத்திற்காகச் சொல்ல வில்லை. ஊறுகாய்ப் பானையில் இருக்கும் ஊறுகாய்க்கு ஆரம்பத்தில் சுவை இருக்கும். ஆனால் நாளாக நாளாக அதில் இருக்கும் எண்ணெய் வற்றிப்போவதன் காரணமாக அதன் சுவை குறைந்துவிடும். என்.ஜீ.ஓ.-க்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தார் தாங்கள் செய்யவேண்டிய காரியத்தைக் காலா காலத்தில் செய்திருப்பார்களானால், செய்வதாக வாக்களித்தி ருப்பார்களானால், அளித்த வாக்குறுதியைத் தக்க விதத்தில் நிறை வேற்றியிருப்பார்களானால், உண்மையிலேயே, பக்குவப்படுத்தப் பட்ட ஊறுகாய் பயன்படுவது போல நல்ல பயன் ஏற்பட்டி ருக்கும்; உங்கள் திட்டங்கள் நன்றாக நிறைவேறுவதற்கு அனுகூலமான பலன் ஏற்பட்டிருக்கும். ஆனால் என்.ஜீ.ஓ.-க்கள் ஊதிய உயர்வு கோரிக் கிளர்ச்சி செய்யும்போதெல்லாம் கனம் அமைச்சர்கள் அவர்களைக் கண்டிப்பதிலும் அவர்களுக்குப் பக்கத்தில் இருக்கும் அரசியல் கட்சிகளைக் குறைகூறுவதிலுமே தங்கள் காலத்தைக் கழித்துவிட்டு, நீண்ட காலமானதும் '5 ரூபாய் கொடுக்கிறோம், 10 ரூபாய் கொடுக்கிறோம்' என்று சொல்கிறார்கள். இதன் காரணமாக, ஊறுகாய்ப் பானையில் எண்ணெய் வற்றிப்போய் ஊறுகாய் உலர்ந்துபோய் பயனற்றதாகப் போய்விடுவதைப் போல, நீங்கள் தரும் பணம் பயன்படுவதில்லை; விலைவாசிகள் மறுபடியும் ஏறிவிடுகின்றன. இவர்களுடைய சம்பளத்தைப் பற்றி இதுவரை ஏற்படுத்தப்பட்ட கமிட்டிகள் என்ன கூறியிருக்கின்றன என்று நான் இது சம்பந்தப்பட்ட ஏட்டில் பார்த்தேன்.

"All the Pay Commissions instituted by the Central and State Governments, including the Islington Commission (1912-13), Lee Commission (1923-24), Varadachariar Commission (1946-47),

16th March 1960] [Sri C. N. Annadurai]

Mysore Pay Commission, Bihar Pay Revision Committee (1947), etc., as well as the Labour Conference, 1957, are of unanimous opinion that the emoluments of the low-paid Government employees should be so as to ensure them a living wage, consistent with the rise in price index of essential commodities and that Government servants should be reasonably placed above want, so as to enable them to be free from cares and anxieties and to continue to be efficient during the tenure of their service. ''

நம்முடைய துரைத்தனத்தில் பணியாற்றுபவர்கள் எவ்வளவு திறமைசாலிகள் என்பதைக் குறிப்பிட்டு, மந்திரிக்கு மந்திரி போட்டி போட்டுக்கொண்டு அவர்களைப் பாராட்டுகிறார்கள். இதை நான் குற்றம் குறையாகச் சொல்லவில்லை. நாங்களும் பாராட்டுகிறோம். ஆனால் நாங்கள் பாராட்டுவதைவிட, அமைச்சரவையில் உள்ளவர்கள் பாராட்டுவது, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாராட்டுவது அவர்களுக்கு மிகவும் தேவை. அதை உணர்ந்து பாராட்டுகிறார்கள். அதனால் அந்த உத்தியோகஸ்தர்கள் உற்சாகம் பெறுகிறார்கள். அந்த உற்சாகத்தினால் கடினமான வேலைகளை அவர்கள் மன நிம்மதியோடு செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால், அவர்கள் தங்களுக்குத் தேவையான அளவு ஊதியம் கேட்பது, கௌரவத்திற்காக அல்ல. 'நான் இவ்வளவு சம்பாதிக்கிறேன்' என்று பெருமைப்பட்டுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் கேட்கவில்லை. அந்த அளவாவது கிடைத்தால்தான் வாழ்க்கை நடத்த முடியும் என்பதால் கேட்கிறார்கள். அதை கனம் அமைச்சர்கள் ஒவ்வொரு ஆண்டும் தள்ளிப்போட்டுக்கொண்டு போவதும், அதைப்பற்றி வேறு எந்த கட்சியாவது பேச ஆரம்பித்தால் உடனே அச்செய்கைக்கு அரசியல் நோக்கங்களைக் கற்பிப்பதும் முறையாகாது என்று தங்கள் மூலமாக கனம் அமைச்சர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நமது நிதி அமைச்சர் 1957-1958-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒரு அருமையான யோசனையை, ஒரு அருமையான திட்டத்தைக் குறிப்பிட்டார். சிக்கன முறைகளைக் கையாள வேண்டுமென்ற நோக்கத்துடன் சர்க்கார் நிர்வாக இயந்திரத்தில் செய்ய வேண்டிய மாறுதல்களைப்பற்றி ஆலோசனைகள் கூறுவதற்கென ஒரு குழு நியமிக்கப்படும் என்றும், அக்குழு ரிப்போர்ட் சமர்ப்பித்தவுடன் அதை அமைச்சர்கள் மேற்பார்வை செய்து உடனடியாக உத்தரவுகள் பிறப்பிப்பார்கள் என்றும், அந்த முறையில் செலவு ஓரளவு குறையக்கூடும் என்றும், ஆனால் எந்த அளவுக்குக் குறையும் என்பதை அப்போதே மதிப்பிட்டுச் சொல்ல முடியாது என்றும் கனம் அமைச்சர் அப்போது குறிப்பிட்டார். அந்தத் திட்டம் என் இன்னும் நிறைவேற்றப்படவில்லை? மேலும், அண்டை ராஜ்யமான ஆந்திரத்தில் அந்த ராஜ்ய நிதி அமைச்சர் 1959-1960-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

'' The recommendations already finalized by the Committee envisage an ultimate permanent recurring saving of Rs. 33·70 lakhs per annum on establishment charges.''

அந்த ராஜ்ய நிதி அமைச்சர் ஸ்ரீ பிரும்மானந்த ரெட்டி 1959-60-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இவ்வாறு சொல்லி யிருக்கிறார். அதிலும், வாக்களித்தபடி அவர்கள் நடக்கவில்லை என்பதைக் குற்றமாகச் சொல்ல விரும்புகிறேன்.

கனம் அமைச்சர்கள் ஆசைகாட்டிப் பேசுவதை எடுத்துக் காட்ட அதிக உதாரணங்கள் தேவையில்லை. சேலத்தில் வரவேண்டும் என்று நாட்டு மக்கள் ஆவல் கொண்டிருந்த, பல்வேறு அரசியல் கட்சிகளும் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற் பட்டவர்களும் வரிந்து வரிந்து பேசிக்கொண்டிருந்த சேலத்து எஃகுத் தொழிற்சாலை அங்கே உருவாகும் என்று சொல்வதற்கு இவர்களிடம் இன்னும் ஆதாரம் இல்லை. நாம் நல்லெண்ணத்தைத் தான் ஆதாரமாக நம்பிக்கொண்டிருக்கிறோம். நமது அமைச்சர் கள் டெல்லிக்குப் போய்வரும் பிரயாணங்களின் எண்ணிக்கை யைத்தான் ஆதாரமாகக் காட்டுகிறார்கள். டெல்லிக்காரர் களுக்கும் இவர்களுக்கும் சினேகிதம் இருக்கிறது என்று அரசியலில் பேசப்படுகிற வதந்திகளைத்தான் ஆதாரமாகச் சொல் கிறார்களே தவிர, நமக்குக் கிடைக்கும், கிடைத்தாகவேண்டும் என்று டெல்லிக்காரர்களைத் தட்டிக் கேட்கத்தக்க துணிவை இந்தத் துரைத்தனத்தார் இன்னும் பெறவில்லை. அண்டை ராஜ்யமான ஆந்திர ராஜ்யத்தின் அமைச்சர்கள், மத்திய சர்க் காரின் மூலம் தங்கள் ராஜ்யத்திற்குக் கிடைக்கக்கூடிய வசதிகளை மத்திய சர்க்காரிடமிருந்து பெறுவதற்காக, மத்திய சர்க்கார் மூலம் தங்கள் ராஜ்யத்தில் ஏற்படவேண்டிய தொழிற்சாலைகளை மத்திய சர்க்கார் தக்க விதத்தில் ஏற்படுத்தவில்லை என்று மத்திய சர்க்காரின் மீது குற்றம் சாட்டத்தக்க துணிவைப் பெற்றிருக் கிறார்கள். நமது ராஜ்ய அமைச்சர்கள் அதை கவனிக்கவேண்டும். ஆனால் நமது மாநில அமைச்சர்கள் எப்போதும் மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள். நமது ராஜ் யத்தில் மத்திய அரசாங்கத்தின் மூலம் நிறைவேற்றக்கூடிய திட்டங் களைப்பற்றி நாங்கள் பேசும்போதெல்லாம் இவர்கள் மத்திய சர்க்கா ருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள். மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசும் ஒரு மாநில துரைத்தனம் இருக்கிற தென்றால், அது சென்னை மாநில துரைத்தனமே தவிர வேறு எந்த மாநில துரைத்தனமும் அல்ல. பிற மாநில துரைத்தனங்கள் எல்லாம் மத்திய சர்க்காருடன் சண்டைபோட்டும் போராடியும் தங்கள் மாநில நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்கின்றன. ஆனால் இந்த மாநில அமைச்சர்களோ, ஐந்து வருஷக் குத்தகைக்கு மத்திய சர்க்காரிலிருந்து மாநில சர்க்காருக்கு அனுப்பப்பட்டவர்கள் போல, எப்போதும் மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள். நான் இப்போது நேற்று முன்பு வந்த ஒரு பத்திரிகைச் செய்தியை இங்கே எடுத்துச்சொன்னால், 'பத்திரிகைச் செய்தியை கவனிக்கா தீர்கள்' என்று கனம் நிதி அமைச்சர் ஒரேயடியாகச் சொல்லி விடுவார். 'சேதுசமுத்திரத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது' என்று டெல்லியில் மத்திய சர்க்காரில் இருக்கிற

16th March 1960] [Sri C. N. Annadurai]

பொறுப்புள்ள ஒரு அமைச்சர் சொல்லியிருக்கிறார். சேதுசமுத்திரத் திட்டம் 'இல்லை' என்று அது சம்பந்தப்பட்ட ஒரு அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். இப்போது உங்கள் நிலைமையை தயவுசெய்து பார்க்கவேண்டும் என்று நான் மறுபடியும் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நமக்கு சேது சமுத்திரத் திட்டம் இல்லை. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் தோண்ட நம்மிடம் வகை இல்லை. இங்கே அடாமிக் ப்ளாண்ட் வைக்க நமக்கு அனுமதி கிடைக்கவில்லை. நாமே அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்தலாம் என்றால் அதற்கு நமக்கு வழியில்லாத காரணத்தினால் அது தனியார் துறைக்குப் போய்விட்டது என்று கனம் அமைச்சர் சொல்கிறார். தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக ஆக்குவதற்குரிய ஆரம்பச் செலவுகளுக்கு மத்திய சர்க்கார் நிதி கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். மத்திய சர்க்கார் என்ன தருவார்கள் என்பது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் பேசிமுடித்த பிறகுதான் தெரியும் என்று சொல்லப்பட்டது. இப்படியே ஒவ்வொன்றும் எந்த நிலையில் இருக்கிறது என்று பார்த்துத் தெரிந்துகொண்ட பிறகு, உங்களிடம் இருப்பது என்ன என்று அறிந்துகொள்ள நான் ஆவலாக இருக்கிறேன். மிச்சம் உங்களிடம் விடப்பட்டிருப்பது என்ன என்று தெரிந்தால் இந்தத் துரைத்தனத்தாரின் திறமையையோ இந்த துரைத்தனத்தார் செய்துள்ள காரியங்களையோ மதிப்பிட முடியும். அதற்கு வழி வகை இல்லாதபோது, 'நாங்கள் ஏராளமான காரியங்களைச் செய்து விட்டோம், எத்தனையோ சாதனைகள் செய்துவிட்டோம்' என்று இந்தத் துரைத்தனத்தார் சொல்வது, அவர்களுக்கு இன்றைக்கு இருக்கும் எண்ணிக்கை பலத்தை வைத்துக்கொண்டு பேசுவதாகுமே தவிர, வேறொன்றும் ஆகாது.

சென்னைக் கார்ப்பொரேஷனைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அதனுடைய நிர்வாகத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் மயிலாப்பூர் தொகுதி அங்கத்தினர் ராமசாமி அவர்கள் "இப்போது கார்ப்பரேஷன் நிர்வாகத்திலே இருப்பவர்கள் 'அமெச்சூர் பாலிடிஷியன்ஸ்'", என்று சொன்னார்கள். நான் அதை ஒப்புக்கொள்ளுகிறேன். "அமெச்சூர் பாலிடிஷியன்ஸ்" என்றால் அரசியலில் லாபத்தை பயன்படுத்திக் கொள்ளத் தெரியாதவர்கள் என்று பொருள். அதைச் சொன்னவர் எப்படிப்பட்டவர் என்பதைக் காண இந்த மாகாணத்து சட்ட மன்ற உறுப்பினர்களைப் பற்றிய "who is who" என்ற புஸ்தகத்தைப் பார்த்தேன். அதிலே நம்முடைய கனம் அங்கத்தினரைப் பற்றிப் பார்த்தால் "Hobby Politics" என்று கூறப்பட்டிருக்கிறது (சிரிப்பு). பாலிடிக்ஸை ஹாபியாக வைத்திருக்கிறவர் மற்ற அரசியல்வாதிகளை எடை போடுகிறார் என்றால் அதை அப்படியே சிரித்து விட்டு விட வேண்டியதே தவிர அதைப்பற்றிப் பொருட்படுத்த வேண்டியதில்லை.

மற்றும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்ற புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டிச் சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் நிதியமைச்சர் அவர்கள் தம்முடைய உரையிலே

[Sri C. N. Annadurai] [16th March 1960

பதில் சொல்லும் நேரத்திலே மற்றொரு வகையைக் கையாள்கிறார் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எந்தெந்த பிரச்னைகள் கிளப்பப்படுகின்றனவோ அவைகளை எடுத்து வைத்துக்கொண்டு பேசுவது ஜனநாயக முறைக்கு ஒத்ததாகும். ஆனால் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக நான் கவனித்து வருகிறேன்—எந்தப் பிரச்னைகள் கிளப்பப்பட்டனவோ அவைகளையெல்லாம் அப்படியே விட்டு விட்டு வேறு புதிய பிரச்னையைத் தம்முடைய பதிலிலே சொல்லுகிறார். அப்போது நாங்கள் எழுந்து குறுக்கிட்டால் சபையின் ஒழுங்கு முறைக்குப் பாதகமானது என்று தாங்கள் ஆணையிடுகிறீர்கள். தங்கள் ஆணைக்குக் கட்டுப்படுகிற நாங்கள் அமர்ந்து விடுகிறோம். அமைச்சர் அவர்களுடைய வாதங்கள் கேட்பாரற்றுப் போகின்றன. முதல் தடவை நான் எடுத்துச் சொன்ன பிரச்னைகளை விட்டு விட்டு என்னுடைய பூர்வோத்திரத்தை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஆராய ஆரம்பித்தார்கள். என்னுடைய பூர்வோத்திரத்தையோ, எங்கள் கழகத்தின் பூர்வோத்திரத்தையோ ஆராய்வது என்பதற்காக ஒரு 4 மணி நேரம் ஒதுக்க இந்தச் சபையின் ஒழுங்கானது வழி வகுக்குமானால் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இந்தச் சபையில் அல்லாமல் வேறு எந்தச் சபையிலாவது பேசுவது என்றாலும் தயாராக இருக்கிறேன். ஆனால் எடுத்துச் சொல்லப்பட்ட பிரச்னைகளில் இருந்து நழுவி ஓடுவது, சொல்லப்பட்ட விஷயங்களை நேரடியாகச் சந்திப்பதற்கு வக்கு இல்லாத முறையில் வேறு துறைக்குப் போவது அவ்வளவு சரியல்ல. இந்த ஆண்டிலாவது நிதியமைச்சர் அவர்கள் சொல்லப்பட்ட பிரச்னைகளுக்கு நேரடியாகப் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up. I hope he will finish his speech soon as many hon. Members have to speak to-day.

THE HON. SRI C. SUBRAMANIAM : Let him take a little more time if he wants. I am anxious particularly to have his views with reference to educational matters, particularly with reference to introduction of Tamil as medium of instruction in colleges. Therefore, I do not mind if he takes a little more time. But he should not avoid that issue. That is all what I want.

SRI C. N. ANNADURAI : அமைச்சர் அவர்கள் அளித்த அந்த யோசனைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். மற்றப் பிரச்னைகளைப் பேசிக்கொண்டிருக்கும்போது கல்வியைப் பற்றி மறந்துவிடக்கூடாதே என்று கவனப்படுத்திய அதே நேரத்தில், அதிலே எனக்கும் நிதியமைச்சர் அவர்களுக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நாம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக வழி முறைகளைக் கையாள்வதில் நம் வழக்கமாக இருக்கின்ற—ஆங்கிலத்தில் சொல்வார்கள், "Orthodox economy" என்று—அந்த முறையைக்

16th March 1960] [Sri C. N. Annadurai]

கையாண்டால் கட்டுப்படுத்த முடியாது என்பதை இந்த அமைச்சரவை யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பிரான்சில் என்று கேள்விப்படுகிறேன்—

" In France there is a system of fixing three types of prices :

1. *Target prices* fixed for three to five years in advance;

2. *Indicative prices* revising the target prices from year to year in the light of production and consumption trends;

3. *Campaign prices* announced before the sowing season. Because of this system, agriculturist knows the return he would get."

இதனாலே விவசாயிகளுக்குப் பயிரிடுகிறபோதே தங்களுக்கு என்ன கிடைக்கும் என்ற உத்தரவாதம் கிடைக்கிறது. அந்த உத்தரவாதம் கிடைக்கும் வகையில் இந்த விலைவாசிகளை மூன்று வகையில் பிரிக்கிறார்கள் என்று பிரான்ஸ் நாட்டைப் பொறுத்த வரையில் சொல்லப்படுகிறது. அதே விதத்தில் நம்முடைய நாட்டுக்குத் தேவையான பல பிரச்னைகளை வழக்கமான பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் நமக்குப் பரிகாரங்கள் நிச்சயமாகக் கிடைக்காது. ஆகையால் இந்த அமைச்சரவை, திறமையுள்ள, தீவிரமான, முற்போக்குள்ள—புரட்சிகரமான என்று சொன்னாலும் குற்றமில்லை—வழிகளைக் கண்டு பிடித்து நம்முடைய நாட்டிலே இருக்கின்ற இயற்கைச் செல்வங்களை அவர்கள் வளர்த்துக்கொள்ள ஏற்ற வகையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். அதற்கு நிபுணர்கள் உதவி தேவையென்றால் அவர்களை வரவழைத்துக்கொள்ளக் கூச்சப்படக்கூடாது; கூச்சப்படத் தேவையில்லை. அப்படிப்பட்ட முறையிலே இருக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லுகின்ற நேரத்தில் நாங்கள் சொன்ன குற்றச் சாட்டுகளுக்குப் பதில் சொல்லுவதற்குப் பதிலாக முதலிலே கையாளுகின்ற முறை, "இவர்களெல்லாம் வெள்ளைக்காரனுக்கு அடிமைகள்; வெள்ளைக்கார ஆட்சியை ஆதரித்தவர்கள்" என்று பேசிவிட்டுப் போவது அரசியலுக்குப் பயன்படலாமே தவிர, பிரச்னைகளுக்கு விளக்கமாகாது. சுயராஜ்ய போராட்ட காலத்தில், வெள்ளைக்காரன் ஆதிக்கம் செலுத்திய காலத்தில்கூட 200 கோடி ரூபாய் அளவுக்குத்தான் அவனுடைய மூலதனம் இந்த நாட்டிலே இருந்தது. ஆனால் இன்று, சுய ராஜ்யம் வந்த பிறகு இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் 400 கோடி ரூபாய்க்கு மேல் அவனுடைய மூலதனம் இருக்கிறது. வெள்ளைக்காரன் ஒன்றும் உங்களை விட்டுப்போக வில்லை. வெள்ளைக்காரன் முன்பு கவர்னராக இருந்தான்; கலெக்டராக இருந்தான்; இன்றையதினம் கம்பெனி டைரக்டராக இருக்கிறான். ஆனால் கட்டுக்கு அடங்கியிருக்கிறான் என்று சொல்லலாம். கை குலுக்குகிறான் என்று பெருமைப்படலாம். அவனுடைய விருந்துகளுக்கு அழைக்கப்படுகிறீர்கள் என்று சந்தோஷப்படலாம். வெள்ளைக்கார ஆதிக்கத்தை நீக்கவேண்டுமென்பது சுயராஜ்ய லட்சியமானாலும், சுயராஜ்யத்திற்கு முன்னால் 200 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருந்தார்கள். சுய ராஜ்யம்

பெற்று இந்த 12 ஆண்டு காலத்தில் அவனுடைய மூலதனம் 400 கோடி ரூபாயாக இருக்கிறது. ஆகையால், இந்த வகையிலே கான்ஸ்டபிள் தலையணியிலிருந்து கார்டுகளின் அகல நீளம் வரையில் நீங்கள் எதையும் மாற்றவில்லை; எதையும் மாற்றுவதாக உத்தேசமும் இல்லை.

நான் இந்த அறிக்கையிலே பார்த்தேன். எனக்குக் கொஞ்சம் வேடிக்கையாகவும், சிரிப்பாகவும்கூட இருந்தது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறைந்தது 4 பக்கத்திற்கு மேல் மலத்தைப் பற்றிய பிரச்னை மிக விரிவாகவும், தெளிவாகவும் ஆராயப்பட்டிருக்கிறது. மலத்தைக் கொண்டு என்னென்ன மாதிரியான உரங்கள் தயாரிக்கலாம்; எத்தனை அடி ஆழமுள்ள குழியில் போடலாம் என்பதைப் பற்றியெல்லாம் அதிகமாக ஆராய்ந்திருக்கிறார் நமது நிதியமைச்சர். நான் ஆட்டு இறைச்சியைப் பற்றிச் சொன்னதற்கு "என்னைப் போயா இறைச்சி விற்கச் சொல்லுகிறாய்?" என்றவர் இப்போது மலத்திற்குள் இறங்கி விட்டாரே என்று பரிதாபப்படுகிறேன். நாட்டின் உற்பத்திப் பெருக்கத்திற்கு தேவையான அளவு கம்போஸ்ட் உரத்தைப் பெருக்கிக் கொள்வதைப் பற்றி விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் அவருடைய அறிக்கையிலோ அல்லது அவர் பேசுகின்ற நேரத்திலோ அவற்றைப் பற்றி விரிவாகச் சொல்லியிருந்தாலும் பாதகமில்லை. ஆனால் நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் பொதுவாக எடுத்துக் காட்ட வேண்டியது என்ன? "எங்களுடைய ஆட்சியில் போன ஆண்டை விட இந்த ஆண்டு இத்தனை லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் போகிறோம்; போன ஆண்டை விட இந்த ஆண்டு இத்தனை புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கப் போகிறோம்; சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு எங்களுடைய ஊழியர்கள் மனத் திருப்தியுடன் இருக்கிறார்கள்; சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் நிம்மதி ஏற்பட்டிருக்கிறது; கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விலைவாசி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது; போன ஆண்டை விட இந்த ஆண்டு எங்களுடைய நிதி நிலைமை அதிகமாகியிருக்கிறது", என்பன போன்ற கணக்கைக் காட்டுவார்களா? அல்லது "இத்தனை அடி ஆழத்திலே குழி வெட்டி, மலத்தைப் போட்டு எப்படி எருவாக்குகிறோம்" என்று தெரிவிப்பார்களா? என்று நிதியமைச்சரைக் கேட்க விரும்புகிறேன். நாங்கள் மலத்தைக் கேவலப்படுத்துகிறோம் என்று கருத வேண்டாம். பெரிய ஞானிகள்கூட மும்மலத்தை நீக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஒரு மலத்தையாவது நீக்கி எறியவேண்டுமென்று சொல்லியிருப்பதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். இது ஒரு சர்க்காருடைய திறமையான நிர்வாகத்திற்கு எடுத்துக் காட்டாகாது.

ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையை நாங்கள் பார்க்கிற நேரத்தில் எனக்கு வருகிற எண்ணம்—உண்மையிலேயே நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் நேற்று ஆறு குருடர்கள் போய் யானையைப் பார்த்த கதையைச் சொன்னார்கள். அதை அவர்

16th March 1960] [Sri C. N. Annadurai]

பள்ளிக்கூடத்தில் மாணவராக இருந்தபோது படித்திருப்பார். அது இப்போது இவ்வளவு பெரிய சபைக்குப் பயன்பட்டதற்காக மெத்த மகிழ்ச்சி அடைந்திருப்பார். நான் படித்தது செவிடன் கதைதான். அந்தக் கதையை இங்கே சொல்லவேண்டுமென்று தோன்றுகிறது. ஒரு செவிடன் நோய் வாய்ப்பட்டிருந்த நண்பனைப் போய்ப் பார்க்க இருந்தான். தான் கேட்பது அவன் பதில் சொல்லுவது எப்படியிருக்கவேண்டுமென்று முன்னலேயே எண்ணிப் பார்த்துக்கொண்டான். எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்போம்; கொஞ்சம் சௌகரியம் என்று சொல்லுவார்; நல்லது என்று பதில் சொல்லுவோம். எவ்வளவு சீக்கிரத்தில் தேறுவீர்கள் என்று கேட்போம். விரைவில் தேறிவிடுவேன் என்று பதில் சொல்லுவார். ரொம்ப சந்தோஷம் என்று பதில் சொல்லுவோம் என்று எண்ணிக்கொண்டு அந்த நோயாளியைப் பார்க்கப் போனன். அந்த நோயாளியைப் பார்த்து செவிடன் "எப்படி இருக்கிறீர்கள்" என்று கேட்டதற்கு "இழுத்துப் பறித்துக் கொண்டிருக்கிறேன்" என்று பதில் சொன்னன். உடனே செவிடன், "ரொம்ப நல்லது" என்று சொன்னன். அடுத்த கேள்வி, "எவ்வளவு சீக்கிரத்தில் குணமாகும்?" என்று கேட்டான். "எமன் வர வேண்டியதுதான் பாக்கி" என்று அந்த நோயாளி கூறியவுடன் "ரொம்ப சந்தோஷம்" என்று கூறினன் (பலத்த சிரிப்பு). அப்படி நோயாளியைப் பார்க்கப் போன செவிடன் முறையில் நீங்கள் மக்களைப் பார்க்கிறீர்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN: நான் செவிடனுக இருக்கத் தயார். நீங்கள் நோயாளியாக இருக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI C. N. ANNADURAI: அமைச்சர் அவர்களுடைய பதிலிலே சுவை இருக்கவேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன்—நான் கொஞ்சம் செவிடு (சிரிப்பு). நீங்கள் குருடா? செவிடா? என்பதைத் தீர்மானிப்பதற்காகச் சொல்லவில்லை. மக்களுடைய குரல் சர்க்காருடைய காதில் நோயாளி செவிடன் முறையில் இருக்கக்கூடாது என்பதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

தனிப்பட்ட ஆளினுடைய குருட்டுத்தனம், தனிப்பட்ட 10-30 a.m.
ஆளினுடைய செவிட்டுத்தனம் சமுதாயத்திற்குப் பெரிய நஷ்டம் அல்ல. ஆனல், துரைத்தனத்தார் அப்படியிருந்தால், அது சமுதாயத்திற்கு நஷ்டம். ஆகையால்தான், எனக்கு நேற்று அவர்கள் குருடன் கதை சொன்னவுடனே, கதைகூட இங்கே சொல்லலாம் போலிருக்கிறது, அப்படியானல் செவிடன் கதையொன்று சொல்லலாம் என்று தோன்றியது.

இன்னென்று ஆராய்ந்து பார்த்தேன். நம்முடைய தொழிலமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் இப்படி ஒரு கதையை டில்லிப் பாராளுமன்றத்தில்கூட சொல்லியிருக்கிறர். அது எனக்கு நினைப்புக்கு வந்தது. நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும் நேரத்தில் இருக்கின்றவற்றை எடுத்துக் காட்டியிருக்கிறர்கள்; இல்லாதவற்றை விட்டு விட்டிருக்கிறர்கள்.

[Sri C. N. Annadurai] [16th March 1960

அங்கே தொழிலாளர் சம்பந்தப்பட்ட ஒரு அறிக்கைப் புத்தகம் வெளியிட்ட நேரத்தில் நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள்—அந்த இடத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார்—அதை எடுத்துக்காட்டி பாராளுமன்றத்தில் சொன்னதாவது :

" You have before you a very valuable booklet which has got a fair get-up. It has got good pictures. "

ஆனால், இதைப் பார்த்ததும் எனக்கு ஒரு கதை கவனத்திற்கு வருகிறது " என்று அப்போதே அவர் கதை சொல்ல ஆரம்பித்தார். அவ்வளவு சின்ன வயதில் கதை சொன்னவர், இப்பொழுது வயது ஏறியிருக்கும்போது கதை சொல்கிற சுபாவம் அவருக்கு அதிகப்பட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. அவர் ஒரு கதை சொன்னார்.

" ஒரு பாதிரி ஆண்டவனை மறுக்கும் ஒருவனை அழைத்துக்கொண்டுபோய், மாதா கோயிலில் இருக்கும் படங்களைக் காட்டி, ' ஆண்டவனைக் கும்பிட்டதினால், நடுக் கடலில் போய்க்கொண்டிருக்கும் கப்பல் காப்பாற்றப்பட்டது; எத்தனை பேர் உயிர் தப்பினார்கள் பாருங்கள் ' என்று சொன்னார். ' இப்போது தெரிகிறதா ஆண்டவனைத் தொழுவதினால் வரும் நன்மை? ' என்று அவர் கேட்டார். அதற்கு அவன் சொன்ன பதில்—' நீங்கள் இதைத்தான் காட்டினீர்களே தவிர, தொழுதுவிட்டும் மூழ்கிப் போனவன், தொழாமல் தப்பித்துக்கொண்டவன் ஆகிய இவ்விருவருடைய படங்கள் எங்கே? ' என்று கேட்டான். அதையேதான் நான் கேட்க விரும்புகிறேன் என்று சொல்லிவிட்டு, நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் அப்பொழுது கேட்டார்கள்—

" Where are the pictures of those homeless workers living on the pavements and in verandahs under very difficult conditions of life " என்று.

" எங்கே இப்பொழுது? " என்று நான் கேட்கிறேன்.

" Where are the pictures of those, who are not able to get accommodation in hospitals for medical treatment? If this brochure had contained pictures not only of the houses provided but also of those who are without houses, thus showing the magnitude of the problem, then the impression would have been correct. This is a sort of *suggestio falsi.* "

இதுதான் இந்த நிதி நிலை அறிக்கையைப்பற்றி மிகப் பொருத்தமான, மிகப்பலமான, ஆனால் வலுவற்ற கட்சியினுடைய துணையைக் கொண்டு நான் சொல்வது ஆகும். கட்சி வலுவற்றது என்ற காரணத்தால் குற்றச்சாட்டுக்களும் வலுவற்றன என்று வாதாடுவார்களானால், அது அரசியலும் அல்ல, அறமும் அல்ல, அது நம்முடைய நாட்டை ஈடேற்றவும் செய்யாது. ஆகவே, செய்த காரியம், சாதிக்கப்போவதாகச் சொன்ன காரியத்தைவிட அளவில் குறைவுதான்; தரத்திலும் குறைவாக இருக்கிறது. தரத்திலே குறைவு என்பதற்காக சமுதாய நலத் திட்டம் எப்படி அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுகிறது என்பதைப் பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். ' இல்லை '

16th March 1960] [Sri C. N. Annadurai]

என்று பல உறுப்பினர்கள் வாதாடினார்கள். ஆனால், உண்மையிலேயே நம்முடைய அமைச்சரவைக்குச் சொல்லிக் கொள்வேன்—என்னுடைய கட்சியிலே ஒருவர் இருவர் தாங்கள் இருக்கும் தொகுதியிலே சமுதாய நலத் திட்ட அதிகாரிகள் சங்களுடன் ஒத்துழைத்ததாக மகிழ்ச்சியுடன் என்னிடத்தில் தெரிவித்தார்கள். நான் அதை மகிழ்ச்சியாக வரவேற்றேன். ஆனால், அதே முறையில் எல்லா இடங்களிலும் இல்லை என்பதை நீங்கள் கண்காணித்துப் பார்த்தால்தான் தெரியும். இல்லையென்றால், அதற்கென்று செலவழிக்கப்படும் பெருந் தொகை, பெரும் அரசியல் விளம்பரத்திற்காகத்தான் பயன்படும். அரசியல் விளம்பரம் என்றால், அந்த விளம்பரம் தகுந்த பலனைத் தர முடியாத விளம்பரமாகும் என்பதைக் கவனிக்க வேண்டுகிறேன். அதில் உங்கள் தரப்பிலுள்ள உறுப்பினர்கள் நேற்றையதினமோ அதற்கு முந்திய தினமோ குறிப்பிட்டார்கள்—'சமுதாய நலத் திட்ட வேலையில் ஈடுபட்டிருக்கும் கிராம நல ஊழியர்களில் பல பேர்கள் மாற்றுக் கட்சியினராகவும் இருக்கிறார்கள், அவர்களும் அதிலே அக்கறை வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள்' என்று. நான் 'இல்லை' என்று மறுக்கவில்லை. அப்படிப்பட்ட வகையிலே சில பேர் எங்களுடைய கட்சிக் கொள்கை நல்லது என்று கூறுகிறார்கள். ஆனால், அவர்கள் செய்கின்ற காரியத்தை ஒழுங்காக முறைப்படி செய்கிறார்களே தவிர, கட்சியில் பற்று இருக்கிறது என்பதற்காக நாங்கள் வைத்திருக்கும் 'அறிவகத்'திற்குப் பக்கத்தில் ஒரு அலங்கார டாங்கை அவர்கள் கட்டிக்கொடுத்துவிட முடியாது. நாங்கள் அப்படிப்பட்ட கேவலமான காரியங்களுக்கு எங்களுடைய செல்வாக்கை எப்பொழுதும் பயன்படுத்திக்கொள்ள மாட்டோம். நாங்கள் சொன்னதைக் கேட்கக்கூடிய அமைச்சரவை இருந்த காலத்திலேயே நாங்கள் அப்படிப் பயன்படுத்திக் கொண்டது இல்லை. ஆகையால், இவ்வளவு பணம் செலவாகும் ஒரு பெரிய துறையை நாம் ஒரு தேசியத் துறை என்று கருதி, அதிலே எல்லாக் கட்சிகளும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு நல்ல வழிவகைகளைச் செய்து காட்டவேண்டுமே தவிர, அவ்வளவு குறை சொல்கிறார்ளே, குறை சொல்கிறார்களே என்று சாதாரணமாக வார்த்தையைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருப்பதில் ஒரு பயனும் இல்லை என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : I hope the hon. Member will finish his speech within two minutes. He has taken more time. There are other hon. Members to speak.

SRI C. N. ANNADURAI : I will finish within five minutes.

SRI S. NAGARAJA MONIGAR : On a point of information, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM : கதை சொல்வதிலேயே பாதி நேரம் போய்விட்டது.

DEPUTY SPEAKER : There can be no point of information. I hope the hon. Member will finish his speech within five minutes.

[16th March 1960

SRI C. N. ANNADURAI : கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையிலும், நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்ற காரணத்தினாலே, 'இந்தப் புண்ணியவான்கள் வந்த பிறகு இப்படி ஆய்விட்டது' என்றெல்லாம் நம்முடைய கனம் அங்கத்தினர்களிலே பல பேர் சொன்னார்கள். அவர்கள் பொதுவாகக் குறிப்பிட்டது,—மவுண்ட் ரோடினுடைய நிலைமையையும், பூந்தமல்லி ரோடினுடைய நிலைமையையும் பற்றி. இந்த இரண்டு சாலைகளினுடைய பராமரிப்புக்காக சர்க்கார் தருகின்ற தொகை 32,000 ரூபாய். இந்த 32,000 ரூபாய் இரண்டு ரோடுகளுக்காக மட்டும் நீங்கள் ஒதுக்கி விட்டு, அதன் மூலமாக இந்தப் பாதைகள் அப்படியே செப்பனிடப்படமுடியும் என்று கருதுவீர்களானால், உண்மையிலேயே நாம் ஒருவரையொருவர் ஏமாற்றிக் கொள்ளத்தான் அது பயன்படும். அங்கே கார்ப்பரேஷனிலிருந்து திட்டவட்டமாக கோரிக்கைகளை அவர்கள் தொடர்ந்து அனுப்பிக்கொண்டு வருகிறார்கள். என்னுடைய கழகம் அங்கே ஆட்சிக் கழகமாக வருவதற்கு முன்பிருந்தே, காங்கிரஸ்காரர்கள் அங்கு ஆட்சியில் இருந்த காலத்திலிருந்தே கோரிக்கைகள் அனுப்பியிருந்தார்கள். மோட்டார் வெகிகிள்ஸ் டாக்சேஷன் என்ற வகையில் பெரும் தொகையை நீங்கள் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு நீங்கள் தரும் அந்தப் பிச்சைக் காசு முறை அடியோடு நீக்கப்பட வேண்டும். நீங்கள் பெறுகின்ற அந்த வரியில் குறைந்தது 60 சத விகிதம்—தாராள மனப்பான்மையோடு இருந்தால் 75 சத விகிதம்—நீங்கள் கார்ப்பரேஷனுக்குக் கொடுத்தால், நிச்சயமாக அவர்கள் அந்தப் பாதைகளைச் சரியாக வைத்திருக்க முடியும். அது மட்டுமல்லாமல், கார்ப்பரேஷனிலிருந்து போட்டனுப்பும் எந்தத் திட்டத்திற்கும் சர்க்கார் உடனடியாக பதிலையோ அங்கீகாரத்தையோ அவர்களுக்குத் தராமல் இருப்பதால்தான் பல விஷயங்கள் இன்றைக்கு அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக, ஒன்றிரண்டு சொல்வேன். கோடம்பாக்கம், மேற்கு மாம்பலத்திலே புதிய வீடுகள்—நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் Satellite town அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னார்களே, அது போல—ஆயிரம் ஏக்கர் நிலத்திலே கட்டவேண்டுமென்று சொன்னார்கள். கார்ப்பரேஷன் அதற்காகத் திட்டம் இட்டிருக்கும் நேரத்தில், அமைச்சர் அறிவார்கள், இதைப்பற்றி சிந்திக்கும்போதே அதை போலியாக முதலாளிகள் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி போலியாக விற்பனை செய்து விலைவாசிகளை ஏற்றுவார்கள் என்று அறிந்துதான் இந்தியத் துணைக்கண்டப் பிரதம மந்திரி ஜவர்ஹலால் நேரு அவர்கள் கூட சென்ற திங்கள் ஒரு சுற்றறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். நகராட்சி மன்றங்களைச் சேர்ந்தவர்கள் கண்ணுக்கு தெரிந்த இடங்களை விலைவாசி ஏறுவதற்கு முன்னாலேயே இப்போதே வாங்கிக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதை அவர்கள் இன்னமும் செய்தபாடில்லை. மோட்டார் வெகிகிள்ஸ் டாக்ஸேஷனிலிருந்து

16th March 1960] [Sri C. N. Annadurai]

இப்பொழுது சர்க்காருக்குக் கிடைப்பது 85 லட்ச ரூபாய். அதிலே அவர்கள் கார்ப்பரேஷனுக்குக் கொடுப்பது இரண்டு லட்ச ரூபாய். கார்ப்பரேஷன் தங்களுடைய மோட்டாருக்காக சர்க்காருக்குச் செலுத்தும் வரி மட்டும் ரூ. 2,09,000. இப்படி இருக்கையில் கார்ப்பரேஷன் தங்களுடைய நிர்வாகச் செலவிலிருந்து 60 லட்ச ரூபாய் வரையில் ரோடு பராமரிப்புக்காக செலவழித்துக்கொண்டு வருகிறார்கள். ஆகையால், சரியாக நிர்வாகம் இருக்கவேண்டு மென்று விரும்புகிறவர்கள், தரவேண்டிய பணத்தைத் தந்து விட்டு, கேட்கவேண்டிய கணக்கைக் கேட்டு, சொல்லவேண்டிய குற்றச்சாட்டுகளைச் சொன்னால் பொருத்தமாக இருக்கும். அதை விட்டுவிட்டு, இந்த இடத்தில் அதைப்பற்றிச் சொல்ல வசதி இருக்கிறது என்ற காரணத்தால் சொல்வார்களானால், அது சரியல்ல. நான் அது சம்பந்தமாக பிரேரணைகள் வரும் நேரத்தில் அதைப்பற்றி எடுத்துச் செல்லலாம் என்று கருதுகிறேன்.

தங்களுடைய தயவை நாடி மிக அதிக நேரம் நான் பேசிக் கொண்டே போக விரும்பவில்லை. நான் முடிப்பதற்கு முன்னே, நிதி அமைச்சர் அவர்களிடம் இதைத்தான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வேன்—எடுத்துச் சொல்லப்பட்ட பிரச்னைகளைக் கவனித்து பதில் அளியுங்கள்; புதிய பிரச்னைகளுக்குச் சென்று விடாதீர்கள்; சென்று விட்டால் அதை நாங்கள் சந்திப்பதற்கு வசதி இல்லை; வாய்ப்பு இல்லை. உதாரணத்திற்காகச் சொல்லு கிறேன். இதையெல்லாம் விட்டு விட்டு, இவர்கள் நாட்டுப் பிரிவினை கேட்கிறார்களே, அது நடக்கும் காரியமா என்று நிதி அமைச்சர் அர்கள் பதிலிலே பேச ஆரம்பித்துவிட்டால் பதில் சொல்வதற்கு எங்களுக்கு வழி இருக்காது; பார்ப்பனர்களைப் பற்றி எங்கள் கருத்து என்ன என்று அவர்கள் பேச ஆரம்பித்தால் நாங்கள் பதில் சொல்ல நேரம் இருக்காது; சுதந்திராக் கட்சியைப் பற்றிய எங்கள் கருத்து என்ன என்று ஊடே அவர்கள் பேச ஆரம்பித்து விட்டால், அதைப்பற்றிப் பேசுவதற்கும் எங்களுக்கு வாய்ப்பு இருக்காது; ஆகையால், நல்ல பாராளுமன்ற அனுபவம் பெற்ற திறமைசாலி என்ற முறையில், எடுத்துச் சொல்லப்பட்ட பிரச்சனை களுக்கு மட்டும் அவர்கள் விரிவான, விளக்கமான, தவறுகள் இருந்தால் நீக்கிவிடத்தக்க, கருத்துக்களைத் தரவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, என்.ஜி.ஓ.-க்களைப் பற்றி அவர்கள் திட்ட வட்டமான முடிவைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வரிக்கும் வருவாய்க்கும் தொடர்பு எத்தனை சதவிகிதம் இருக்கிறது என்பதற்கு அவர்கள் புள்ளி விவரக் கணக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒரு சர்க்கார் வரியை மட்டுமே நம்பி வாழாமல், வருவாயையும் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற பொருளாதார தத்துவத்தை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களானால், அந்த நடைமுறைப்படி என்ன நடைபெறு கிறது என்பதை விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விலை வாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக என்ன உத்தரவாதத்தை அளிக்கிறார்கள் என்று கேட்டுக்கொண்டு, எல்லாத் தொழிற்சாலை களையும் மற்றவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, பனை ஓலையிலிருந்து செய்கிற தொழில்களைப் போன்றவற்றை மட்டும் தாங்கள்

வைத்துக்கொண்டிருக்கக்கூடாது என்று சொல்லி—சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி ஆழ்கடல் திட்டம், அலுமினியத் தொழிற்சாலை, பாக்ஸைட்டைப் பயன்படுத்தும் திட்டம், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலைத் திட்டம் இவைகளுக்கெல்லாம் விமோசனம் உண்டா, விடிவு உண்டா, வழி உண்டா என்று நாங்கள் மட்டுமல்ல, நாட்டு மக்கள் அத்தனை பேரும் ஆவலாக எதிர்பார்க்கிறார்கள்—அவைகளுக்கு நிதி அமைச்சர் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டு,—நான் ஒன்று சொல்வேன், நிதி அமைச்சர் அவர்கள் என்னுடைய வாதத்திலிருந்தே ஒரு செங்கல்லைப் பிடுங்கி, சுவர் விழுந்துவிட்டது என்று சொல்லக்கூடிய அந்தத் திறமைக்காக அல்ல, நிதி அமைச்சர் திறமைசாலி என்பதை சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், அதை அடிக்கடி அவர்கள் நிரூபித்துக் காட்டிக்கொள்வது அவசியமில்லை என்று—இந்தப் பிரச்னைகளுக்கு அவர்கள் நேரடியான சமாதானத்தை, விளக்கத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இவ்வளவு குறைபாடுகள் இந்த நிதி நிலை அறிக்கையில் இருப்பதால், இதைப் பாராட்டுவதற்கில்லை என்பதைச் சொல்லி, வரி போடவில்லை என்பதற்காக பட்ஜெட்டைப் பாராட்டவேண்டுமென்று அவர்கள் கருதுவார்களானால், இதுவரையில் வெளிவந்த எல்லா மாநில பட்ஜெட்டுகளிலுமே வரி போடாமல்தான் இருக்கிறார்கள், அந்த வழியில்தான் நம்மவரும் சென்றிருக்கிறார், முன் ஏர் போனபடிதான் பின் ஏரும் போகிறது, இதிலே சாமர்த்தியமோ ஆச்சரியமோ இல்லை என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இதுவரையில் இந்த விவாதத்தில் கலந்து கொண்ட பல கனம் அங்கத்தினர்கள் பேசும்பொழுது குறிப்பிடப்பட்ட சில விஷயங்களைப்பற்றி மட்டும் சில நிமிஷங்களில் நான் விளக்கிக்கூற தங்கள் அனுமதியைக் கோருகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த வரவு-செலவு திட்டப் பிரசங்கத்தில் முக்கியமாக விவசாய உற்பத்திப் பெருக்கைப்பற்றி அதிகமாகக் குறிப்பிட்டிருப்பது மிகப் பொருத்தம் என்பதை கனம் அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். விவசாய உற்பத்திப் பெருக்குதான் அடிப்படை. அதில் நாம் கவனம் செலுத்தவில்லை என்றால் போதிய அளவு தொழில் அபிவிருத்தி ஏற்பட்டாலும், அது எதிர்பார்த்த பலனை அளிக்காது என்பதை உணர்ந்தே விவசாய உற்பத்திப் பெருக்கில் இன்னும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்களிலிருந்தே இந்த விவாதத்தில் கலந்து கொண்ட சில கனம் அங்கத்தினர்கள் குறை கூறினார்கள் எதிர்பார்த்த அளவுக்கு உற்பத்தி பெருகவில்லையே என்று. திட்டம் போடுகிறோம். ஆண்டு தோறும் திட்டம் போடுகிறோம். ஐந்து ஆண்டுகளுக்கு திட்டம் போடுகிறோம். எவ்வளவு உற்பத்தியைப் பெருக்குவது, எவ்வளவு லட்சியம், அந்த லட்சியத்தை எவ்வாறு அடைவது, அவ்வாறு அந்த லட்சியத்தை அடைவதற்கு என்னென்ன இனங்களில் நாம் கவனம் செலுத்துவது, அதற்கு எப்படி பணம் ஒதுக்குவது,

16th March 1960] [Sri M. Bhaktavatsalam]

எவ்வளவு தூரம் அதை நிறைவேற்றுவது என்பதைப்பற்றி யெல்லாம் திட்டம் போடப்படுகிறது. அந்த முறையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முன்பு இருந்ததை விட 1,279,000 டன் அதிகமாக உணவு உற்பத்தியைப் பெருக்குவது என்று திட்டம் போட்டிருந்ததை கனம் அங்கத்தினர்கள் கவனித் திருப்பார்கள். அதில் குறை விழுந்துவிட்டதே, 3 லட்சம் டன் களுக்கு மேல் குறைவு ஏற்பட்டுவிட்டதே என்று சில கனம் அங்கத்தினர்கள் குற்றம் சாட்டினர்கள். 1279,000 டன்கள் அதிகமாக உணவு உற்பத்தி செய்யவேண்டும் என்று திட்டம் போட்டபொழுது எவ்வாறு அது போடப்பட்டது என்பதை கனம் அங்கத்தினர்கள் கவனிக்கவேண்டும். ஒவ்வொரு இனத்தின் மூலம் எவ்வளவு உற்பத்தி பெருகும் என்று கணக்கிடப்படுகிறது. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களினல் எவ்வளவு, சிறிய நீர்ப்பாசன திட் டங்களினல் எவ்வளவு, உரத்தினல் எவ்வளவு, ரசாயன உரத்தினல் எவ்வளவு, மற்ற உரங்களினல் எவ்வளவு என்று இப்படி ஒவ்வொரு இனத்தின்கீழும் கணக்குப் போட்டுத்தான் திட்டம் போடப் படுகிறது. இதைத்தான் நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக் கிருர்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்ட பொழுது எதிர்பார்க்கப்பட்ட அளவு ரசாயன உரம் வெளி நாடு களிலிருந்து வரவில்லை. அதன் காரணமாகத்தான் இந்தக் குறை பாடு ஏற்பட்டது என்பதை அவர்களே விளக்கியிருக்கிருர்கள். மற்ற வகைகளிலெல்லாம் எதிர்பார்த்த அளவுக்கு உணவு உற்பத்தி பெருகியே இருக்கிறது. அன்னிய நாடுகளிலிருந்து ரசாயன உரம் எவ்வளவு பெறமுடியும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அவ்வளவு பெறமுடியவில்லை. நம்முடைய ராஜ்யத்திலிருந்து 256,250 டன் ரசாயன உரம் வேண்டும் என்று கோரப்பட்டது. ஆனல் 1959-60-ல் கிடைத்தது 166,750 டன்தான். நாம் கோரிய அளவிலே 65 சதவிகிதம்தான் கிடைத்திருக்கிறது. இந்த வருஷத்தில் பொதுவாக அகில இந்திய ரீதியிலே பார்த்தால் அகில இந்தியாவிலும் முழு அளவும் பெறமுடியவில்லை. 100-க்கு 62 பங்கு தான் கிடைத்திருக்கிறது. ஆகவே, கிடைத்ததை எல்லா ராஜ்யங் களுக்கும் விகிதாசாரத்தில் விநியோகித்திருக்கிருர்கள் என்பது புலப்படுகிறது. நம் ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் கொஞ்சம் அதிகமாகவே கிடைத்திருக்கிறது என்பதும் புலப்படும்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எவ்வளவு தூரம் சாத்தியப் படுகின்றனவோ அவ்வளவு தூரம் நிறைவேற்றப்பட்டு, அவை களின்கீழ் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு புதிதாக நீர்ப்பாசன வசதி ஏற்பட்டு, புதிதாக நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப் பட்டிருப்பதைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிறிய நீர்ப் பாசன திட்டங்களைப்பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார் கள். அவைகளை நாம் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் என்று புறக் கணிப்பதற்கில்லை. கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் கற்ருழை, மண்பாண்டங்கள், பனை ஓலை போன்ற சிறிய சிறிய பொருள்களைக்கூட நாம் விடாமல் கவனம் செலுத்தி சிறிய சிறிய தொழில்களை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறினர். அதுதான்

பரவலான முறையில் கிராமங்களிலே செல்வத்தை வளர்க்கக்கூடிய வகை என்று சொன்னார். அப்படி அவ்வளவு சிறிய தொழில்களில் நாம் போதிய கவனம் செலுத்துகிறோம் என்றாலும், பெரிய தொழில்களை புறக்கணிப்பதற்கில்லை என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். இதையெல்லாம் பல கனம் அங்கத்தினர்கள் கவனித்திருக்க மாட்டார்கள். கற்றாழைக்குக்கூட ஒரு தொழில் வைத்திருக்கிறார்கள், மண்பாண்டத்திற்குக்கூட ஒரு தொழில் வைத்திருக்கிறார்கள் என்று இவ்வளவு தூரம் எல்லோரும் கவனித்திருக்கமாட்டார்கள். கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள், கனம் அங்கத்தினர்கள் எல்லோரும்கூட நன்றாகப் புரிந்து கொள்ளும்படியும் வெளியில் இருப்பவர்கள் புரிந்து கொள்ளவும் இந்த விவரங்களையெல்லாம் எடுத்து உரைத்ததற்காக, சிறிய தொழில்களில் எவ்வளவு தூரம் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது, அவைகளை புறக்கணிக்காமல், என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லியதற்கு நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அதேமாதிரிதான் பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் போதும் என்பது அல்ல. பெரிய நீர்ப்பாசன திட்டங்களும் வேண்டும். தமிழ் நாட்டில் ஓடுகின்ற ஆறுகள் போக வேறு மேற்குப் பக்கத்தில் ஓடுகின்ற ஆறுகளை மடக்கி அவைகளிலே மிச்சமாகிற தண்ணீரை நம்முடைய தமிழ் நாட்டிற்குப் பயன்படுத்துவதில் எவ்வாறு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதைப்பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தமட்டில், அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அதில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது நம்முடைய ராஜ்யத்தில் என்று கனம் அங்கத்தினர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1956-57-ம் ஆண்டிலே சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்காக ரூ. 48,40,000 தான் செலவிடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டிலே எதிர்பார்த்ததைவிட செலவு குறைந்து போய் விட்டது என்று சொன்னார்கள். அப்படி சரியாக கணக்குப் பார்த்து திட்டம்போட முடியாது. அப்படிப் போட்டால் திட்டம் போட்டதற்கு மேல் செலவு செய்யவேண்டியிருந்தால், செலவு செய்ய முடியாமல் போய்விடும். சுமாராக கணக்குப் பார்த்துத் தான் திட்டம் போடுகிறோம். கால்நடை இலாகாவுக்காக திட்டம் போடப்பட்டது ரூ. 205 லட்சம், ஆனால் செலவழித்தது ரூ. 195 லட்சம்தான் என்று கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படி 10, 15 லட்சம்கூட வித்தியாசம் இல்லாமல் கணக்குப் பார்த்து திட்டம் போட முடியாது. அப்படி சரியாக கணக்குப் பார்த்து 195 லட்ச ரூபாய்க்கு திட்டம் போட்டிருந்தால், ஒரு வேளை 5 லட்ச ரூபாய் கூடுதலாக செலவு செய்யவேண்டியிருந்தால் அது முடியாமல் போய்விடும். சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றுவது கஷ்டம். முதலில் அவைகளை பரிசீலனை செய்யவேண்டும். பரிசீலனை முடிந்த பிற்பாடு அவைகளை எடுத்துக்கொண்டு நிறைவேற்றவேண்டும். அதையெல்லாம் பார்த்துத்தான் திட்டம் போடுகிறோம். அதுவும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்

16th March 1960] [Sri M. Bhaktavatsalam]

சம்பந்தமாக கடந்த 2, 3 ஆண்டுகளாக பிரத்தியேகமாக கவனம் செலுத்தப்பட்டு, திறமையாகவும், உற்சாகத்துடனும் வேலை செய்து வருகிறார்கள். அதன் விளைவாக 9 மாதங்களுக்குள்ளேயே, 8 மாதங்களுக்குள்ளேயே திட்டம் போட்டபடி பணத்தை செலவு செய்துவிட்டு, பணம் போதாது, மேலும் 20 லட்சம் ரூபாய் வேண்டும், 15 லட்சம் ரூபாய் வேண்டும் என்று கேட்கிறார்கள். கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியபடி மொத்தத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக எவ்வளவு பணம் ஒதுக்கினோம், இப்பொழுது எவ்வளவு செலவு அதிகமாக ஆகியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அவ்வாறாக மொத்தத்தில் கணக்குப்போட்டு திட்டம் போட்டபடி பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறதா, அல்லது மிச்சம் ஆகியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்காக இன்னும் அதிகப் பணம் வேண்டுமென்று என்ஜினியர்கள் கேட்கும்பொழுது, கொடுக்கிறோம், வேறு இடத்தில் பணம் இருக்கிறது. அதை எடுத்துக்கொடுக்கிறோம், 10 லட்சம், 20 லட்சம் என்று அதிகமாகக் கொடுக்கிறோம். சென்ற ஆண்டில் அப்படித்தான் அதிகமாக செலவாயிற்று. 95 லட்ச ரூபாய் வரையிலே சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்காக செலவாயிற்று. ஆகவே, இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற வரவு-செலவுத் திட்டத்தில் அந்த மதிப்பீட்டை வைத்துக்கொண்டு, சென்ற ஆண்டில் செலவிடப்பட்ட தொகையை ஆதாரமாகக்கொண்டு திட்டம் போட்டு ரூ. 94,49,000 ஒதுக்கியிருக்கிறோம். இந்த முறையிலே நாம் விருத்தி அடைந்து கொண்டிருக்கிறோம் உற்பத்தியைப் பெருக்குவதிலே. முதல் ஐந்தாண்டு திட்டம் தொடங்குவதற்கு முன்பு, இந்த மாநிலத்திலே மொத்தம் உணவுப் பொருள் உற்பத்தி 38 லட்சம் டன் என்று கணக்கிடப் பட்டது. அதற்குப் பிறகுதான் அது இறுதியில் 44 லட்சம் என்று ஏற்பட்டது. அப்பொழுதுதான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. கனம் நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறபடி, மேலும் 44 லட்சம் 53 லட்சமாக உயரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இன்னும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ரசாயன உர பற்றாக்குறை நீங்கிவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டைவிட வருகிற ஆண்டில் அதிகம் கிடைக்கும் என்று நம்ப இடம் இருக்கிறது. அதிகமான அளவில் கிடைக்காவிட்டாலும், நமக்குப் போதிய அளவு கிடைக்கும், நம் நாட்டில் உற்பத்தியோடு, வெளிநாட்டிலிருந்து இறக்குமதியும் கணிசமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது திட்டத்தின் கீழ் 53 லட்சம் என்றது, மூன்றாவது திட்டத்தில் 60 லட்சமாக உற்பத்தி அதிகம் மதிப்பிடப் படலாம் என்று இருப்பது சர்வ கட்சிக் கமிட்டியில் இருக்கும் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அதோடுகூட தஞ்சையில், ஒரு தீவிர விவசாய உற்பத்தித் திட்டம், அமெரிக்கன் போர்டு பௌண்டேஷன் உதவியைக்கொண்டு, நிறைவேற்ற இருக்கிறோம். எவ்வளவு ரசாயன உரம் வேண்டுமோ, வேறு என்னென்ன வசதிகள் வேண்டுமோ, அவைகளையெல்லாம் அன்னிய நாட்டு

செலவாணிக் குறைவானாலும், அவைகளைச் சமாளித்துச் செய்து விடலாம் என்று உறுதியாக இருக்கிறோம். அப்படிச் செய்தால், உற்பத்தியை கணிசமான அளவுக்கு பெருக்க முடியும். தஞ்சையில், சாகுபடிக்கு வேண்டிய நல்ல நிலம், நீர்ப்பாசன வசதிகள் அதிக மாக இருப்பதால், கணிசமான அளவுக்கு உற்பத்தி பெருகும் என்ற நோக்கத்தோடு திட்டம் இயற்றி இருக்கிறோம். உற்பத்தி பெருக்கு இருக்கிறது என்று ஒப்புக் கொண்டாலும், கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்களே, அதனால் என்ன பயன், இன்னும் விலை குறையவில்லையே என்று சொன்னார்கள். விலை குறைய வில்லை. உண்மைதான். நிதி அமைச்சர் அவர்கள், இதைக் குறிப்பிட்டிருக் கிறார்கள், தங்கள் கவலையையும் தெரிவித்திருக்கிறார்கள். விலை இன்னும் குறையத்தான் வேண்டும். எப்படிக் குறைப்பது? அதை நாம் இப்பொழுது சிந்திக்கவேண்டும் என்ற விஷயம். குறைப் பதற்கு ஒன்றும் செய்யவில்லை என்று புகார் சொல்லலாம். எப்படி குறைக்கிறது? குறைந்த பட்ச விலையும் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. நம் மாநிலத்தைப் பொருத்த வரையில், விலை ஓரளவு குறைந்துதான் இருக்கிறது என்று நேற்று வெளியிட்டேன். கொள்முதல் நிறுத்திய பிறகு குறைந்துதான் இருக்கிறது. போதிய அளவு குறைந்து விடவில்லை. குறைந்து விட்டது என்று சொல்லவில்லை. விலையை எவ்வளவு தூரம் குறைப்பது? குறைப்பதால் உழைக்கும் விவசாயிகளுக்கு கவலை அளிக்கும் வகையில் செய்யக்கூடாது என்பதைத் தீவிரமாக சிந்திக்கவேண்டும். உழைக்கும் விவசாயிகளுக்கு ஒரு கவலையும் ஏற்படாத வகையில், அவர்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில், இந்த திட்டங்களை பரிசீலனை செய்து நிறைவேற்ற வேண்டியிருக் கிறது. ஏதோ சொன்னார்கள், உடனடியாகச் செய்யவேண்டும் என்று செய்வதற்கில்லை. பரிசீலனை செய்துதான் செய்ய வேண்டி யிருக்கிறது.

ஸ்டேட் ட்ரேடிங் வேண்டும் என்று நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் முடிவு செய்யப்பட்டது, கொஞ்ச காலத்திற்கு முன்பு. இந்த அரசாங்கம் அதை எதிர்க்கவில்லை. நானே அதை வரவேற் கிறேன். ஸ்டேட் ட்ரேடிங்கை ஏற்றுக் கொள்ளாவிட்டால், விலைப் பிரச்சினையை திருப்திகரமாக, நிரந்தரமாக தீர்க்க முடியாது. ஆனால், எவ்வளவு தூரம் ஸ்டேட் ட்ரேடிங் வைத்துக் கொள்வது? கொள்முதல் செய்வதும் ஸ்டேட் ட்ரேடிங்கின் ஒரு பாகம்தான். அதில் இது ஒரு சிறிய அம்சம். எவ்வளவு தூரம் விஸ்தரிப்பது என்பது அனுபவத்தைப் பொருத்துச் செய்ய வேண்டிய விஷயம். விளையும் எல்லாப் பொருள்களையும் புல் ஸ்டேட் ட்ரேடிங் செய்வதில்லை. அப்படிச் செய்ய பக்குவம் இருக் கிறதா என்று பார்க்க வேண்டும். மேலும் மேலும் விஸ்தரிப்பதா என்று பரிசீலனை செய்யப்பட்டது. பரிசீலனை செய்யப் பட்டதில், நவம்பர், டிசம்பர் மாதத்தில் யோசிக்கும்போது இப்பொழுது இருந்த நிலையில்லை. அப்பொழுது கொள்முதல் வேண்டாம், பின்னால் அவசியம் ஏற்பட்டால் பார்த்துக் கொள்ள லாம், கொள்முதல் இல்லாமலே தானியங்களைப் பெற்றுவிடலாம்,

16th March 1960] [Sri M. Bhaktavatsalam]

கொள்முதலால் சில பாதகங்கள் ஏற்படுகிறது என்று கொள்முதலை நிறுத்தியிருக்கிறோம். ஸ்டேட் ட்ரேடிங் புல் ப்ளெட்ஜ்ஜாக, முழு ஸ்டேட் ட்ரேடிங் நடத்த வேண்டிய நிமித்தம் ஏற்பட்டால், அதற்கு புல் கண்ட்ரோல் என்றுதான் அர்த்தம். எல்லாவற்றையும் அரசாங்கமே நடத்தவேண்டும். மிகுந்த பற்றுக்குறை இருந்த போது அதுமாதிரி நடந்தது. அப்பொழுது கண்ட்ரோல் பலமாக இருந்தது. எல்லோரும் கண்ட்ரோலை வெறுப்பார்கள். முக்கியமாக உழுது பயன் அடையும் விவசாயிகள், ஒரே முகமாக கண்ட்ரோல் வேண்டாம் என்று சொன்னார்கள். இன்னும் சொல்கிறார்கள். ஆனால், நாட்டின் நிலைமையை ஒட்டி, தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை ஒட்டி, எந்த அளவுக்கு நிர்ப்பந்தம் செய்யவேண்டும் என்று ஒரு முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. எந்த அளவு பாதகம் வரும், எவ்வளவு குறைந்த அளவில் அதைச் செய்யலாம் என்று பார்க்க வேண்டியிருக்கிறது.

விலைவாசிப் பிரச்சினையைத் தீர்க்கும் விஷயத்தில், ஒரு இராச்சியம் மட்டும் செயல் பட்டால் அதிகப் பலன் இருக்காது. அதை அகில இந்திய ரீதியில் செய்யவேண்டும். வரப்போகும் 19, 20 தேதிகளில், நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூடிப் பொதுவாக இந்த விலைப் பிரச்சினையைப்பற்றி விவாதிப்பார்கள் என்று தெரிகிறது. கனிசமாக ஒரு முடிவு எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். உடனடியாக ஏன் விலையைக் குறைக்கவில்லை யென்றால், அதற்கு ஒரு உத்தரவு போட்டு ஏதாவது ஒரு வழியாக குறைத்து விடுவதற்கில்லை. அப்படி ஏதாவது செய்வோமேயானால், பலவிதமான விபரீதங்களுக்கு, பாதகங்களுக்கு விவசாயிகளும், மக்களும், எல்லோரும் ஆளாக நேரிடும். தீவிரமாக, நன்றாக பரிசீலனை செய்து ஒரு முடிவு காண வேண்டியிருந்தால், தாமதம் ஏற்படுகிறது. அதன் அவசியத்தை உணர்ந்துதான் இருக்கிறது என்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

துரதிர்ஷ்ட வசமாக, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். மிளகாயைப்பற்றி, அவர்கள் சொன்னார்கள், "மிளகாய் விலை ஏகமாக அதிகமாகிவிட்டது" என்று. நம் மாநிலத்தில் அதிகமாகத்தான் இருக்கிறது. மிகுந்த கவலையைக் கொடுத்திருக்கிறது. இப்பொழுது திடீரென்று பற்றுக்குறை ஏற்பட்டு விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறதா, அல்லது வியாபாரிகளே ஸ்பெகுலேட் செய்கிறார்களா தெரியவில்லை. ஆகையால் விலை ஏற்றம் இருக்கிறது. அதை எப்படி குறைக்கிறது? மிளகாய் எல்லாவற்றையும் அரசாங்கமே வாங்கி, நியாய விலைக் கடைகளை வைப்பதனால், என்ன விலைக்கு வாங்குவது, என்ன விலைக்கு விற்பது என்பதெல்லாம் எழுகிறது. உடனடியாக எந்த நடவடிக்கைகளும் எடுக்க முடியவில்லையா என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். இன்று நம் மாகாணத்தில் ஓரளவு மிளகாய் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது, தேவைக்கு மேல் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அது அந்நிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏற்றுமதியெல்லாம், மத்திய சர்க்கார்

[Sri M. Bhaktavatsalam] [16th March 1960

கவனிக்கிறது என்றுலும், இந்த இராச்சியத்தைக் கலந்து கொண்டு, ஏற்றுமதிக்கு அனுமதித்திருக்கிறார்கள். ஆயிரம் டன்னு, 2,000 டன்னு, தனி நபருக்கோ, கூட்டுறவு சங்கத்துக்கோ, இவையெல்லாம் நம்மைக் கேட்டுத்தான் அவர்கள் செய்கிருர்கள். சென்ற ஆண்டிலே ஏற்றுமதி ரொம்பக் குறைவு. விளைவைப் பொறுத்த மட்டில் கவலையில்லை. அதுதான் அங்கத்தினர் அவர்கள் ஆர்வம் காட்டுகிருர்கள். ஆனுல், நம் விளைச்சல் வெளிநாட்டுக்கு விற்பனையாகிறது. அதனுல் நமக்கு பாரின் மார்க்கெட்டு கிடைக்கிறது. அதை நாம் மேலும் மேலும் வளர்க்க வேண்டும். இதிலெல்லாம் கஷ்டம் இருக்கிறது. பாரின் மார்க்கெட்டுக்கு பாதகம் ஏற்படும் அளவில் அவசரப்பட்டு எதையாவது செய்துவிட்டால், அங்கத்தினரவர்கள் ஒப்புக்கொள்வார்களா ?

SRI M. KALYANASUNDARAM : அப்படியானுல், மிளகாய் ஏற்றுமதியைத் தடை செய்யக் காரணம் என்ன? தடை செய்திருப்பது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சென்ற ஆண்டில் இதைப்பற்றி பேசுவார்கள் இல்லை. இந்த ராச்சியத்தில் விளையும் மிளகாய், வெங்காயம் இவற்றை மத்திய சர்க்கார் இந்த ராச்சியத்தை கலந்தாலோசித்து, எங்கள் அங்கீகாரம் பெற்றுத்தான் ஏற்றுமதி விஷயத்தை நிர்ணயிக்கிருர்கள். ஆனல் இது எல்லாம் பிரச்சனை எழவில்லை. கணக்குப் பார்த்தால் ஆயிரம் டன் கூட ஏற்றுமதியாகவில்லை. ஆயிரம் டன் கூட ஏற்றுமதியாகாமல்தான் மிளகாய் விலை ஏறிவிட்டது. மிளகாய் விலை இப்படி அதிகமாக ஏறிக்கொண்டே போகிறதே என்றுதான் "ஒருகால் ஏற்றுமதியைத் தடை செய்தாலும் செய்யலாம். அல்லது ஆயிரம் டன்னுக்குப் பதிலாக 500 டன் ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கலாம். எப்படியும் இந்தப் பிரச்சனையை நன்ருகக் கவனித்துப் பார்த்துத்தான் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியும்" என்பதாகத்தான் நாங்கள் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிருேம். இனி ஏற்றுமதியே வேண்டாம் என்று சொல்லவில்லை. இந்தச் செய்தி வியாபாரிகளுக்குத் தெரிந்தது. ஏற்றுமதியை நிறுத்திவிட்டார்கள் என்று எண்ணி விலையை அதிகப்படுத்தி விட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இப்படி விலை ஏறுவதைக் கட்டுப்படுத்தத்தான் வேண்டும். ஆனுல் இன்றைன்று. இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கிற சிறு விவசாயிகள்தான் மிளகாய் சாகுபடி செய்கிருர்கள். ஏக்கருக்கு 750 ரூபாய், ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வரலாம். சாகுபடிச் செலவு வேறு இருக்கிறது. ஆகவே, இந்தச் சிறு விவசாயிகளும் பாதகம் அடையாத வகையில் இப்பிரச்னையைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. மிளகாய் வற்றல் விற்பனை செய்யக்கூடிய வியாபாரிகளும் எங்களிடத்தில் வந்து சொன்னுர்கள். அவர்களுடைய கஷ்டங்களையும் எழுதிக் கொடுக்கச் சொன்னேன். அதையும் வைத்துக்கொண்டு, மிளகாய் வற்றல் உற்பத்தி செய்கிற

16th March 1960] [Sri M. Bhaktavatsalam]

விவசாயிகளும் பாதகம் அடையாத வகையில் மத்திய அரசாங்கத்தோடு கலந்து ஒரு முடிவு செய்யவேண்டும். அதுதான் என் கருத்து. இதுபற்றி சர்க்கார் ஒன்றுமே கவனம் செலுத்துவில்லை. இந்தப் பிரச்சனையையே கவனிக்கவில்லை என்பதாகக் குற்றம் சாட்டுவது சரியல்ல. இப்பிரச்சனையை நன்றாக சர்க்கார் கவனித்து வருகிறது. நிபுணர்களையும் கலந்துகொண்டு—அவர்கள் சொல்லிவிட்டார்கள் என்றுகூட நாம் ஒன்றும் உடனடியாகச் செய்ய முடியாது—க்ரியம்சையில் நம்முடைய அனுபவத்தையும் வைத்துக்கொண்டு என்ன செய்வது என்பதாக நன்றாகப் பரிசீலனை செய்து முடிவு செய்யவேண்டும். ஆகவே, சர்க்காருக்கு விலைவாசியைப்பற்றியே கவலையில்லை என்பதாகச் சொல்கிற குறை சரியல்ல என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

மற்றொரு விஷயம், கூட்டுறவுப் பண்ணை. அதைப்பற்றியும் சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் பேச்சைக் கவனித்ததில் இருந்து ஒரு கருத்து இருப்பதாகக் காண்கின்றேன். இன்றையதினம் வெளிவந்த பத்திரிகையில்கூட ஒரு தலையங்கத்தைப் பார்த்தேன்.

விவசாயத்திற்கு கூட்டுறவுப் பண்ணை இன்றியமையாத சேவை செய்ய முடியும். சேவை செய்கின்ற கூட்டுறவு ஸ்தாபனங்கள்தான் அதிகமாகப் பெருக வேண்டியிருக்கிறது. சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகளைத்தான் அதிகமாக விரிவுபடுத்த சாதனம். கூட்டுறவு ஸ்தாபனங்கள் பல துறைகளில் மக்களுக்கு வேண்டும் சமீபத்தில்கூட இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு கூட்டுறவு ஸ்தாபனங்களை நடத்துகின்ற பிரதிநிதிகளை நானும், கனம் தொழில் அமைச்சர் அவர்களும் கலந்து பேசினோம். 'விவசாயிகளுக்கு அதிகமான மற்ற வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு இந்தச் சங்கங்கள் முன்வர வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் சர்வீஸ் சொஸைடிகளாக இருக்கவேண்டும். பிஸினஸ் சொஸைடியாக இருப்பதைவிட, பிஸினஸ்லெக் சொஸைடியாக இருந்து லாபத்தைக் கருதாமல் விவசாயிகளுக்கு எல்லா விதமான உதவிகளையும் செய்வதற்கு முன்வரவேண்டும்' என்று அவர்களிடத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

கூட்டுறவுப் பண்ணை என்றால் கலெக்டிவ் பார்மிங்தான் என்று இல்லை. திருப்பித் திருப்பி இதைச் சரியாக புரிந்து கொள்ளாமலேயே பத்திரிகையில் எழுதுகிறார்கள். பூதான் கிராமங்களைத் தவிர வேறு எங்கும் அந்தப் பிரச்சனை இல்லை. இப்போது வற்புறுத்துவது எல்லாம் கூட்டுறவு ஸ்தாபனங்கள் விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு வசதிகளைப் பெருக்கித் தரவேண்டும் என்பதுதான். இரண்டு ஏக்கரா, ஐந்து ஏக்கரா வைத்துக்கொண்டிருக்கக்கூடிய பத்து இருபது விவசாயிகள்கூடச் சேர்ந்து டெனன்ட்ஸ் பார்மிங் அமைத்துக் கொள்கிறார்கள். இதனால் கடன் வாங்குவது, இதர வசதிகளைப் பெறுவது என்பது சௌகரியமாக இருக்கிறது. தனி நபர்களுடைய லாபம், உழைப்பு, வருமானம்

எல்லாம் பாதகம் ஏற்படாத முறையில் வேலை செய்து வருகிறார்கள். ஆகவே, கூட்டுறவுப் பண்ணை என்கிற கொள்கையைப்பற்றி எத்தனையோ முறை விளக்கிக்கொண்டு வந்தும்கூட சிலர் புரிந்துகொள்ளாமலேயே தப்பான அபிப்பிராயத்தை வளர்த்து வருகிறார்கள்.

பல பேர் சேர்ந்து திருப்திகரமான முறையில் பல வசதிகளைப் பெருக்கிக்கொண்டு விவசாயம் செய்யலாம். அது ஜாயின்ட் பார்மிங். இதற்கு ஒரு கட்டுப்பாடு இல்லை. இத்தனை சொஸைடிகள் ஏற்படுத்தியே ஆகவேண்டும் என்கிற உத்தரவு இல்லை. அவரவர்கள் அவரவர்களுக்கு இது சௌகர்யம் என்று தெரிந்தால் ஏற்படுத்திக்கொள்ளலாம் என்பதுதான் கொள்கை. நம்முடைய லட்சியம் கூட்டுறவுப் பண்ணை முறையில் எல்லோரும் சாகுபடி செய்யவேண்டும், உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதாக இருந்தாலும் இதில் கட்டுப்பாடு இல்லை. யாரையும் வற்புறுத்துவது என்று இல்லை. டெனன்ட்ஸ் பார்மிங் என்றால் தஞ்சை ஜில்லாவில் மட்டும் 57 சொஸைடிகள் ஏற்பட்டிருக்கின்றன. கோயில் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டவர்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். திருநெல்வேலியிலும் இம்மாதிரி ஒன்றிரண்டு இருக்கிறது. இந்த சொஸைடிகளிலே சேர்ந்தவர்களே சொல்லுகிறார்கள், இது மிகவும் நன்மை அளிக்கிறது என்று. இவை ரொம்ப திருப்திகரமாக நடக்கிறது. எல்லோரும் ஒத்துழைக்கிறார்கள்.

ஒரு தனிப்பட்ட விவசாயி ஒரு ஏக்கருக்கு 8,000 ராத்தல் உற்பத்தி செய்திருக்கிறார். அப்படி ஒரு தனிப்பட்ட விவசாயியே உற்பத்தி செய்ய முடியும் என்றால் நிச்சயமாக கூட்டுறவுப் பண்ணையின் மூலம் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும், எல்லா வசதிகளும் கிடைப்பதனால் நிச்சயமாக அதிகம் உற்பத்தி இருக்கும் என்றுதான் தோன்றுகிறது. நேற்று 8 ஆயிரம் ராத்தல் உற்பத்தி செய்த விவசாயிக்கு பரிசு கொடுத்த போதுதான் "மந்திரி அவர்களுக்கு புத்தி வந்தது. கூட்டுறவுப் பண்ணையைப் பற்றி அங்கே பேசாமலே விட்டுவிட்டார்கள்" என்று இன்றையதினம் பத்திரிகையில் வந்திருக்கிறது. அங்கே போய் கூட்டுறவுப் பண்ணையைப்பற்றி பேசாத காரணத்தினால் அதைவிட்டுவிட்டார்கள் என்று இல்லை. அந்த லட்சியம் இருப்பதனால் இவ்வளவு சொஸைடிகள் இத்தனை நாளைக்குள் ஏற்பட்டே ஆகவேண்டும் என்றும் நாங்கள் வற்புறுத்தி வரவில்லை. விவசாயிகளாகவே பார்த்துத் தெரிந்துகொள்கிறார்கள். அவர்களே இதை உணர்ந்து ஆரம்பித்து நடத்த முன் வருகிறார்கள். ஒரு தனிப்பட்ட விவசாயிக்கு பரிசு அளிக்கும் இடத்தில் நான் இதைப்பற்றி பேச என்ன சந்தர்ப்பம் இருக்கிறது? தனிப்பட்ட ஒரு விவசாயி 8 ஆயிரம் ராத்தல் உற்பத்தி செய்ய முடியும் என்றால் நிச்சயமாக கூட்டுறவு முறையில் சாகுபடி செய்தால் அதிகமாகவே இருக்கும். அப்படி ஏற்படவேண்டும் என்பதுதான் லட்சியம். அதற்காக நிர்ப்பந்தம் ஒன்றும் இல்லை.

16th March 1960] [Sri M. Bhaktavatsalam]

இன்னும் ஒரே ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ ரஷித் அவர்கள் பேசியபோது நான் இங்கே இல்லை. இருந்திருந்தால் அப்போதே சொல்லியிருப்பேன். சமீபத்தில் அமெரிக்காவில் இருந்து வந்த ஒரு பிரயாணிக்கு மதுரையில் போலீஸ் இலாகாவினரால் ஒரு சிறு தொந்தரவு வந்ததாக பத்திரிகையில் பார்த்தோம். அவர்கள் அனுமதி இல்லாமல் சில பொருள்களை கொண்டு சென்றுர்கள் என்று போலீசார் நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். அங்கத்தினர்கள் எல்லோரும் அதை அறிந்திருப்பார்கள். நான் விளக்க விரும்பவில்லை. ஆனல் கனம் அங்கத்தினர், போலீசார்கள் அந்நிய நாட்டுப் பிரயாணிகளுக்கு விரோதமாக இருக்கிறுர்கள் என்று சொல்வது சரியல்ல. அவர்கள் யாராக இருந்தாலும் தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும். அந்நியநாட்டுப் பிரயாணியாக இருந்தால் என்ன? கடமையச் செய்யவில்லை என்றுல் இவர்கள் கடமையினின்றும் தவறியவர்களாக ஆகிவிடுகிறுர்கள். ஆனல் நாம் அந்நியநாட்டுப் பிரயாணிகளுக்கு எவ்வளவோ வசதிகளைப் பெருக்கவேண்டும், சௌகர்யங்களைச் செய்து தரவேண்டும் என்று தான் விரும்புகிறோம். அப்படிச் செய்துதான் கொடுக்கிறோம். ஏதாவது தவறு ஏற்பட்டால் கூட அவர்களுக்கு எவ்விதமான பாதகமும் ஏற்படாத வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்றுதான் இப்போது கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே இந்தச் சம்பவத்தைப் பொறுத்த மட்டில் ரொம்ப மரியாதையாக நடந்து கொண்டிருக்கிறுர்கள். ஆகவே இந்த மன்றத்தில் உள்ளவர்கள், அந்நிய நாட்டுப் பிரயாணிகளுக்கு போலீசார் விரோதமாக இருக்கிறுர்கள் என்பது போலச் சொல்வது சரியல்ல. அன்னிய நாட்டுப் பிரயாணிகளுக்கு அசௌகரியம் செய்யவேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல. நம் நாட்டைப் பார்ப்பதற்கு அயல்நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான பிரயாணிகள் வருகிறுர்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்திருக்கிறோம். ஆகவே இப்படி ஒரு அங்கத்தினர் தவறுன கருத்துக்களைக் கூறுவது சரி அல்ல என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI T. M. NALLASWAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1960-61 ஆண்டு வரவுசெலவு திட்டத்தை வரவேற்கு முறையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஜனநாயக அமைப்பிலே இயங்குகிற ஒரு சர்க்கார் வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும்போது எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் எதிர்க்கவேண்டுமே என்ற காரணத்திற்காக அல்லாமல் நியாயமாக எடுத்துச் சொல்லும்போது குறைகளை நிச்சயமாக அரசாங்கம் கவனித்து வருகிறது என்பதை சென்ற ஆண்டிலே வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்தபோது விற்பனை வரியில் சில பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று எதிர்க்கட்சியிலுள்ள அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னுர்கள். அதை

[Sri T. M. Nallaswami] [16th March 1960

வைத்துக்கொண்டு இந்த ஆண்டிலே வரவு செலவு திட்டத்தில் பல பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. இதுமாதிரி இந்த ஆண்டிலேயும் பால் முதலிய பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். இதுவும் சர்க்காரால் கவனிக்கப்படும் என்று நம்புகிறேன். இம்மாதிரி நியாயமாக எடுத்துச்சொல்லும் குறை கவனிக்கப்படுகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அப்படி இருந்தும் பலர் காரணமின்றி அரசாங்கத்தைத் தாக்குவதைப் பார்க்கும்போது இதற்காக எடுக்கப்படும் பெருமுயற்சிகள் குன்றிவிடுமே என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது.

சற்றுமுன்பு வரவுசெலவு திட்டத்தைப்பற்றி குறைகூறிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேசும்போது சென்னைக் கார்ப்ரேஷனைப்பற்றி சொல்லும்போது அரசாங்கத்தை தாக்கி கார்பொரேஷனைப் பொறுத்த வரையில் பாதுகாத்து பேச வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஒரு காலத்தில் திராவிடநாடு அமைந்தால் அதில் ஏற்படும் அரசியல் அமைப்பின் பிரகாரம் எதிர்க்கட்சித்தலைவர் நிதி அமைச்சராக இருந்து, வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கின்ற நிலைமை ஏற்பட்டால் இதைவிட இன்னும் அதிகப் பொறுப்பு ஏற்று பேசவேண்டிய நிலைமையில் இருப்பார்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் குறிப்பிட்டார்கள், கனம் ஸ்ரீ வெங்கடராமன் பாராளும் மன்ற உறுப்பினராக இருந்து கூறிய குறைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்று. இம்மாதிரி ஜனநாயக முறையில் எல்லோரும் பேசக்கூடிய வாய்ப்புக் கொடுத்தால் இம்மாதிரி கேள்விகள் ஏற்படத்தான் செய்யும். உண்மையிலே இன்றைய சர்க்காரைப் பொறுத்த வரையில் அமைச்சர் அவை தமக்கு இருக்கக்கூடிய முழுபொறுப்பை ஏற்று நல்ல முறையில் முன்னேற வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் தான் இயங்கி வருகிறது. ஆனால் எதிர்க்கட்சியில் இருந்தாலும் சரி ஆளும் கட்சியில் இருந்தாலும் சரி, அவர்கள் சொல்லுகின்ற விஷயங்களை ஏற்று நல்லமுறையில் திட்டங்களை வகுக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. நியாயமாக விமர்சனம் செய்து அதற்கு எடுத்துச் சொல்லவேண்டிய பரிகாரத்தை தெரிவித்தால் அதுவும் சிறந்த முறையில் சொன்னால் நன்றாக அமையும் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்.

நேற்றையதினம் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் பேசும்போது மருத்துவ இலாக்காவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை முழுதும் செலவிடப்படவில்லை என்று சொன்னார்கள். அதாவது மூன்று கோடி ரூபாய் செலவாகாமல் நின்றுவிட்டதாகச் சொன்னார்கள். நாட்டில் இருக்கக்கூடிய முப்பெரு குறைகள் அறியாமை, ஏழ்மை, பிணி ஆகும். அவைகளில் மருத்துவம் பிணியைப் போக்குவதற்கு வகை செய்கிறது. எதிர்க்கட்சி அங்கத்தினர் இந்தத் தொகை பூராவும் செலவிடாமல் இருந்தது வருந்தத்தக்கது என்று குறிப்பிட்டார்.

16th March 1960] [Sri T. M. Nallaswami]

உண்மையாக இம்மாதிரி விமர்சனங்களை நாங்கள் வரவேற்கிறோம். அப்படி எடுத்துச்சொல்லும்போது சட்டசபையில் இந்தப் பொருளைப்பற்றி கனம் அமைச்சராவது இலாகாவை ஏற்று நிர்வகிப்போராவது யார் ஜவாப்தாரியாக இருந்தாலும் அவர்கள் இதற்குப் பரிகாரம் தேட முற்படுவது மிகவும் பொருத்தமாகும். அப்படி உருப்பட்ட விமர்சனங்களாக இருக்கவேண்டுமென்று நான் மனப்பூர்வமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மன்றத்தில் எதிர்க்கட்சியினர் மட்டுமின்றி ஆளும் கட்சியினரும் சொல்லுகின்ற குறைகளை நல்ல முறையில் அமைத்து இருந்தால் வரவேற்கத்தக்கதுதான்.

நம் நாட்டில் விவசாயிகள் முன்னேறவேண்டுமானால் விவசாயம் நல்லமுறையில் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். அம்மாதிரி முன்னேற்றத்திற்கு சில பரிகாரங்கள் தேவை. சில அடிப்படையாக அமைந்திருக்கிறது. இதற்கு இன்றியமையாதது நீர்ப்பாசனம். நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நீர்ப்பாசன வசதிகள் நிறைய செய்து கொடுத்தால் விவசாயிகள் நன்றாக ஊன்றி ஊன்றி கவனிப்பார்கள். இந்த நாட்டை பொன் விளையும் பூமியாக மாற்றிவிடுவார்கள்.

இரண்டு தினங்களுக்கு முன்பு ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார் மேட்டூர் அணைக்கட்டு திட்டத்தை விஸ்தரிப்பதற்கு வேண்டிய வாய்ப்புகளெல்லாம் இருக்கின்றன என்றும் ஏற்கனவே திட்டமிட்டு இந்த அணையைக் கட்டியவர்கள் இதற்கு வேண்டிய வாய்ப்பு வசதிகளுக்கு இடம் வைத்திருக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது நிறைவேற்றப்பட வேண்டும். இதுமாதிரி பலபலப் பகுதிகள் பலமடைய வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அம்மாதிரி லோயர் பவானி திட்டத்தையும் விஸ்தரித்து தண்ணீர் கொடுக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார். அதுமட்டுமல்ல ஏற்கெனவே உள்ள குளங்களை அபிவிருத்தி செய்தால் நீண்ட நாட்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். சர்க்கார் இவைகளை நல்ல முறையில் பரிசீலனை செய்து நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதனால் விவசாயிகளுக்கு நல்லமுறையில் விவசாயம் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

இதுமாதிரி கூட்டுறவு பற்றி கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த கூட்டுறவு விவசாயத்தைப் பொறுத்தமட்டில் சர்க்கார் கொள்கை நல்லதாக இருந்தாலும் இந்தக் கொள்கையை அமுல் நடத்தமுற்படுகின்ற இந்த அதிகாரிகள் விவசாயத்தை ஊன்றிச் செய்வதற்கு தகுதி உள்ளவர்தானா என்பது சந்தேகமாய் இருக்கிறது. நிறைவேற்றக்கூடிய அதிகாரிகள் நிறைவேற்றக் கூடிய அளவிலே இருக்கிறார்களா என்பது சந்தேகமாயிருக்கிறது. ஆகவே இதற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri T. M. Nallaswami] [16th March 1960

சமீபகாலத்தில் டீசல் எண்ணெய் மீது வரி அதிகரிக்கப்பட்டதினுல் தோட்டக்கால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். டீசல் எண்ணெய் பஸ்ஸுக்கும் லாரிக்கும் என்ன விலையில் கொடுக்கப்படுகிறதோ அதே விலையில்தான் தோட்டக்கால் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆகவே விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய டீசல் எண்ணெய் விலையைக் குறைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு மிகக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகள் மிகவும் திறமையாக நடக்க வேண்டுமானுல் அவர்களுக்கு இயந்திர சாதனங்கள் பயன் படுவதற்கான வழிவகைகளை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ட்ராக்டர்கள் போன்றவைகளை உபயோகப்படுத்த வேண்டும். அப்படி இல்லாமல் உற்பத்தியைப் பெருக்க முயல்வது தோல்வியடையும். ஆகவே, ட்ராக்டர்கள் போன்றவைகளுக்கு மாகாண சர்க்கார் வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும். இப்படி பல முயற்சிகளில் நாம் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்கிஞலொழிய நமது உற்பத்திப் பெருக்குத் திட்டம் நல்ல முறையில் நிறைவேருது. எதிர்கட்சியில் உள்ளவர்கள் சொல்லியிருந்தாலும் சரி அல்லது ஆளும் கட்சியில் உள்ளவர்கள் சொல்லியிருந்தாலும் சரி எல்லோர் சொல்வதையும் கேட்டு அவைகளுக்கு ஒரு பரிகாரம் காணவேண்டுமென்று பொதுவாக இந்த வரவு செலவுத் திட்டம், மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டு தயாரிக்கப் பட்டதாகும். ஆகவே இதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கருத்தைத் தெரிவித்துக்கொண்டு நான் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI N. R. THIAGARAJAN : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் வரப் போகிறது என்றவுடனேயே, நான் அதை பெரிதும் எதிர்பார்த்திருந்தேன். இந்த ஆண்டு பட்ஜெட்டைப் பார்த்து எதிர் கட்சி அங்கத்தினர்கள் ஏமாந்து போயினர். அதைப் போலவே நானும் ஏமாந்துதான் போனேன், ஒரு கோணத்தில். வரி போடுவார்கள், அதை எதிர்த்துப் பேசலாமென்று நினைத்துக்கொண்டிருந்த எதிர் கட்சி அங்கத்தினர்கள் வரி ஒன்றும் போடப்படவில்லை என்பதைக் கண்டு ஏமாந்து போனுர்கள். புது வரிகள் போடுவார்கள், அந்த வரியை ஆதரித்துப் பேசலாமென்று நான் நினைத்தேன், அதில் எனக்கும் ஏமாற்றம் ஏற்பட்டுவிட்டது. என் அபிப்பிராயப்படி, இந்த ராஜ்யத்திற்கு குறைந்தளவு வருமானம் 100 கோடியாவது இருக்க வேண்டும். அதற்கு எவ்வளவோ வரிகள் போட முடியும். சினிமாவுக்கு வரி போடலாம். மத்திய சர்க்கார் அதற்கு ஏதோ வரி போட்டு அதைப் பகுதியாக குறைத்திருக்கிருர்கள். நான் சொல்வது, ஒரு புதிய முறையில் சினிமாவிற்கு வரி போடலாம்.

16th March 1960] [Sri N. R. Thiagarajan]

அப்படி போட்டிருக்கலாம். சென்ற ஆண்டு 100 படங்கள் எடுத்தார்களாம். ஒரு படத்திற்கு பத்து லட்சம் ரூபாய் செலவு என்று போட்டாலும், சுமார் 10 கோடி ரூபாயாயிருக்கும் அவைகளுக்கு. இப்படி பத்து கோடி ரூபாயை படமெடுக்க பாழாக்கும்போது அதில் அரசாங்கத்திற்கு ஏன் ஒரு கோடி ரூபாய் வரியாகக் கொடுக்கக்கூடாது என்று நான் கேட்கிறேன்? அப்படிக் கொடுத்து விட்டால் ஒன்றும் நசித்துப் போய்விடாது. அப்படியே சினிமா இல்லாவிட்டால்தான் என்ன, உலகம் ஒன்றும் குடி முழுகிப் போய் விடாது. மக்களுக்கு அந்த ரூபாய் மிச்சமாகும். ஆகவே, சினிமாவிற்கு அதிகப்படியான வரி போட்டிருக்கலாம், சினிமா மூலம் அதிகளவு லாபம் சம்பாதிக்கிறார்கள். அதற்கு வரி போடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அடுத்தபடியாக, பஸ்களுக்கு கூடுதல் வரி போட்டிருக்கலாம். பெரிய பஸ் கம்பனிகளுக்காவது வரி போட்டிருக்கலாம். அடுத்தபடியாக ஒரு புது வரி போடுவதுபற்றி திட்டக் கமிஷன் யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதாவது, அதிகக் குழந்தைகள் பெறுபவர்களுக்கு வரி போடுவது. அதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இரண்டு மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறுகிறவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வரி என்று போட்டால் நமக்கு நல்லதொரு வருமானம் கிடைக்கும். நாளுக்கு நாள் நமது நாட்டில் ஜனத்தொகை பெருகிக்கொண்டே போகிறது. 1961-ல் இன்னும் இதைவிட அதிகமாகும். ஆகவே, இனிமேல் அதிகப்படியாக குழந்தைகளைப் பெறுகிறவர்களுக்கு வரி போட வேண்டும். அப்படி ஒரு வரி போட்டிருந்தால் அதை நான் வரவேற்றிருப்பேன். எதிர்கட்சிகாரர்கள் சொல்வதற்கு நான் ஒரு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. வடக்கு பக்ரா நங்கல், தெற்கு சக்கரைப் பொங்கல் என்று சொல்கிறார்கள். அதை சட்டசபையிலும் சொல்வார்கள் என்று நினைத்தேன். பக்ரா நங்கல் மூலம் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு கரும்பும் உற்பத்தி செய்கிறார்கள், நெல்லும் உற்பத்தி செய்கிறார்கள். அவைகளைக் கொண்டு சர்க்கரைப் பொங்கல் தயார் செய்யலாம். இதில் கேலி செய்ய என்ன இருக்கிறது? சர்க்கரை பொங்கலைப் போன்ற ஒரு பட்ஜெட்டை நமது நிதியமைச்சர் அவர்கள் அளித்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். காஞ்சீபுரம் அங்கத்தினர் அண்ணாதுரை முதலியார் அவர்கள் ஒன்றிரண்டு காரியங்களைச் சொன்னார்கள். குயவர்களுக்கு மண்பாண்டத் தொழில், குறவர்களுக்கு கயிறுத் தொழில் என்று. பின்தங்கிய நிலையில் இருக்கிற குறவர்களையும், குயவர்களையும் மறக்காது அவர்களையும் இதில் சேர்த்திருப்பது கண்டு புகழாமல் இருக்க முடியுமா? அடுத்தபடியாக, சென்னை கார்ப்பரேஷனுக்கு 85 லட்சம் ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள் நமது அரசாங்கம். அவர்களுக்கு ஏன் கடன் கொடுத்தார்கள், அவர்களிடம் என்ன திட்டமிருக்கிறது என்று கொடுத்தார்கள் என்று கேட்கிறேன்? 14 லட்சம் ஜனத்தொகையுள்ள கார்ப்பரேஷனுக்கு 85 லட்சம் ரூபாய் கடன் கொடுத்தால், அதில் கால் பாகம் 4 லட்சம் ஜனத்தொகையுள்ள எங்கள் மதுரைக்கு ஏன் 25 லட்சம் ரூபாய் கொடுக்கக்கூடாது, அந்தப் பங்கீடுபடி? ஏதோ கொடுத்து விட்டார்கள், சென்னை தலைநகரம்

என்பதற்காக. அப்படி கொடுக்கப்பட்ட தொகை சரியானபடி செலவு செய்யப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். இந்த வருடம், கொசுக்கடி பிடுங்கித் தின்கிறது, ஹாஸ்டலில். கொசுத் தொல்லையை ஒழிப்பதற்கு அதிலிருந்து செலவு செய்யவேண்டும். அடுத்தபடியாக, கூவம் சாக்கடையின் நாற்றத்தை சகிக்க முடிய வில்லை. அந்த நாற்றம் சமீபத்தில் அதிகமாகியிருக்கிறது. அதைப் போக்குவதற்கு ஏதாவது செலவு செய்யப்படுகிறதா? சர்க்கார் கொடுத்திருக்கிற ரூபாயை அவர்கள் சரியாக செலவழிக் கிறார்களா என்று கவனிக்க வேண்டும். சினிமா படம், கலர் படம் ஒன்று எடுத்துவிட்டோம் என்று கூறிவிடுவார்கள், ஜாக்கிரதை. நம்மைப் பார்த்து கேலி செய்வோருக்கு ஏன் பணம் கொடுக்க வேண்டும்? அந்த ரூபாய் இருந்தால் பற்றாக்குறையைச் சரிக்கட்டி யிருக்கலாமே. அதைக் கவனித்துக் கொள்ளுங்கள். மலத்தைப் பற்றி பேசினார்கள். அதுபற்றி பேசக் கூடாதுதான். ஒரு விவசாயி மகன் என்ற முறையில் 25 வருடங்களாக பல கிராமங் களில் நான் இதைப்பற்றி சொல்லி வந்திருக்கிறேன். இங்கு, மூன்று கோடி, தமிழர்கள் இருக்கிறார்கள். ஜப்பானில் ஒருவன் போகும் மலத்தின் மூலம் ஒரு ஆண்டுக்கு 21 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. நம் நாட்டில் சாதாரணமாக ஒருவன் ஆண்டு ஒன்றுக்கு 720, 730 தடவை கக்கூஸ்க்கு செல்கிறான், அதைக் கணக்குப் போட்டு பார்த்தால் ஆள் ஒன்றுக்கு உரம், மூன்று ரூபாய்க்கு குறையாமல் வருகிறது. அதை மதுரையில் நன்கு பயன்படுத்தியிருக்கிறோம். ஒரு ஆளுக்கு 3 ரூபாய் என்றால் மூன்று கோடி மக்களால், 9 கோடிக்கு மேல் வருமானம் அதிலிருந்து வரமுடியும். அதையும் மறந்து விடாமல் இது எனக்காகவே தயாரித்த பட்ஜெட் போல் தெரிகிறது. இதுபற்றி நான் பொதுக் கூட்டங்களில் பேசியிருக்கிறேன். நிதியமைச்சர் அவர்கள் வந்த போதுகூட சொல்லியிருக்கிறேன். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், சுகாதார இலாகாவிற்கு நான்கு கோடி ரூபாய் ஒதுக்கி யிருக்கிறோம். நான் சொல்வது போல் செய்தால் அதற்கு என்று செலவு செய்யும் அதிகப்படியான தொகை தேவைப்படாது. இது சமயத்தில் ஒரு கதையை சொல்ல அனுமதி கோருகிறேன்.

DEPUTY SPEAKER: தயவு செய்து கதை சொல்லவேண்டாம். பட்ஜெட்டைப்பற்றி பேசுங்கள்.

SRI N. R. THIAGARAJAN: வெளிநாட்டிலிருந்து ஒரு வெள்ளைக்காரன் ஒரு ஊருக்கு வந்தானாம். அப்பொழுது இருட்டி விட்டது. அந்த ஊர்க்காரன் ஒருவனை துணைக்கு அழைத்துக் கொண்டு சென்றானாம். இருட்டி விட்டதால் ஊர் கண்களுக்கு தெரியவில்லை. உங்கள் ஊர் எந்தப் பக்கத்தில் இருக்கிறது என்று பார்த்து சொல்கிறேன் என்றானாம் வெள்ளைக்காரன். உடனே, அந்த ஊர்க்காரன், எங்கிருந்தோ வந்த வெள்ளைக்காரன் எனக்கு அந்த ஊர் எந்தப் பக்கத்தில் இருக்கிறது என்று சொல்லவா என்று நினைத்தானாம். உடனே, அந்த வெள்ளைக்காரன் காற்றை மூக்கிற்குள் இழுத்தானாம். உடனே சொன்னானாம், ஊர் இந்தப்

16th March 1960] [Sri N. R. Thiagarajan]

பக்கத்தில் இருக்கிறது என்று. உனக்கு அது எப்படி தெரிந்தது என்று ஊர்க்காரன் கேட்டதற்கு, அந்த வெள்ளைக்காரன், மல நாற்றம்தான் அடிக்கிறதே, அதிலிருந்து தெரிகிறது என்றானும், இப்படியிருக்கிறது, கிராமங்களின் நிலை. ஆகவே, கிராமங்களில் உள்ள கழிவுப் பொருள்கள் போன்றவைகளைப் பயன்படுத்தக் கூடிய திட்டத்தை கொண்டுவர வேண்டும். அண்ணாதுரை முதலியார் அவர்கள் இதைப்பற்றி பேசுவார்கள் என்று எதிர் பார்த்தேன். (மணியடிக்கப்பட்டது). முடித்துக்கொள்கிறேன். கூட்டுறவு முறையைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன். நான் ஒரு கூட்டுறவு சங்க ஆண்டு விழாவில் கலந்துகொண்டு பேசினேன். அப்பொழுது அதன் நிர்வாகிகள், 13 லட்சம் ரூபாய் லாபம் வந்திருப்பதாக கூறினார்கள். அதற்கு, நான் சொன்னேன், கூட்டுறவு சங்கங்கள், லாபம் கிடைக்கும் நோக்கத்துடன் நடத்தப்படக் கூடாது. மற்ற வர்த்தகர்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்களே, அதேபோல் கூட்டுறவு சங்கங்கள் லாபம் அடைய முயற்சிக்கக் கூடாது. லாபத்திற்காக அல்ல கூட்டுறவு முறை ஏற்பட்டுள்ளது. லாபத்தை எதிர் நோக்காது நடத்த வேண்டுமென்று கூறினேன். ஆகவே, கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் நடப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri B. DORAISAMI REDDIAR:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதலில் தங்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு இந்த பட்ஜெட் மீது சில வார்த்தைகளைப் பேச முன்வந்துள்ளேன். எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன ஒன்றிரண்டு விஷயங்களை முதலில் குறிப்பிட விரும்புகிறேன், இல்லையென்றால் பின்னால் மறந்து போகும். குழந்தைகள் உற்பத்தி விஷயத்தில் வரி போட்டால் நன்றாக இருக்கும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அது நல்ல பாயின்ட்தான். உச்ச வரம்பு நிலத்திற்கு வரும்போதே இதற்கும் உச்சவரம்பு கொண்டு வந்துவிடலாம். அதை மீறுபவர்களுக்கு ஏதாவது அபராதத்தையும் போடலாம். ஆனால் இவ்விதம் சர்க்கார் அபராதம் போடுவதினால் மட்டும் குழந்தைகள் உற்பத்தி நின்றுவிடாது, அபராதம் தானே கட்டவேண்டும் என்ற எண்ணத்தில் குழந்தைகள் உற்பத்தியை யாரும் நிறுத்திக்கொள்ள மாட்டார்கள். (சிரிப்பு.) இது தவிர ஜலமல விஷயத்தைப்பற்றி பேசும்போது, இது மிகவும் ஆபாசமாக இருக்கிறது என்று எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் சொல்லிவிட்டு அவர்களே இதைப்பற்றி விவரமாக சொல்லியும் விட்டார்கள். அவர்கள் ஏதோ பழைய காலத்தில் கூழ்குடித்துவிட்டு இருந்த காலத்தில்தான் 800 தடவை போகிறார்கள் என்று கணக்கை சொல்லியிருப்பார்கள் என்று நம்புகிறேன். இப்போது நாம் காப்பி சாப்பிடுகிறோம், இந்த காலத்தில் இரண்டு நாளைக்கு ஒரு தடவை வெளிக்கு போவதே கஷ்டமாக இருக்கிறது . . .

11-30 a.m.

[16th March 1960

DEPUTY SPEAKER : தயவு செய்து பட்ஜெட்டைப்பற்றி பேசுங்கள், இம்மாதிரிப்பட்ட விஷயங்களைப்பற்றி எல்லாம் பேசாமல் இருப்பதுதான் நல்லது.

SRI B. DORAISAMI REDDIAR : நான் பேசுவதற்கு முன்னால் இதைப்பற்றி பேசப்பட்டது. அதனால்தான் நானும் பேச வேண்டி யிருந்தது. இந்த நிதிநிலை அறிக்கையில் ஒன்றிரண்டு கருத்துக்கள் கூறவிரும்புகிறேன். தமிழில் முக்கியமாய் இருக்கின்ற திருக் குறளில் முதலில் என்ன இருக்கிறது என்றால் "அகர முதலெழுத் தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்று குறிப்பிட்டிருக் கிறது. எழுத்துக்கு முதலில் "அ" என்றிருப்பது, உலகுக்கு கடவுள் பகவன் என்றிருப்பது போல் ஆகும். அதனால்தான் பகவன் முதற்றே உலகு என்று கூறப்பட்டிருக்கிறது. அதே போன்று பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு முதலிடம் கொடுக்கப்பட் டிருக்கிறது. விவசாயத்தை நம்பி பொருளாதாரத் துறை வளர வேண்டும் என்றும் பெருமையோடு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் விவசாயத்தைப்பற்றி பெருமைப்படுத்தி சொல்லி யிருப்பதில் எந்த தவறும் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனால் இவை எல்லாம் ஏட்டளவில், ஏட்டுச் சுரைக் காயாகத்தான் இருக்கிறதே தவிர இலக்கு ஒன்றும் வருவதாகக் காணோம். நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக எவ்வளவோ செலவு செய்யப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் பக் கத்தில் "சுருலிமலை பால்ஸ்" என்ற ஒரு திட்டம் இருந்து வந்தது. இப்போது 40 அடி ஆழத்திற்கு கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. அதில் தண்ணீர் கிடையாது. வடஆற்காடு ஜில்லாவில் எல்லாம் இம்மாதிரி வெட்டினால் வேண்டிய அளவு தண்ணீர் கிடைக்கும். ஆனால் எங்கள் பகுதியைப் பொறுத்தளவில் 100-க்கு 90 பங்கு நிலங்களும் தண்ணீர் வசதியில்லாத முறையில்தான் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கு ஏதோ புள்ளிவிவரங்களை எல்லாம் தந்து, சில பாயின்ட்களை எல்லாம் சொல்லி, விவசாயம் மிகவும் முற்போக்கு அடைந்திருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. மேலும் விவசாயிகளுக்கு காட்டப்பட்டிருக்கும் அனுகூலங்களை எல்லாம் பார்த்தால் உண்மையில் இவைகளில் விவ சாயிகள் 100-க்கு பத்து பங்குதான் பெறுகிறார்கள் என்பது தான் என்னுடைய கருத்து. விவசாயிகளுக்குப் போதுமான கடன் வசதிகள், உரங்கள், இம்மாதிரிப்பட்ட எத்தனையோ உதவி தேவையாய் இருக்கிறது. ஆனால் சர்க்காரிடமிருந்து இதற்கு வேண்டிய உதவி செய்கிறார்கள் என்பது உண்மையாக இருந்தா லும்கூட, பெரும்பாலான விவசாயிகள் பிளாக் மார்க்கட்டில் தான் உரங்களை எல்லாம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு முறையில் என்னென்னவோ திட்டங்கள் போட்டு உதவி செய்து வருவதாக தெரிகிறது. ஆனால் கூட்டுறவு ஸ்டோர்களில் போய் கேட்டால் "வந்த உடனே செலவாய் விட்டது" என்று சொல்லிவிடுகிறார்கள். அங்கு வந்தால்தானே இருக்கும். வருவ தற்கு முன்னாலேயே வெளியே போய்விடுகிறது. இது தவிர 'ஃபுட் ப்ரொடக்ஷன்" என்று சொல்லக்கூடிய இலாகா தண்ணீர் இல்லாத

16th March 1960] [Sri B. Doraisami Reddiar]

குளங்களிலுள்ள கரையை எல்லாம் உயர்த்திக்கொண்டிருக்கிறூர்கள். அந்த குளத்தில் இப்போது இருக்கிற கரையே போதும், ஏனென்றால் தண்ணீர் வருவது என்பது நிச்சயமில்லாத நிலையில் இருக்கிறது. பழைய ஜாகீர்தார், ஜமீன்தார் ஆண்ட காலத்தில் எல்லாம்—எங்களூர் ஜாகீர்தார் இடங்களாக இருந்தது—அப்போது இருந்து வந்த ஏரிகளில் கசக்கிணறுகள் வெட்டினார்கள். அதாவது தண்ணீர் இல்லாத காலத்தில் ஊற்று மூலம் இந்த ஏரிகளில் தண்ணீர் இருக்கும். அதன் மூலமாக இரண்டு மாதத்திற்கு மேல் கிடைக்கும்படியான ஒரு வசதியை செய்து கொடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது கரையை உயர்த்துவதற்காகவே எவ்வளவோ பணம் செலவு செய்யப்படுகிறது. ஆகவே முன்னால் ஏற்படுத்திக் கொடுத்தது போன்று ஊற்றுக்கிணறுகளை ஏற்படுத்திக் கொடுப்பதாக இருந்தால் வசதியாக இருக்கும். இப்போது இருக்கும் ஊற்றுக் கிணறுகள் எல்லாம் பாழடைந்து போய் கிடக்கின்றன. மழை பெய்யும்போது ஏதாவது கொஞ்சம் தண்ணீர் கிடைக்கும்—அதுவும் சரியான காலத்தில் மழை பெய்வது என்பது மிகவும் கஷ்டம்—இவ்விதம் மழை வருகின்ற சமயத்தில் ஏரியில் கொஞ்சம் தண்ணீர் வந்திருக்கும். அந்த நேரம் பார்த்து அங்கிருக்கின்ற கணக்குபிள்ளை இந்த ஏரித் தண்ணீர் மூன்று மாதங்களுக்குப் போதும் என்று எழுதி விடுவார்கள். இதை வைத்துக்கொண்டு சர்க்காரும் கணக்கு சேகரித்து விடுகிறார்கள். உண்மையில் கணக்குப்பிள்ளை அங்கு போய் பார்ப்பதுகூட கிடையாது, யாரிடமாவது கேட்டுவிட்டு ஏதோ எழுதி அனுப்பிவிடுவார்கள். ஆகவே, இந்தக் கணக்கை எல்லாம் ஒருபக்கம் வைத்து விட்டு, இப்போதுள்ள ஊற்றுக் கிணறுகளை எல்லாம் இன்னும் நல்ல முறையில் சீர்படுத்திக் கொடுப்பதாக இருந்தால் நல்லதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. கால் நடை உற்பத்தியைப் பொறுத்த வரையில் திட்டக்காலத்தில் இதற்கான கேந்திரங்கள் 18 என்றும், அதில் கடந்த ஆண்டு 4 என்றும் இனிமேல் 5 ஏற்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. முக்கியமாக விவசாயிகளுக்கு வேண்டியது கால் நடைகள்தான். ஆனால் எந்த கிராமத்தில் இவைகள் எல்லாம் ஏற்படுத்தப்படும் என்று சொல்லப்படவில்லை. அவ்விதம் சொல்லப்பட்டிருந்தால் இன்னின்ன கிராமத்தில் அவசியமில்லை, இதற்குத் தேவையான இந்த இடங்களில் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்வதற்கு ஏதுவாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

(Sri K. Sattanatha Karayalar in the Chair.)

தவிரவும், விதைப்பண்ணைகளில் ஏற்பட்டிருக்கின்ற ஆபாசமானது வேறு எதிலும் ஏற்படவில்லை என்று நினைக்கிறேன். சர்க்கார் நடத்துகிற பண்ணைகளில் எல்லாம் 100-க்கு 10-ல் கூட லாபம் கிடையாது. விதைப்பண்ணைகளில் வாங்கி உபயோ

இக்கும் விதைகள் எல்லாம் முளைப்பதே கிடையாது. நான் எவ்வளவோ விதைகள்—கத்திரி, மிளகாய் விதைகள் எல்லாம் வாங்கிப் பார்த்திருக்கிறேன். ஒன்றும் பிரயோசனமில்லை என்றுதான் சொல்ல முடியும். தனிப்பட்டவர்கள் நடத்துவதாக இருந்தால் சோம்பல் இல்லாமல் நன்றாகப் பாதுகாத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் சர்க்கார் விதைப் பண்ணைகளில் ஏதோ ஆளை வைத்துக்கொண்டு வேலையை செய்கிறார்கள். அதற்கு மேல் இருக்கின்ற ஆபீசர்கள் இதைப்பற்றி நன்றாக கவனிப்பது கிடையாது. ஏதோ அவர் எல்லாம் சரியாக போட்டாய் விட்டதா என்று கேட்பார். அவர்கள் கேட்பதற்கு முன்னாலேயே கீழே இருக்கின்றவர்கள் இது எட்டு காய்ச்சல் வரை காய்ந்தாய் விட்டது என்று சொல்லி விடுவார்கள். பின்னால் மூட்டையில் கட்டி வைத்து விடுவதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. இப்படிப்பட்ட விதைகளைத்தான் நாம் வாங்க வேண்டியதாக இருக்கிறது. இவ்விதம் விதைப் பண்ணைகளில் நடந்து கொண்டிருக்கிறது.

TEMPORARY CHAIRMAN (Sri K. Sattanatha Karayalar) : உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நேரம் ஆய்விட்டது.

SRI B. DORAISAMI REDDIAR : விதை முளைத்து விடுவதைப் பார்க்கவேண்டாமா? சீக்கிரமாகவே முடித்துக்கொள்கிறேன். ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது சாப்பிட்டு விட்டு புளித்த ஏப்பம் விட்டுக்கொண்டிருப்பவனுக்கு மேலும் சாப்பாடு கொடுப்பது போல் தஞ்சாவூர் ஜில்லாவிலேயே அமெரிக்க பொருள் உதவி மூலம் விவசாயத்திற்காக ஒரு திட்டம் நிறைவேற்றப்படவிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த மட்டில் அங்கு நல்ல மழை பெய்து தண்ணீர் எல்லாம் வந்து அரை அடி அளவுக்கு நல்ல வண்டல் நிறைந்த இடமாக இருக்கிறது. அப்பேர்ப்பட்ட ஊரில் மேலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியது அவசியமில்லை. ஏரியில்லாத இடமாக பார்த்து, தண்ணீர் வசதியில்லாத இடமாகப் பார்த்து, வட ஆற்காடு, ராமனாதபுரம் போன்ற ஜில்லாக்களில் வசதி இல்லாத இடமாகப் பார்த்து, அந்த இடங்களில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். வட ஆற்காடுக்கு கிழக்குப்பக்கமாக உள்ள பிரதேசங்களை எல்லாம் பார்த்தால் ஒரே கரம்பாக இருக்கிறது. அதோடு மத்திய பிரதேசங்களில் கொடுக்கப்படும் உதவிகளை எல்லாம் எங்கள் பகுதிகளுக்கும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு—தலைவர் அவர்கள் என்னுடைய நேரம் முடிந்துவிட்டது என்று கையைக்காட்டிக் கொண்டேயிருக்கிறார்கள்—ஆகவே இதோடு முடித்துக் கொள்கிறேன்.

SRI S. PANDIARAJ : அவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டசபையில் இன்று எனது முதல் பேச்சு கனம் நிதி மந்திரி அவர்களால் அளிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையை ஆதரித்துப் போற்றுவதாக இருப்பது எனக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது.

16th March 1960] [Sri S. Pandiaraj]

இப்பொழுது சட்ட சபையின் முன்பு வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தை நான் பெரிதும் வரவேற்கிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் எதுவும் இல்லாததோடு, பழைய வரிகளில் சிலவும் நீக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இது மிகவும் முன்னேற்றகரமான ஒரு வரவு-செலவுத் திட்டம் என்பதில் ஐயமில்லை. இம்மாதிரியான உயர்ந்த வரவு-செலவுத் திட்டத்தைக் கொண்டு வந்த கனம் நிதி அமைச்சர் அவர்களை நாடு பாராட்டக் கடமைபட்டிருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முடிவடைய இன்னும் சிறிது காலம் இருக்கையிலேயே திட்டத்தின் பல்வேறு குறிக்கோள்கள் அபிவிருத்தி பெற்று லட்சிய அளவை நாடிச் செல்வது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தின் அறி குறியைக் காட்டுவதாக விளங்குகிறது. உணவு தானியங் களின் உற்பத்தி பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களாலும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களாலும், போதிய உரம் விவசாயிகளுக்கு அளித்து வருவதாலும் முன்னேறி வருவது குறிப்பிடத் தக்கதாகும். வரண்ட பிரதேசமாகிய எங்கள் ஆலங்குளம் தொகுதியில் விவசாயிகளுக்குக் கிணறுகள் வெட்ட உதவிகள் அளித்தும், சிறிய நீர்ப்பாசனங்கள் அதிகம் நிறுவியும் புஞ்சைப் பயிர் வளர்ச்சி பெருகுவதற்குப் போதிய நடவடிக்கைகளை எடுத்துதவ அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கள் விவசாயிகள் மிகவும் ஏழைகள். பொருளாதாரத்தில் மிகவும் பிற்போக்கானவர்கள். பல குளங்கள் சீரமைக்கப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன. உதாரணமாக எங்கள் தொகுதியிலே பெரிதான வீராணம் குளம் அதைச் சூழ்ந் துள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி செய்யக் கூடியது. அந்தக் குளம் தற்போது நீண்ட காலமாக மராமத்து செய்யப்படாமல் மண்மேடிட்டுக் கிடப்பதால் அதிகப் படியான தண்ணீர் தேங்குவதற்கு முடியாமல் இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிக்குப் பாசன வசதி மிகவும் குறைகிறது. எனவே, விரைவில் அந்தக் குளத்தை மராமத்து செய்து கொடுக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கத்தின் பரி சீலனையில் இருந்து வரும் ஆலங்குளம் கால்வாய்த் திட்டத்தையும் விரைவில் நிறைவேற்றித் தர அரசாங்கத்தைக் கேட்டுக் கொள் கிறேன். அத்துடன் கனம் அங்கத்தினர்கள் அனைவரும் அறிந்த பம்பையாறுத் திட்டம் பற்றியும் ஒன்று கூற விரும்புகிறேன். இந்தத் திட்டம் பற்றி அரசாங்கம் பல கோணங்களில் நடவடிக்கை எடுத்து வருவது அனைவரும் அறிந்ததே. இந்தத் திட்டம் முற்றுப் பெற்றால் ஆலங்குளம், பழங்கோட்டை, நீலிதநல்லூர் பகுதிகளும், மற்றும் தென்காசி, சங்கரன் கோவில் தாலுகாக்களில் தற்போது பாழாய்க் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் பச்சையாகிப் பலன் தர லாயக்காகும். எனவே, இத்திட்டம் பற்றிய வேலைகளை விரைவுபடுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாய நலத் திட்டத்தின் கீழ் கிராமங்களுக்கு வசதிகள் உண்டாகின்றன. ஆலங்குளம் தொகுதியில் வட்டார வளர்ச்சி வேலைகள் செயல்படுத்தப்பட்டிருந்தாலும் அந்தத் தொகுதியிலுள்ள வீரகேரளம்புதூர், சுரண்டை முதலிய 8 கிராமங்களுக்கு வட்டார வளர்ச்சி வேலைகள் அமுலாக்கப்படாமல் இருந்து வருகிறது. அந்த 8 கிராமங்களுக்கு அந்தத் தொகுதியில் உள்ள மற்ற கிராமங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகையால் அதை விரைவில் செய்து தர அரசாங்கத்தை வேண்டுகிறேன்.

விவசாயிகளுக்கு நல்ல பல வசதிகளைச் செய்யக்கூடிய விவசாய பாங்க் ஒன்றை பழங்கோட்டை பிர்க்காவிலும், நீலித நல்லூர் பிர்க்காவிலும் தனித்தனியாக வைத்துக் கொடுப்பது மிகவும் அவசியம். அதை கவனித்து ஆவன செய்தால் மக்கள் உற்பத்திப் பெருக்கத்தில் கருத்துச் செலுத்த ஏதுவாகும்.

பழங்கோட்டை, நீலிதநல்லூர் பிர்க்காக்களில் நோய்களுக்கான சிகிச்சை வசதியோ, மருத்துவ வசதியோ கிடையாது. இங்குள்ளவர்கள் பல மைல்களுக்கப்பால் இருக்கும் சங்கரன் கோவில், திருநெல்வேலி முதலிய இடங்களையே நம்பி இருக்க வேண்டியதாயிருக்கிறது. இம்மாதிரியான உயிர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி இந்த பிர்க்காக்களில் தாய்-சேய் நல விடுதிகளும், ஆஸ்பத்திரி ஒன்றும் வைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிர்க்காக்களில் உள்ளவர்களுக்கு உயர்தர கல்விக்கான ஒரு வசதியும் கிடையாது. எனவே அரசாங்கம் இந்தப் பகுதியில் ஒரு உயர்தரப் பாடசாலையைக் கூடிய விரைவில் அமைத்துத் தரக் கோருகிறேன். எங்கள் ஆலங்குளம் தொகுதியில் கிராமாந்திர ரோடுகள் மிகவும் சீர்கேடான நிலைமையிலிருக்கின்றன. நமது ராஜ்யத்தில் பல்லாயிரக்கணக்கான கிராமங்களுக்கு மின்சார வசதிகள் அளிக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குறியது. எங்கள் பகுதிகள் கால்வாய்ப் பாசன வசதிகள் இல்லாதவைகளாக இருப்பதால் விவசாய வேலைகளுக்கு மின்சாரம் பயன்படுத்தவேண்டியது அவசியமாகிறது. ஆகவே, மின்சார வசதி செய்து தருவதில் அதிக கவனம் செலுத்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். குடிசைத் தொழில்களில் முக்கியமாக நூல் நூற்றல், தச்சுத் தொழில் முதலியவைகளை ஆலங்குளம் தொகுதியில் பரப்புவதற்கு ஆவன செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையில் இவ்வளவு நேரம் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த அவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்.)

* SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் தாற்காலிக சபைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும்போது உள்ளங்கை நெல்லிக்கனி போல் இருக்கிறது. இது வரையில் இவ்வளவு விரிவாக உரை ஆற்றியது கிடையாது.

16th March 1960] [Sri M. C. Muthukumaraswamy]

இதைப் பார்த்த நேரத்தில் எனக்கு ஒரு சந்தேகம் தோன்று கிறது. இப்படி தெள்ளத் தெளிய சொன்னதன் காரணமாக பலர் இதில் இருக்கிற சாராம்சத்தை ஆராய்ந்து அமைச்சர் அவர்கள் மலத்தில் கூட கவனம் செலுத்தி விட்டாரே என்று சொல்லக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் நினைப்பதெல்லாம் அவர்கள் சொல்லியவைகளை அரசாங்கம் கேட்பதில்லையே என்பது தான். நாடு பிரிக்கப்படவேண்டுமென்று சொன்னதற்கு ஒரு முயற்சியும் எடுக்கவில்லையே, கனரக யந்திரங்களை அமைக்க வேண்டுமென்று சொன்னதற்கு ஒன்றும் செய்யவில்லையே, அணைக் கட்டு கட்டவேண்டும் என்று சொன்னோமே அதற்கும் எதுவும் செய்யவில்லையே என்று இப்போது குறைப்பட்டுக் கொண்டு சொல்லுகிறார்கள். அவர்களை நான் ஒன்று கேட்க ஆசைப்படு கிறேன். அவர்கள் இதைப் பற்றி விளக்குவார்கள் என்று நான் நம்புகிறேன். இவர்கள் சொல்லக்கூடிய பெரிய தொழில் வேண்டி யதுதான். வேண்டாமென்று யாரும் மறுக்கவில்லை. எப்போதும் குதிரைக்கு முன்னால் வண்டியைக் கட்டக்கூடிய பழக்கம் கிடையாது. வண்டிக்கு முன்னால்தான் குதிரையைக் கட்டுவது. கன யந்திரத் தொழில்களை ஏற்படுத்துவதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகளைப் பார்ப்பதற்கு ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது என்று புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை விட்டு விடுகிறார்கள். மேலும் வெளி நாடுகளிலிருந்து நம் நாட்டுக்கு வரக் கூடியவர்களெல்லாம் பிரதமரைக் கண்டு அவர்களிடம் கைகுலுக்குகிறார்களே, தென்னாட்டில் வேலையாக வருகிறவர்கள் தங்களிடம் வருவதில்லையே, திராவிட நாடு பிரிந்து போனால் வருவார்களோ மாட்டார்களோ என்று வருத்தத்தோடு சொல்லு கிறார்களோ என்று எனக்கு ஐயப்பாடு இருக்கிறது.

மேலும் நான் இரண்டொரு விஷயங்களைப் பற்றி பேச விரும்பு கிறேன். நமது அரசாங்கத்தார், 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்பதை உணர்ந்து, முதற்படியாக விவசாயத்தைக் கண்ணும் கருத்துமாக கவனித்து அதற்கு வேண்டியதைத் செய் தார்கள். பெரிய நீர்ப் பாசனத் திட்டங்களையும் சிறு பாசனத் திட்டங்களையும் வகுத்து நிறைவேற்றினார்கள். உரங்களை வினியோ கித்தார்கள். விவசாயத்தில் புது முறைகளைக் கொண்டுவந்திருக் கிறார்கள். இம்மாதிரி விவசாயிகளுக்கு அரசாங்கத்தார் மிகவும் ஊக்கம் கொடுத்திருக்கிறார்கள். மேலும், 1962-ம் ஆண்டிலிருந்து நெய்வேலியிலிருந்து நாம் அதிகமான உரத்தை எதிர்பார்க்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த உரங்களைத் தொடர்ந்து நிலத்தில் போட்டுக் கொண்டே போனால் நிலத்தின் தரம், வளம், என்னவாகுமோ என்ற ஐயம் எனக்கு இருக்கிறது. ஏனென்றால், உதாரண மாக, டயபடீஸ் வியாதிஸ்தர்கள் ஒரு வேளை ஊசி குத்திக்கொள் வார்கள், இரண்டு தடவை ஊசி குத்திக்கொள்வார்கள். இவ்வாறு ஊசி குத்திக்கொள்வதை அதிகப்படுத்திக்கொண்டே போவார்கள். கடைசியில் அவர்கள் சரீரம் பூராவும் விஷமாக ஆகி வைத்தியம் கைவிடப்படும் நிலைமை ஏற்படும். அதே மாதிரி, சாதாரணமாக

இயற்கை உரங்களை விடுத்துப் புது ரசாயன உரங்களை நிலங்களுக்குப் போட்டுக்கொண்டே போனால் பல வருஷங்களுக்குப் பிறகு நிலத்தில் என்ன பலன் ஏற்படுமோ என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. மேலும், இயற்கை உரங்களை அதிகமாகத் தயாரித்தால் அரசாங்கத்திற்குச் செலவும் குறையும். சாதாரணமாக நீண்ட காலமாகப் பயிராகக்கூடிய 'கிளரிசீடியா', புங்கன் முதலிய உரச் செடிகளை விவசாயிகள் கட்டாயம் பயிர் செய்ய வேண்டும் என்று உத்தரவு போடலாம். அவ்வாறு செய்தால் நல்ல பலன் கிடைக்கும். மேலும் அவ்வாறு செய்தால் உரத்திற்காக சர்க்கார் செய்யக்கூடிய செலவும் குறையும்.

தஞ்சாவூர் ஜில்லாவில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் அமெரிக்க போர்டு பவுண்டேஷன் ஒத்துழைப்போடு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் உழுபவர்களுக்கு பாத்தியம் சரியான முறையில் இல்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அந்த ஜில்லாவில் பண்ணையாள் சட்டம் கொண்டுவரப்பட்டது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் அங்கே பண்ணையாட்களே இல்லாமல் போய்விடுவார்கள். சட்டம் மாத்திரம் மிஞ்சும் என்று தோன்றுகிறது. நிலைமை அவ்வாறு இருக்கிறது. அதேபோல, 60 வாரச் சட்டம் கொண்டு வந்த பிறகு, அங்குள்ள மிராசுதார்கள் அத்தனை பேரும் விவசாயிகளை நிலங்களைவிட்டு அப்புறப்படுத்துவதற்கு வதற்கு என்னென்ன சூழ்ச்சிகள் செய்யமுடியுமோ அத்தனை சூழ்ச்சிகளும் செய்துவருகிறார்கள். சுதந்திராக் கட்சியினர் இன்று அங்குள்ள மிராசுதார்களிடம், "நீங்கள் எப்படியாவது வாரந்தார்களிடமிருந்து வாரம், குத்தகைச் சீட்டுகளை தந்திரமாக வாங்கி விடுங்கள்" என்று சொல்லிவருவதாகவும் அறிகிறேன். இந்த நிலையில் அங்குள்ள விவசாயிகள் அத்தனை பேருக்கும் எப்போது கதிமோட்சம் வருமோ, தெரியவில்லை. அவர்களைப் பாதுகாக்க அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்த விவசாயிகள் பேரில் அடிக்கடி கேஸ்கள் நடந்து வருகின்றன. கோர்ட்டுக்குச் செல்லும் போது அவர்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படுகிறது. ஆதாரம் இல்லாததால் விவசாயிகள் நிலத்திலிருந்து நீக்கப்படுகிறார்கள். பஞ்சாயத்து நிர்வாகத்தை நல்ல முறையில் கொண்டுவர விரும்பும் இந்த அரசாங்கம் அங்குள்ள சமரசக் கோர்ட்டுகளில் இந்தக் கேஸ்கள் விசாரிக்கப்படுவதற்கு வகைசெய்வார்களானால், ஏழை விவசாயிகள் அதிகச் செலவு செய்யாமல், பத்திரங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நல்ல சாட்சிகளும் ஆதாரங்களும் செற்று அனுகூலமான தீர்ப்புகளைப் பெற முடியும்; அந்தக் கோர்ட்டுகளில் பொதுமக்கள் வந்து உண்மையைச் சொல்லி இவர்களுக்கு நன்மை ஏற்பட உதவுவார்கள். எனவே அரசாங்கம் அதற்கானபடி சட்டம் மாறுதல் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

16th March 1960] [Sri M. C. Muthukumaraswamy]

விவசாயத்தைப் பெருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் அதிகமாக உற்பத்தி செய்த விவசாயிகளுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு நாட்களுக்கு முன்புதான் அந்தப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. பரிசுபெற்றவர்கள் வசதியுள்ள நிலச்சுவான்தார்களேதவிர, உழைக்கும் விவசாயிகள் அல்ல. வயல்களில் இறங்கி உழைத்தவர்களும் உரங்களை வயல்களில் போட்டவர்களும் விவசாயிகள்தான். எனவே தனவந்தர்களாக இருக்கும் மிராசுதார்களுக்கு தங்கத்தாலான பரிசுகளைக் கொடுத்தாலும், வயல்களில் கஷ்டப்பட்டு உற்பத்தியைப் பெருக்கிய விவசாயிகளுக்கு சாதாரண பித்தளை உலோகத்திலான பரிசுகளை யாவது வழங்கினல் நன்ருக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

பில்டர் பாயிண்ட் கிணறுகளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்ற வருஷம் என் வயலில் பில்டர் பாயிண்ட் முறையைக் கையாண்டேன். இந்த முறையில் 21 அடிக்கு மேலே தோண்ட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் 28, 30 அடிகளுக்குள் தண்ணீர் வந்துவிடும். பில்டர் பாயிண்ட் கிணறு முறையை அவ்வளவு ஆழம் தோண்டக் கூடிய அளவுக்கு அபிவிருத்தி செய்தால், தஞ்சாவூர் ஜில்லாவில் அந்த முறை நல்ல பலன் அளிக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். மேட்டூர் அணை கட்டப்படுவதற்கு முன்பு தஞ்சாவூர் ஜில்லாவில் ஓடும் ஆற்றுத் தண்ணீரைக் கையில் எடுத்துப்பார்த்தால், அதில் தழை சத்துள்ள பொருள்கள் நிறைய இருக்கும். அந்தத் தண்ணீரை அப்படியே குடிக்கக்கூட முடியாது. ஆனல் மேட்டூர் அணை கட்டப்பட்ட பிறகு தண்ணீரில் அந்த மக்கிய எருப் பொருள்கள் வருவது நின்று விட்டது. இப்போது மேட்டூர் அணையில் சாதாரணமாக 46 அடிக்கு வண்டல் தேங்கியிருப்பதாக தெரிகிறது. அந்த வண்டலை குழப்பிவிட்டு வெளியேற்றினல் அதில் உள்ள வண்டல் முன்போல் தஞ்சாவூர் பகுதியில் வரும் தண்ணீல் வரும். அதற்கான முறையில் வண்டலை குழப்பி தண்ணீருடன் கலக்கச் செய்வதற்கான வழியை நிபுணர்களைக் கொண்டு கண்டுபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri M. KARUNANITHI :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, 1960-61-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் பேரில் என் கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன். இந்த அறிக்கையை பல ஆளும் கட்சி அங்கத்தினர்கள் ஆதரித்துப் பேசினர்கள். குறிப்பாக, தேனீ தொகுதி அங்கத்தினராகிய ஸ்ரீ தியாகராஜ நாயக்கர் இந்த அறிக்கை சர்க்கரைப் பொங்கலாகத் தித்திக்கிறது என்று குறிப்பிட்டார். நாங்களெல்லாம்

[Sri M. Karunanithi] [16th March 1960

இந்த அறிக்கையைப் படித்துப்பார்த்தோமே தவிர தின்று பார்க்கவில்லை. (சிரிப்பு.) ஒருவேளை, அவருக்கு இது தித்திப்பாக இருக்கக்கூடும். மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் ஆண்டுதோறும் நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது, 'இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சபையைக் கேட்டுக் கொள்கிறேன்' என்று வழக்கமாக முடிப்பார். ஆனால் இந்த ஆண்டு அவர் இந்த அறிக்கையை முடிக்கும்போது 'இந்த அறிக்கையை சபை ஏற்றுக்கொள்ளும் என்ற முழு நம்பிக்கையோடு முடிக்கிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார். கனம் அமைச்சர் எந்த ஆண்டிலும் இல்லாமல் இந்த ஆண்டு இந்த நம்பிக்கையைப் பெற்றதற்குக் காரணம் என்ன என்று நான் எண்ணிப்பார்க்கும் போது, இந்த வருஷம் புது வரி எதுவும் இல்லை என்பதாலும், அழுகும் பொருள்களின் மீது ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த வரி இப்போது நீக்கப்படுகிறது என்பதாலும் இந்த அறிக்கை மக்கள் மன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றுவிடும் என்று அவர் கருதி யிருப்பார் என்று நான் நினைக்கிறேன். புது வரிகள் போடாமல் இருப்பதுடன் இருக்கும் வரியையும் நீக்குவதாகக் கூறுவதற்குக் காரணம் என்ன என்று சிந்திக்கும்போது ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். ஒட்டகத்தின் மீது நிறையப் பாரத்தை ஏற்றி விட்டு அதற்கு மேல் இரண்டு கற்களையும் வைத்துவிட்டு, எடுப்ப தற்காகவே வைத்திருந்த கற்களை சிறிது நேரத்திற்குப் பிறகு எடுத்துவிடும்போது ஒட்டகம் எழுந்து நடக்கும் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அதேபோல மதிப்பிற்குரிய நிதி அமைச்சர், மக்கள் மன்றத்தையும் ஒட்டகத்தைப்போல எண்ணிக்கொண்டு வரிப் பளுவை அதிகமாக அவர்கள் மீது சுமத்திவிட்டு பிறகு ஏதோ இரண்டு மூன்று வரிகளை எடுத்துவிட்டதாகக் கூறுகிற காரணத்தினால் மக்கள் நிம்மதி அடைந்துவிடுவார்கள் என்று எதிர்பார்ப்பாரானால் அது மிகவும் வருந்தத்தக்கது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் நமது நிதி அமைச்சர் சமர்ப்பிக்கும் எல்லா நிதி நிலை அறிக்கைகளிலும் வழக்கமாக விலைவாசி என்ற பகுதி முதலில் இடம் பெறும். இந்த வருஷ நிதி நிலை அறிக்கையில், மதிப்பிற் குரிய நிதி அமைச்சர் விலைவாசியைப் பற்றி முதலிலேயே கூறாமல், இந்த அரசாங்கத்தால் செய்யப்படும் அரிய பெரிய காரியங்கள் அத்தனையையும் 36 பக்கங்கள் வரையில் எடுத்துரைத்துவிட்டு கடைசியில் அந்த சோகக் கதையை "க்ளைமாக்ஸ்" கட்டத்தில், விலைவாசி, சம்பள உயர்வு இவைகள் ஒரு சுழல் போல இருக் கின்றன என்று கூறியிருக்கிறார். இதுவரையில் முன்னால் சொல்லப் பட்டுவந்த விலைவாசிச் சங்கடம் இந்தத் தடவை ஏன் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது? விலைவாசிச் சங்கடத்தைப் பற்றி இந்த ஆண்டுமட்டும்தான் இத்தகைய குரல் எழுப்பியிருக்கிறார்களா? அல்லது ஆண்டு தோறும் இந்தக் குரல் இந்த மன்றத்தில் எழுப்பப் படுகிறதா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். 1957-58-ம் வருஷ நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்த இதே நிதி அமைச்சர் கனம் ஸ்ரீ சுப்ரமணிய கௌண்டர் அவர்கள் அந்த அறிக்கையில்

16th March 1960] [Sri M. Karunanithi]

"விளைச்சல் பெருகியதின் காரணமாக விலைவாசிகள் குறைந்திருக்க வேண்டும். ஆனால், இந்த ஆண்டில், விலை அதிகமாக உயர்ந்துள்ளது. . . . உணவுப் பற்றாக்குறை இல்லாத காலத்தில், வேளாண்மையே முக்கிய தொழிலாகவுள்ள ராஜ்யத்தில், விவசாய விளைபொருள்களின் விலை உயர்வு பொதுவாக வரவேற்கத் தக்கதாகக்கூட இருக்கலாம். ஆனால் நாட்டில் பற்றாக்குறையின் காரணமாக, உணவுப் பொருள்களின் விலை உயர்ந்தால் அது மிகவும் அபாயகரமானது. நாடு முழுவதையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்பொழுது அரிசிப் பற்றாக்குறை ஓரளவு உயர்ந்துள்ளது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதும் நாளுக்குநாள் கஷ்டமாகிக்கொண்டு வருகின்றது. இந்நிலையில் உணவு நிலைமையை அரசாங்கம் விழிப்புடன் கவனித்துவருகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். 1958-59-ம் வருஷ நிதி நிலை அறிக்கையில் " . . . நல்ல அறுவடையின் பயனாக விலைவாசிகள் இப்பொழுது ஸ்திரமாகி வருகின்றன. இருந்த போதிலும் நாம் இன்னும் நிலைமையை விழிப்புடன் கவனிக்க வேண்டிய அவசியம் இருந்து வருகிறது" என்று குறிப்பிட்டார்கள். 1959-60-ம் வருஷத்திய அறிக்கையில் " . . . விலைவாசிகளின் உயர்வு இன்னும் பெரும் பிரச்னையாக வேயிருந்து வருகிறது. அதிலும் முக்கியமாக உணவுப் பொருள்களின் விலையேற்றம் கவலைக்கிடந்தரக்கூடியதாக உள்ளது. தானிய மொத்த விலைக் குறி எண், 1957 டிசம்பரில் 512-ல் இருந்தது. 1958 டிசம்பரில் 569 அளவுக்கு உயர்ந்தது . . . இதைப் பரிசீலனை செய்த தேசிய அபிவிருத்திக் குழு, உணவு தானியங்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் தானிய மொத்த வியாபாரம் அனைத்தையும் சர்க்காரே எடுத்துக் கொண்டு நடத்துவது தான் வழியென்ற முடிவிற்கு வந்திருக்கிறது . . ." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலும் " . . . விலைவாசிகளை ஓரளவுக்குக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை மறுமுறையும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்" என்று கூறியிருக்கிறார். 12-00 noon.

விலைவாசி உயர்வைப்பற்றி ஆண்டுதோறும் பாடிய பல்லவியே மீண்டும் மீண்டும் பாடப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் இதே பல்லவியைப் பாட, விலைவாசி உயர்ந்து கொண்டே போவது சங்கடமாகத்தான் இருக்கிறது என்பதைச் சொல்ல வீட்டிலே இருக்கக்கூடிய பாட்டியே போதும்; அதற்கு ஒரு பாராளுமன்ற அமைச்சர் தேவையில்லை என்று மிகமிக வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். கரும்பு சாகுபடி, எண்ணை வித்துக்கள், முந்திரி, தேங்காய், விவசாய வளர்ச்சி, மண் வளப் பாதுகாப்பு, நீர்ப்பாசன வசதிகள், சமுதாய நலத் திட்டங்கள் என்று வரிசையாகத் தாங்கள் செய்திருக்கக்கூடிய காரியங்களைச் சொல்லி விட்டு, இவ்வளவுக்கும் பிறகு "விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்துகிறேன்" என்று கூறுகிறார். இது எப்படி இருக்கிறது என்றால்

[Sri M. Karunanithi] [16th March 1960

8 டாக்டர்கள் பார்த்து 7 லட்சம் ரூபாய் செலவாகியும் நோய் இன்னதென்று கண்டு பிடிக்க முடியவில்லை ; ஆகவே ஆள் காலி" என்பதைப்போல் இருக்கிறது. பார்த்தவர்கள் டாக்டர்களா என்று சந்தேகம் மக்களுக்கு ஏற்படுகிறது. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று 5, 6 வருஷ காலமாக அமைச்சர்களும் மக்களோடு சேர்ந்து பேசிவருகிறார்கள். மக்கள் பிரதிநிதிகளைப் பார்த்து விலைவாசி குறைய வழியில்லையா என்று கேட்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் அமைச்சர்களைப் பார்த்து விலைவாசி கட்டுப்படுத்தப்படுமா என்றும் அமைச்சர்கள் மக்கள் பிரதிநிதிகளைப் பார்த்து விலைவாசி கட்டுப்படுத்தப்படுமா என்றும் கேட்பதே ஒரு பெரிய சுழலாக இருக்கிறதே தவிர, விலைவாசியும், ஊதிய உயர்வும் பெரிய சுழலாக இல்லையென்று குறிப்பிட விரும்புகிறேன். மத்திய சர்க்கார் பொருள் துறை வேலையோடு பிணைக்கப்பட்டிருப்பது இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாத காரணங்களில் ஒன்றாகக் காட்டப்படுகிறது. அப்படியானால் மத்திய சர்க்கார் பொருள் துறை பிணைப்பிலிருந்து இந்த மாகாணம் விலகிக் கொள்ளுமானால், இந்த மாகாணம் விடுதலை பெறுமானால், நிச்சயமாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை அமைச்சரவை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்கள் பக்கத்துக்குப் பக்கம் புள்ளி விவரங்களைக் கடுகு தாளிப்பதைப்போல் கொட்டி ஏட்டை நிரப்பி விடுவதால் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். அவ்வாறு காட்டப்படுகிற புள்ளி விவரங்களை நாங்கள் நம்ப வேண்டுமென்று சொல்லுகிறார்கள். உள்ளபடியே அந்தப் புள்ளி விவரங்கள் ஆதாரபூர்வமானவையா? நம்பிக்கைக்கு உரியனவா? உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதிர்ச்சி தரக்கூடிய முரண்பாடு என்று சொல்ல மாட்டேன். 1959-60-ம் ஆண்டு அறிக்கையில் 1956-57-ம் ஆண்டு 2·6 லட்சம் டன் உரம் வழங்கப்பட்டது என்று கூறப்பட்டிருக்கிறது. இப்போது சமர்ப்பித்த அறிக்கையில் 1956-57-ம் ஆண்டில் 2·53 லட்சம் டன் வழங்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முரண்பாடு சாதாரணமானதுதான். ஆனால் இது புள்ளி விவரம் என்ற மயக்கத்திரையைக் கிழிக்கப் பயன்படுகிறதல்லவா ? புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு இந்த நாட்டு மக்களை ஏமாற்ற, இந்த நாட்டு மக்களுடைய கண்களை மூட, முயற்சி செய்கிறது என்று நான் இந்த அமைச்சரவையைக் குற்றம் சாட்டுகிறேன். கோழிப் பண்ணைகளில் உள்ள கோழிகள் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எத்தனை என்று கேட்டால், மந்திரி மாவட்ட அதிகாரியைக் கேட்கிறார். மாவட்ட அதிகாரி கிராம அதிகாரியைக் கேட்கிறார். கிராம அதிகாரி தலையாரியைக் கேட்கிறார். தலையாரி இந்த ஊரிலே 15 கோழிகள் இருக்கின்றன என்று சொன்னால் அந்தப் புள்ளிவிவரம் மந்திரி கையில் வந்து சேருவதற்குள் 4 கோழிகள் பிரியானியாகக் கொதித்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட புள்ளிவிவரங்களை, கவைக்கு உதவாத புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த பட்ஜெட்டை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொன்னால் யாரும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

16th March 1960] [Sri M. Karunanithi]

உணவு உற்பத்தியை பெருக்க சரியாக திட்டம் இல்லை. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல சிறிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றப் பணம் இல்லை. பணம் கேட்டால் வடக்கத்திச் சர்க்காருக்குக் கொடுக்க மனம் இல்லை. இப்போது பரம்பிக்குளத் திட்டம் குழம்பிக் கொண்டிருக்கிறது. இன்னும் நீங்கள் சொல்லுகிற கட்டளைக் கால்வாய், புல்லம்பாடிக் கால்வாய், மேட்டூர் கால்வாய் இவைகளைப் பற்றிய 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை சென்னை சர்க்கார் மீறிவிட்டது என்று மைசூர் சர்க்கார் குற்றம் சாட்டுகிற முறையில், மத்திய சர்க்கார் அதை ஏற்று எப்படித் தீர்ப்புக் கூறப் போகிறதோ என்ற நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எவ்வளவோ நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் பேசுகிற நேரத்தில் அவைகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அவ்வாறு பேசுகிற நேரத்திலே, கனம் கக்கன் அவர்கள்கூட "நாங்கள் சொல்ல ஒரு திட்டம்கூட பாக்கி இல்லாமல் நீங்களே எல்லாத் திட்டங்களையும் கூறி விடுகிறீர்களே" என்று வேடிக்கையாகச் சொன்னார்கள். அவ்வளவையும் விட்டுவிடுங்கள். என்னுடைய தொகுதியில் நிறைவேற்றப்பட்ட வேண்டிய குடகனாறு திட்டத்தைப்பற்றி இந்த அவையிலே பேச ஆரம்பித்தநாள்முதல் கூறிக்கொண்டு வருகிறேன். திண்டுக்கல் வட்டத்திலே, வேடசந்தூர் அருகில் கல்வார்பட்டியில் குடகனாற்றில் ஒரு அணை கட்டி 20 மைல் நீளத்திற்கு வாய்க்கால் வெட்டினால் ஐந்தாறு ஏரிகள் நிரம்பும். பத்தாயிரம் ஏக்கர் நிலங்களைச் சாகுபடி செய்ய முடியும். இதுபற்றிப் பல முறை பேசியிருக்கிறேன். மந்திரி அவர்களிடத்திலும் தனியாகச் சந்தித்து எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆனால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஒரு மந்திரி என்னுடைய தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்யும் நேரத்தில் "நீங்கள் கருணாநிதிக்கு வோட்டுப் போட்டீர்களே அவன் உங்களுக்குக் குடகனாறு திட்டத்தை நிறைவேற்றித் தருவானா?" என்ற வகையில் பேசுகிறார். இதற்குப் பெயர் ஜனநாயகமா? அல்லது கடைந்தெடுத்த சர்வாதிகாரமா? என்று கேட்க விரும்புகிறேன். அமைச்சர்கள் தொகுதி மக்களைப் பார்த்து "நீங்கள் கருணாநிதிக்கு வோட்டுப் போட்ட காரணத்தினால் உங்களுக்கு குடகனாறு திட்டம் கிடையாது" என்று பயமுறுத்துவது அடுத்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வோட்டுப் போடாதீர்கள் என்று அச்சுறுத்துவது போலாகும். இதை நான் குற்றம் சாட்டிக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்த ஆண்டுக்குள்ளாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொல்லட்டும். நாளையே அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று உத்தரவு பிறப்பித்தால், நான் இன்று மாலையே என்னுடைய பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன்.

[16th March 1960

THE HON. SRI C. SUBRAMANIAM: குடகனாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டாமென்று மாராமத்து மந்திரி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால் கருணாநிதி அவர்கள் இந்தச் சபையிலே இருக்கவேண்டும்.

SRI M. KARUNANITHI: ஒரு பொறுப்புள்ள அமைச்சர் ஒரு திட்டம் பற்றி பேசுகிற நேரத்தில் "கருணாநிதிக்கு வோட்டுப் போட்டாயே, அதனால் அந்தத் திட்டம் கிடையாது" என்று பேசுவது அவருடைய பொறுப்புணர்ச்சியைக் காட்டுகிறதா என்பதை எடுத்துக் காட்டத்தான் இதைக் கூறினேனே தவிர நிதியமைச்சர் அவர்களின் கேலிக்காகவோ கிண்டலுக்காகவோ குறிப்பிடவில்லை. கருணாநிதி விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் பொதுமக்கள் தேர்தெடுத்தால் இங்கு வருவான். "அண்ணாதுரை 2,000 கோடி ரூபாய் திட்டம் கொடுத்தால் நான் ராஜினாமா செய்து விடுகிறேன்" என்று நிதியமைச்சர் பேசினார். அண்ணா அவர்கள் திட்டம் கொடுத்தால் உங்களுடைய பதவி போய்விடுமே என்ற காரணத்தால் நாங்கள் கொடுக்கவில்லை என்று நாங்கள் அப்போது கூறியதையே நீங்கள் இப்போது திருப்பிக்கூறவேண்டிய அவசியம் இல்லை.

சமுதாய நலத் திட்டங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசப் படுகிறது. இந்த மன்றத்தில் பலர் அதைப் பற்றிப் பேசினார்கள். சமுதாய நலத் திட்டங்கள் அரசியல் விளம்பரத்திற்கு, ஒரு கட்சியின் விளம்பரத்திற்காக, ஏற்படுத்தப்பட்ட திட்டங்களா? அல்லது பொதுமக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய திட்டங்களா? இதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பிறந்த ஊரான திருக்குவளை கிராமத்தில் என் தாய் தந்தை பெயரால் முத்துவேலர்-அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி கட்ட அறிஞர் அண்ணா அவர்களால் கல்நாட்டு விழா செய்யப்பட்டது. அதற்காக சுமார் 7,000 ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டு, சமீபத்தில் 5,000 ரூபாய் பணத்தையும் அனுப்பி வைத்தேன். அதுபற்றி அங்குள்ள தோழர்கள் எனக்கு அனுப்பியிருக்கும் கடிதத்தைப் படித்து விட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் எழுதியிருக்கிறார்—

"நமது திருக்குவளை முத்துவேலர்—அஞ்சுகம் மருத்துவ மனையின் கல்நாட்டு விழா 22—5—59-ம் நாளில் நடைபெற்றது. அதற்கு பிறகு தஞ்சை டிஸ்ரிக்ட் ஹெல்த் ஆபீசர் அவர்கள் தங்களிடம் திருக்குவளை கட்டிட Plan and Estimate கேட்டு கடிதம் எழுதியிருந்தார். அதைத் தாங்கள் எனக்கு அனுப்பி இருந்தீர்கள். அதற்குப் பிறகு நாகை வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் துணையுடன் குடந்தையில் இருக்கும் Retired சந்திரசேகர அய்யர் அவர்களிடம் Plan and Estimate தயாரித்து தங்கள் சார்பாக D.H.O. வுக்கு அனுப்பி யிருந்தேன். அது அனுப்பப்பட்ட தேதி மேலவாழக்கரை அஞ்சல் அலுவலகத்தில் 14—12—59-ல் 182-ம் நம்பரில் ரிஜிஸ்டர் செய்துள்ளேன். அதற்குப் பிறகு டிசம்பர் கடைசி வாரத்தில்

16th March 1960] [Sri M. Karunanithi]

நாம் அனுப்பியிருந்த Plan and Estimate— ஐ எடுத்துக் கொண்டு நாகை Health Inspector இடத்தைப் பார்வையிட வந்தார். வந்து பார்வையிட்டுவிட்டு, ஒரு கக்கூசும், காம்பவுண்டு சுவரும் சேர்க்கவேண்டுமென்று என்னிடமிருந்து தங்கள் சார்பாக இசைவுக் கடிதம் பெற்றுக் கொண்டார். இன்னும் ஒரு வாரத்தில் D. H. O. Office ல் இருந்து Plan Approval ஆகி வந்து விடும். அதற்கு முன்எச்சரிக்கையாக கல், சிமெண்ட், முதலான தளவாட சாமான்களைத் தயார் செய்து வைத்துக்கொள்ளுமாறு கூறிச் சென்றார். உடனே, நான் கட்டிடத்திற்கு வேண்டிய கற்கள் முழுவதையும் கட்டவேண்டிய இடத்தில் சுமார் 40,000 கற்களும், கான்கிரீட் போடுவதற்கு 100 வண்டி சல்லிகளும், மணல் 50 வண்டியும், 65 மூட்டை சிமெண்டும் சேகரித்து வைத்திருக்கிறோம். அவர் சொல்லி விட்டுச் சென்ற நாளில் இருந்து எவ்விதப் பதிலும் வரவில்லை. அதன் பிறகு தஞ்சை D.H.O. — வுக்கு 15—1—60-ல் 188 நம்பரில் ரிஜிஸ்டர் செய்து ஒரு ரிமைண்டர் எழுதியிருந்தேன். அதற்கும் எவ்விதப் பதிலும் இல்லை.

(Deputy Speaker in the Chair.)

நாகை சென்று Health Inspector அவர்களை சந்தித்துக் கேட்டதற்கு நாம் அனுப்பிய Plan and Estimate சரியில்லை என்றும், சென்னையில் உள்ள Director of Public Health மூலமாக Sanitary Chief Engineer அவர்களிடம் சுமார் 8,000 ரூபாய்க்கு Plan and Estimate தயாரிக்க D.H.O. ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார். இம்மாதிரியான வழக்கம் இந்த மாவட்டத்திலேயே இதுவரையில் நடந்ததில்லை. நான் டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸர் அவர்களுக்கு பிப்ரவரி முதல் வாரத்தில்" ....

SRI J. MATHA GOWDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒழுங்குப் பிரச்னை ஒன்று எழுப்ப விரும்புகிறேன். தனிப்பட்ட ஒருவர் எழுதிய கடிதத்தை இந்த மன்றத்தில் கனம் அங்கத்தினர் ஒருவர் வாசிக்கலாமா, அது சபையின் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டதாகுமா என்று தங்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : May I know what the hon. Member is reading?

THE HON. SRI C. SUBRAMANIAM : யாரோ நண்பர் ஒருவர் எழுதிய கடிதத்தை வாசிக்கின்றார்.

DEPUTY SPEAKER : How can the hon. Member read that letter here?

SRI M. KARUNANITHI : வாசிக்கக் கூடாது என்றால் நான் வாசிக்கவில்லை. கடிதம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. 100 வண்டி சல்லிகளும், 50 வண்டி மணலும், 65 மூட்டை சிமெண்டும் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. சிமெண்டு கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. சாமான்கள் வந்து எழெட்டு மாதங்கள் ஆகின்றன. மணல் கரைந்துகொண்டிருக்கிறது. என்ன

[Sri M. Karunanithi] [16th March 1960

செய்வது என்று கேட்டு எழுதியிருக்கிறார். அண்ணாதுரை திறந்து வைத்தார். கருணாநிதி கட்டிக்கொடுக்க இருக்கிறார்; அந்தத் தொகுதியில் காங்கிரஸ்காரர் வெற்றி பெற்றிருக்கிறார்; ஒருவேளை கருணாநிதிக்குப் பெயர் வந்துவிடுமோ என்ற காரணத்தினால்தான் தடைப்படுத்தப்படுகிறது, வேறு காரணம் என்ன இருக்கமுடியும் என்று கேட்டுக்கொண்டு . . .

DEPUTY SPEAKER: The hon. Member's time is up. He has already exceeded the time limit. So, he must finish his speech soon.

SRI M. KARUNANITHI: சமுதாய நலத் திட்டம் வெறும் அரசியல் விளம்பரச் சாவடிகள் என்று சொல்லி பட்ஜெட்டானது சர்க்கரை பொங்கல் அல்ல, முழுக்க முழுக்கக் கசப்பானதா என்று கேட்டீர்களேயானால்—கசப்பு என்றால் மருந்து என்று சொல்ல முடியாதே, அதனால் இதுவெரும் மாய்மாலம் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI P. ARASAN:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சட்டசபை அங்கத்தினராக வந்தபிறகு இந்தத் தடவைதான் பேச எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதற்காக தலைவர் அவர்களுக்கு என் நன்றி. நிதி அமைச்சர் அவர்கள் 1960–61-வது ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சபைமுன் சமர்பித்திருக்கிறார். அதற்காக வேண்டி அவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நாட்டுக்கு விவசாயம் முக்கியமானது என்பதைக் கருத்திற் கொண்டு நிதி அமைச்சர் அவர்கள் அதற்கென நிதி ஒதுக்கி, உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று அவர்கள் மிகவும் வன்மையாகத் தெரிவித்திருக்கிறார். கடன் கொடுத்து உணவு உற்பத்தியை அதிகப்படுத்தி இருக்கிறார்கள். அதற்காக வேண்டியும் அவருக்கு என்னுடைய நன்றி. பின் தங்கிய ஏழை விவசாயிகள்தான் அதிகப்படியாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும், காரணம் அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு, தேவையான நிதி ஒதுக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதற்காகவும் அவருக்கு நன்றி.

சிதம்பரம் தாலுகாவிலுள்ள ஏழை விவசாயிகள் சாகுபடி செய்யும் நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார்கள். இரண்டு, மூன்று வருஷங்களாக சட்டம் அமுலுக்கு வந்திருந்தும், சுமார் 75 சத விகித விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். இன்னும் வெளியேற்றிக்கொண்டே வருகிறார்கள். விவசாயிகள் சமரசக் கோர்ட்டில் மனுப்போட்டும், மிராசுதார்கள் பல சாட்சிகளுக்குப் பணம் கொடுத்து, வக்கீல்களைக் கொண்டு வாதாடி விவசாயிகளை நிலத்தில் சாகுபடி செய்ய விடாமல் முயற்சி செய்கிறார்கள். பலவிதமான பொய் சாட்சிகளைக் கொண்டுபோய் நிறுத்தி விவசாயிகளை வெளியேற்றுகிறார்கள். விவசாயிகள் கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்வதற்குப் பண வசதி இல்லாததால் அவர்கள் வெளியேற்றப்பட்டுக்கொண்டி-

16th March 1960] [Sri P. Arasan]

ருக்கிறார்கள். பாக்கியுள்ள விவசாயிகள் இந்த ஆண்டாவது நாம் விவசாயம் செய்யலாம், அதற்கு உரிமை பெறவேண்டுமென்று நிலத்தை விட்டுக்கொடுக்காமல், நெல் சாகுபடியைக் களத்தில் போட்டுக்கொண்டு, நாங்கள்தான் நிலத்தைச் சாகுபடி செய்தோம் என்று உரிமையை நிலைநாட்டுவதற்காக, குத்தகைச் சீட்டோ, உரிமை வாரச் சீட்டோ, ரசீதோ கொடுத்தால்தான் நெல்லை அளப்போம் என்று ஒரே நோக்கத்தோடு களத்து மேட்டிலேயே வைத்து இருக்கிறார்கள். மிராசுதார்கள் அடியாட்களைக் கொண்டோ குண்டர்களைக் கொண்டோ இரவோடு இரவாக நெல்லை எடுத்துக்கொண்டுவர முயற்சி செய்கிறார்கள். இன்னமும் எப்படியாவது விவசாயிகளை வெளியேற்றவேண்டுமென்று பல திட்டங்களைப் போட்டு, சூழ்ச்சிகள் செய்து, அதனால் பெரும்பாலான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படியிருப்பினும், ஏழை விவசாயிகளுக்காக நிதி ஒதுக்கி, சட்டப் பிரகாரம் நஷ்டத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்வது என்கிற வகையில் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற திட்டத்தின் மூலம் நன்மை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இருபத்தைந்து சத விகிதமுள்ள விவசாயிகள்கூட சாகுபடி செய்ய வழி இல்லாமல், சர்க்கார் சட்டம் கொண்டுவந்திருந்தும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கடவுளே, ஆண்டவனே என்று நினைத்து ரொம்ப வருத்தப்படுகிறார்கள். ஆகவே, ஐந்து வருஷங்களுக்கு முன்னதாக ஒரு நிலத்தை எந்த விவசாயி சாகுபடி செய்து வந்தார் என்பதைக் கண்டுபிடித்து, அப்படிப்பட்டவர்களுக்கே அந்தந்த நிலத்தை சாகுபடிக்குக் கொடுக்க வழி செய்யவேண்டும். அங்குள்ள மிராசுதார்களோ கிராம அதிகாரிகளோ அவர்களைக் கொண்டே விவரங்கள் சேகரித்து விவசாயிகளுக்கு சாகுபடி உரிமையைக் கொடுக்கவேண்டும். இதைச் சர்க்கார் உடனே செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

சிதம்பரம் தாலூகாவில் என் பிர்க்காவில் 200 கிராமங்கள் இருக்கின்றன. அவைகளில் 120 குக்கிராமங்கள். அந்தக் கிராமங்களுக்கு 20 மைல் சுற்று வட்டாரத்தில் எந்தவிதமான பஸ் போக்குவரத்து வசதியும் இல்லாமலிருப்பதால் ஏழை பொது ஜனங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளுக்கு ரோடு வசதி இல்லாமலும், அப்படி இருப்பினும் களிமண் பூமியாக இருப்பதால் மழைக் காலங்களில் உளையாக இருப்பதாலும் மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. ஸ்ரீமான் சாமிக்கண்ணு படையாச்சி அவர்கள் ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது ரோடுக்குக் கல் போட்டதாகப் பெயர் பண்ணிவிட்டார்கள். இப்பொழுது கல் இருந்த இடமே தெரியாமல் இருக்கிறது. அதனால் மக்கள் போக்குவரத்துக்கு கஷ்டப்படுகிறார்கள். அவசரமான பிரசவ காலத்தில் கூட போக்குவரத்துக்கு எந்தவிதமான பாதை வசதியும், பஸ் வசதியும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக அந்தப் பகுதிகளுக்கு சாலை வசதியும் பஸ் வசதியும் செய்ய ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இவ்வளவு நேரம் பேச

எனக்குச் சந்தர்ப்பம் அளித்ததற்காக உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன். (ஆரவாரம்.)

* **Sri G. G. GURUMURTHI :** சபைத் தலைவர் அவர்களே, சபை முன் இருக்கும் 1960-61-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். திட்டங்களை நிறைவேற்றுவதில் திட்டமிட்டதற்கு மேலாக வெற்றி கண்டிருப்பது போற்றத் தகுந்த செய்கையாகும். நம்முடைய உணவு உற்பத்தித் திட்டங்களிலே நாம் குறிப்பிட்ட அளவை எய்தவில்லையென்றாலும், வரவேற்கத்தகுந்த அளவு நாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் பல திட்டங்களை வகுத்திருக்கிறோம். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றுவது, பொறுக்கு விதைகள், உரங்கள் தருவது போன்ற பல காரியங்களை நாம் எடுத்துக்கொண்டு நிறைவேற்றியிருக்கிறோம். இந்தத் திட்டங்கள் மக்களுக்கு இன்னும் நல்ல வகையிலே பயன்படவேண்டுமானால், அரசாங்கத்திலே தற்போது நடைமுறையிலே இருக்கும் சில விதிகளையும் கொள்கைகளையும் மாற்றியமைத்துக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் உணவு உற்பத்தியில் இருக்கும் பற்றாக்குறையை நாம் ஈடுகட்ட முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றும் போது, விவசாயிகளும் மிகவும் உற்சாகமாக உழைத்து உணவு உற்பத்தியில் ஈடுபடுகிறார்கள். ஆனால், அரசாங்கத்தின் சில விதி முறைகளினால் அவர்கள் தங்கள் காரியங்களைச் செவ்வனே செய்ய முடியாமலிருக்கிறார்கள். உதாரணமாக, கீழ் பவானித் திட்டம், மேட்டூர் கால்வாய்த் திட்டம், அமராவதித் திட்டம் இப்படி பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில், அப்பகுதிகளில் கிணறு வெட்டுவதற்குத் தடை இருக்கிறது. வாய்க்காலிலிருந்து ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பாற்பட்ட இடங்களிலாவது கிணறுகள் வெட்டக்கூடாது என்கிற தடையை நிவர்த்தி செய்து, கிணறு வெட்ட உத்தரவுகளைப் பிறப்பிக்கவேண்டும். பெரிய நீர்ப்பாசன திட்டங்களின் ஆயக்கட்டு பிரதேசங்களில் இருக்கும் கிணறுகளுக்கு மின்சாரத்தை உபயோகிப்பதில் இருக்கும் தடை விலக்கப்படாமலிருக்கிறது. கீழ் பவானி வாய்க்கால் பிரதேசத்தைப் பொறுத்த வரையில், அங்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அப்படி அளிக்கப்பட்டிருந்தும், மின்சார இலாகாவினால் இதுவரை அனேக இடங்களில் மின்சார சப்ளை கொடுக்கப்படவில்லை. கீழ் பவானி திட்டப் பிரதேசத்தில் மட்டுந்தான் தடை நீக்கப்பட்டதே தவிர, மேட்டூர் கால்வாய் பிரதேசத்தில் இந்தத் தடை இன்னும் இருக்கிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. நீர்ப்பாசன இலாகாவில் இருக்கக்கூடிய இன்ஜினியர்கள் ஒரு பிரதேசத்தில் என்ன இடையூறு இருக்கிறதோ அதே இடையூறுதான் இன்னொரு பிரதேசத்திலும் இருக்கிறது என்று சொல்லுவார்கள். ஒரு பிராந்தியத்தில் இந்தத் தடையை நீக்கக் கூடியவர்கள், இன்னொரு பிராந்தியத்தில் இந்தத் தடையை

16th March 1960] [Sri G. G. Gurumurthi]

நீக்காமல் வைத்திருக்கிறுர்கள். இதற்குக் காரணம் என்ன வென்று தெரியவில்லை. மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்தி லிருக்கும் பல விவசாயிகள் பம்பு செட்டுகள் வாங்கி தயாராக வைத்துக்கொண்டிருக்கிறுர்கள். ஆனல் அவர்களுக்கு மின்சார சப்ளை எடுத்துக்கொள்வதற்கு இந்தத் தடை இருக்கிறது. நூறு கிணறுகளுக்கு மின்சார பம்பு செட்டுகள் கொடுப்பதாக வைததுக் கொண்டால், அதன் மூலம் 1 ஏகர், 2 ஏகர் அதிகமாக சாகு படிக்குக் கொண்டுவர முடியும். சாதாரணமாக இந்த இடத்தில் இந்தத் தடையை நீக்கிவிட்டால் 200 ஏகர், 300 ஏகர் அதிகமாக சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக்கொள்ள முடியும்.

அடுத்தபடியாக, பெரிய நீர்ப்பாசன திட்டங்களில் கசிவு நீர் அதிகமாக இருக்கிறது. கசிவு நீரை பயன்படுத்துவதற்காக கீழ் பவானி கால்வாய் பிராந்தியங்களில் பல திட்டங்கள் இருக்கின்றன. இந்த பிரதேசங்களிலிருக்கும் ஓடைகளில் வரக்கூடிய கசிவு நீரை உபயோகப்படுத்த பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறுர்கள். ஆனல், அவைகள் நடைமுறையில் இது வரையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதற்கு மாருக இந்த கசிவு நீரை பயன்படுத்திக்கொள்வதற்கு என்று பவானி நதியில் மேல் காலிங்கராயன் அணைத் திட்டம் ஒன்று பரிசீலனையில் இருப்பதாக நான் அறிகிறேன். இந்தத் திட்டத்தை பரிசிலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்பாக அரசாங்கம் சில கருத்துக்களில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கீழ் பவானி திட்டம் உருவாக்கியபொழுது இன்னும் வரட்சி மிகுந்த சில பிரதேசங்களுக்கு ஜலம் கொண்டுபோக வேண்டுமென்ப தற்காக அந்தந்த கிராமங்களில் சேர்க்கப்பட்ட ஆயக்கட்டுகளில் 10 சதவிகிதம் குறைத்து மற்ற பிராந்தியங்களுக்கு ஜலம் கொடுத் தார்கள். இந்த பிராந்தியங்கள் இன்னும் நீர்ப்பாசன வசதியற்று இருக்கிறது. இந்தப் பிராந்தியங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுப்பதற்காகவே கசிவு நீர் ஓடக்கூடிய ஓடைகளை தடுத்து பாசன வசதி செய்துகொடுக்க பல சிறிய திட்டங்கள் இருந்தன. அவைகள் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கின்றன. இந்த திட்டங்களினல் செலவு அதிகம் ஏற்படாது. எனவே எந்தெந்த கிராமங்கள் விடுபட்டிருக்கிறதோ அந்த இடங்களுக்கு முதன்மையான ஸ்தானம் கொடுத்து, இந்தக் கசிவு நீர் மூலம் பாசனத்திற்கு வசதி செய்துகொடுக்கவேண்டும். அடுத்தபடியாக தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால் ஆயக்கட்டு நிலங் களுக்கு இரண்டு போக சாகுபடிக்குத் தண்ணீர் விடப்பட்டு வருகிறது. இரண்டு போக சாகுபடிக்கு இரண்டு ஆண்டுகளாக தண்ணீர் விடுவதினல், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால் கடைகோடி நிலங்களுக்குத் தண்ணீர் சப்ளை சரிவர கிடைப்ப தில்லை. கீழ் பவானி திட்டத்தில்கூட இந்த ஆண்டு நல்ல பருவ மழை இருந்ததினல் அணையில் நிறைய தண்ணீர் இருந்தது. கீழ் பவானி ஆயக்கட்டு பிரதேசங்களை இரண்டு பிரிவுகளாக பிரித்து தண்ணீர் கொடுத்தால் நல்ல பலன் இருக்கிறது. அடுத்த ஆண்டில் இப்படியிருக்கும் என்று சொல்ல முடியாது. இந்த முறை இன்னும் 2, 3 ஆண்டுகளுக்கு பரீக்ஷித்துப் பார்க்கப்படவேண்டும். இப்பொழுது அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள

உத்தேசித்திருக்கும், மேல் காலிங்கராயன் அணை திட்டத்தின் கீழ் செலவு அதிகம் ஆகும். பயன்படக்கூடிய நிலங்களும் மிகவும் குறைவாக இருக்கும் என்று நினைக்கிறேன். எனவே அரசாங்கம் மேல் காலிங்கராயன் அணைத் திட்டத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு பதிலாக உடனடியாக இந்தச் சிறு திட்டங்களை எடுத்துக்கொண்டால், விவசாயிகள் அதற்காக ஓரளவு பணம் கொடுப்பதற்குக்கூட தயாராக இருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை அவசியம் எடுத்துக்கொள்ளவேண்டும். மைசூர் அரசாங்கத்தோடு செய்துகொண்டிருக்கிற ஒப்பந்தத்தை மீறாமல், மேட்டூர் கால்வாய்களில், அதாவது மேற்குக் கரை, கிழக்குக் கரை கால்வாய்களில் இப்பொழுது எவ்வளவு தண்ணீர் விடுகிறார் களோ அந்தத் தண்ணீரைக் கொண்டே இன்னும் அதிகப் படியான நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்கலாம். மேலும் இந்த இரண்டு கால்வாய் பிரதேசங்களிலுள்ள நீர்க் கசிவினால் வரக்கூடிய தண்ணீரைப் பயன்படுத்தினால் மேலும் அதிகபபடியான நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

சிறிய நீர்ப்பாசன திட்டங்களில், குடிமராமத்து என்று சொல்லி பல ஏரிகளையும், குளங்களையும் வைத்துக்கொண்டிருக் கிறார்கள். இந்த குளங்களுக்கு ரெவின்யூ இலாகாவினர் ஏதோ எஸ்டிமேட் போடுகிறார்கள். ஆனால் சரிவர மராமத்து செய்யப் படுவதில்லை. பல வரண்ட பிராந்தியங்களில் இம்மாதிரி ஏற்பட்டி ருக்கக்கூடிய ஏரிகள், குளங்களெல்லாம் சரியான ஜலப்பிடிப்பு இல்லாமல், ஜலம் வரக்கூடிய காலத்தில் கால்வாய்கள் தூர்ந்து போய்விடுகின்றன. ஏதாவது ஏரிகளில் தண்ணீர் நிறைந்தாலும் அதை ஒழுங்காக பயன்படுத்திக்கொள்ளுவதற்கு ஸ்லூயிஸ்கள் (அவுட்லெட்ஸ்) ஆங்காங்கு ஒழுங்காக இல்லை. உணவு உற்பத்தியை பெருக்கவேண்டுமென்று நாம் சொல்லிக்கொண்டி ருக்கிறோம். ஆனால் இம்மாதிரி ஏரிகள், குளங்கள் மராமத்து செய்யப்படாமலே இருக்கின்றன. பஞ்சாயத்துகள் வருகின்றன, பஞ்சாயத்துக்கள் இவைகளை மேற்கொள்ளும் என்று அரசாங்கம் சொல்லிக்கொண்டு வருகிறது. பஞ்சாயத்துகள் ஏற்பட்டு, அவை களுக்கு நிதி நிலைமை சீராகி பிறகு இந்தக் குளங்களையும் ஏரி களையும் மேற்கொள்ளுவது என்றால் ரொம்பவும் காலதாமதம் ஆகும். அதனால் விவசாயிகள் கஷ்டப்படுவார்கள். உணவு உற்பத்தியை பெருக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய இந்த சமயத்தில் சர்க்காரே இவைகளை எடுத்துக்கொண்டு மராமத்து செய்யவேண்டும். நான் சொல்லுவதெல்லாம் ரூ. 5,000, ரூ. 10,000 இதற்குள்ளாகத்தான் செலவாகும். இந்தத் திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டால் ஆயக்கட்டுகாரர்களிடமிருந்துகூட அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். பஞ்சாயத்துகள் வந்த பிற்பாடு இம்மாதிரி குளங்களையும், ஏரிகளையும் அவைகள் மேற்கொள்ளும் என்பதை நிறுத்திவைத்துவிட்டு, அரசாங்கமே இவைகளை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். 'புட் ப்ரொடக்ஷன்' திட்டத்தின் கீழாவது இவைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

16th March 1960] [Śri G. G. Gurumurthi]

அடுத்தபடியாக, நிதி நிலை அறிக்கையில் மிக முக்கியமான ஒரு நல்ல கருத்தை நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பெரிய அளவில் திட்டங்கள் நிறைவேற்றவேண்டுமானால் அதற்கான மாறுதல்களைச் செய்து நிர்வாக இயந்திரம் ஒழுங்காகவும் விரைவாகவும் இயங்குவதற்கான வழி செய்வது அவசியம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமை நன்றாக வேகமாக ஓடக்கூடிய ஒரு குதிரையை ஒரு மாட்டு வண்டியில் பூட்டியதுபோல். இதனால் நம்முடைய சக்தி விரயமாகிவிடுகிறது. பொது மக்கள் அரசாங்கம் அவர்களுக்கு செய்யக் கூடிய நல்ல காரியங்களை போற்றுகிறார்கள். அதே சமயத்தில் கிராமத்திலுள்ள விவசாயிகள் அந்த நல்ல காரியங்களுடைய பலனை அடைவதற்கு நிர்வாக இயந்திரம் இடையூறு விளைவிக்காமல், தொல்லை கொடுக்காமல் துரிதமாக இயங்கவேண்டும். இல்லையென்றால் அரசாங்கத்தினுடைய நல்ல காரியங்களை போற்றுவதற்குப் பதிலாக, அவர்கள் அதிகாரவர்க்கத்தினுடைய தொல்லைகள் காரணமாக தூற்றுவதற்கு இடம் அளிக்கும். கிராம அதிகாரிகளைப்பற்றி அரசாங்கம் சிக்கிரத்தில் ஒரு முடிவு எடுக்க வேண்டும். பரம்பரை பாத்தியதையும் வைத்துக்கொண்டு, குறைந்த சம்பளத்தையும் வைத்துக்கொண்டிருந்தால், வேலைகள் பெருகிவரக்கூடிய நேரத்தில் கிராம அதிகாரிகள் எப்படி நேர்மையாக நடப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியும். அவர்களிடமிருந்து விவசாயிகள் நல்லமாதிரியாக உதவிகளை எதிர்பார்ப்பது கஷ்டம். உதாரணமாக, உரம் வாங்குவதற்கும், மற்றும் கடன் வாங்குவதற்கும், பம்பு செட்டுகள் வாங்குவதற்கும் கிராம அதிகாரிகளிடம் போய் அவர்களுடைய நிலங்களின் சர்வே நம்பரையும் மற்ற விவரங்களையும் கேட்கவேண்டியிருக்கிறது. அவர்கள் அந்த விவரத்தைத் தெரிந்துகொள்ளுவதற்குள் எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது? அரசாங்கம் மக்களுக்கு எவ்வளவு நல்லது செய்தாலும், அம்மாதிரி கொடுமையினால் நன்மைகளை மக்கள் மறந்துவிடுகிறார்கள். அவர்கள் படும் கஷ்டத்தினால், நல்ல காரியங்கள் மறைந்துபோய்விடுகின்றன. இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, பெரிய திட்டங்களை எடுக்கும்போது, ஐந்தாண்டுக் திட்டமாக இருந்தாலும் சரி, அல்லது திட்டங்களுக்கு மேற்பட்ட சில வேலைகளை எடுத்துக்கொண்டாலும் சரி, எந்தெந்த இடங்கள் பிற்பட்ட நிலையில் இருக்கிறதோ, எந்தெந்த இடங்களில் அபிவிருத்தி தேவையோ அந்த இடங்களை முதலில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நினைக்கிறேன். தேவையில்லாத இடத்தில்கூட சில வேலைகள் செய்யப்படுகின்றன என்று தெரிய வருகிறது. பவானி நகர் ஒரு தீபகற்பம். இந்த நகர் ஒரு பாடல் பெற்ற ஸ்தலம். அதற்கு இரண்டு பக்கங்களிலும் இருக்கக்கூடிய பாலங்கள் திப்புசுல்தான் காலத்திலிருந்து இருக்கக்கூடியவைகள். இந்த இரண்டு பாலங்களும் மிகவும் குறுகலாக இருப்பதினால் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கின்றன. அந்தப் பாலங்கள் இரண்டையும் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாளவாடி, பரகூர் மலைப் பிரதேசங்களாக இருக்கின்றன. அவைகள் மைசூர் ராஜ்யத்தின் எல்லையை ஒட்டினாற்போல் உள்ள பிராந்தியங்கள். அந்த பிராந்தியத்து மக்கள் போக்குவரத்து வசதி, கோர்ட்டு, உயர்நிலை பள்ளிகள் ஆகிய வசதிகள் இல்லாத காரணத்தினால், கன்னட தேசத்தோடு சேர்ந்துவிட்டால் தங்களுக்கு பலவிதமான நன்மைகள் ஏற்படும் என்று தவறான கருத்தோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்த மக்களிடையே உள்ள தவறான கருத்துகளை நாம் நீக்கவேண்டும். அதற்காக திம்பத்திலிருந்து தலைமலை வழியாக தாளவாடி வரைக்கும் ஒரு ரஸ்தா போட்டு போக்குவரத்து வசதி செய்துகொடுப்பதுடன், மேலும், பஸ் போக்குவரத்து, உயர்நிலை பள்ளி போன்ற வசதிகள் செய்துகொடுத்தால், மக்கள் அந்த வசதிகளை பயன்படுத்திக் கொண்டு தங்களுடைய கருத்துகளை மாற்றிக்கொண்டு வசதியாக வாழ்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **Sri K. SATTANATHA KARAYALAR :** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த வரவு செலவு திட்டத்தை மதிப்பிடும் பொழுது பொதுவே இன்று நாட்டில் உள்ள பிரச்னைகளையும், நிதி நிலையையும், பொருளாதார நிலையையும் நாம் மதிப்பிடவேண்டியது அவசியம் என்று எண்ணுகிறேன். ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தெட்டில் இருந்த பொருளாதார நெருக்கடி இன்று நாட்டிலே இல்லை. பொருள் உற்பத்தியும் நாட்டிலுள்ள பணப் புழக்கமும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்பதிலே யாதொரு வித சந்தேகமும் இல்லை. பொருளாதார நெருக்கடியும் இன்று நாட்டிலே இல்லை. இதுவரை வந்துள்ள இதர மாகாணங்களுடைய இந்த ஆண்டு பட்ஜெட்களை ஒப்பிட்டு பார்ப்போமானால், ஓரளவு நமது மாகாணத்தை எட்டிப் பிடிக்கக்கூடிய அளவிலே அவர் களுடைய மூலதனச் செலவுகளும் அமைந்துள்ளது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பொருளாதார நிலையில் ஒரு புது சூழ்நிலை இன்று நிலவுகிறது. அதை முன்பிருந்த சூழ்நிலையை ஒட்டி ஒப்பிடமுடியாது. சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள 'எகனாமிக் பாயன்ஸியின்' (பொருளாதார மேம்பாட்டின்) பிரதி பலிப்பு நமது நாட்டிலும் இருந்து வருகிறது. நமது பட்ஜெட்டை பரிசீலனை செய்யும்பொழுது வருவாய் இனத்தில் ஒரு கணிசமான உயர்வு இருப்பதை நாம் காண்கிறோம். அந்த வருவாய் எந்த எந்த துறையிலிருந்து வருகிறது என்று பரிசிலனை செய்ய வேண்டுவது அவசியம். குறிப்பாக எக்ஸைஸ் வரியிலிருந்து வரக் கூடிய வருவாயைப் பார்த்தோமானால், கழிந்த திட்ட ஆரம்ப காலத்தில் இருந்த வருவாய்க்கும் இன்று இருக்கக்கூடிய வருவாய்க்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் சுமார் ரூ. 1,75,00,000 வருவாயாக இருந்தது இன்று ரூ. 6,10,00,000-ஆக உயர்ந்துள்ளது.

12-30 p.m. இந்த மறைமுக வரி மத்திய சர்க்காரிடமிருந்து நமக்கு கிடைக் கக்கூடிய வருவாயில் ஒரு பங்கு. அது கிட்டத்தட்ட மொத்த வருமானத்தில் 19 சதவிகிதம் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. நாட்டிலே, இரண்டாவது திட்டத்திற்கு, தீர்வை இனத்திலிருந்து கணிசமான அளவு கிடைத்திருக்கிறது. தீர்வை இனம் வளர்ந்து வந்துள்ளது. திட்ட அளவுக்குமேல் பலமடங்கு, தீர்வை

16th March 1960] [Sri K. Sattanatha Karayalar]

இனத்தில், நேரிடையாகவோ, மறைமுகமாகவோ வருமானம் அடைந்திருக்கிறோம் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த பட்ஜெட்டிலே, தீர்வை இனம் இல்லையென்று சந்தோஷப்பட ஒன்றும் இல்லை. மத்திய சர்க்காரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் நிதி மேலும் அதிகமாக இருக்கும் என்ற காரணத்தால், புதிய தீர்வை இவர்கள் போடவில்லை போலும். ஆக, இதுவே ஒரு புதிய டாக்ஸேஷன் பாலிஸி, வரி விதிக்கும் கொள்கையாக அமைந்து உள்ளதோ என்று தோன்றுகிறது. நாம் நேரிடையாகச் செய்தால் என்ன? நமக்கு வேண்டிய பங்கை கணிசமாக தரக்கூடிய, இன்னொரு ஏஜென்சி செய்தால் என்ன? மக்களைப் பொருத்த மட்டில், வரிமூலமாகக் கொடுக்கும் தொகை அதிகமாகவே இருக்கிறது. நமக்கென்னவோ அதிக வருவாயும் வந்து விடுகிறது! நல்ல கொள்கை அல்லவா?

வேஸ் அண்டு மீன்ஸ் போர்காஸ்டைப் பார்த்தால், ஓபன் மார்க்கெட்டு லோன் ரூ. 10 கோடி எழுப்புவதன் மூலம் வருவாய் பெற்று, க்ளோசிங் பாலன்ஸ் ரூபாய் 4½ கோடி யென்று காட்டப்பட்டிருக்கிறது. ஆக கிட்டத்தட்ட 5½ கோடி நம் தேவைக்குக் கடன் மூலம் சரி செய்திருக்கிறோம்.

எகனமிக் கிளாஸிபிகேஷன் என்று வைத்திருக்கக்கூடிய புத்தகம் ஒரு சிறந்த புத்தகம் ஆக அமைந்திருக்கிறது. அதை ஒரு எகனமிக் ரெவ்யூவாகச் செய்திருந்தால், பாராளுமன்றத்தில் கொடுப்பது போல், இன்னும் நல்ல முறையாக அமைந்திருக்கும். அதில் 'ஸேவிங்ஸ் ஆன் கரண்ட் அக்கௌண்டை'ப் பற்றிச் சொல்லும்போது, ஒரு நாட்டின் பொருளாதாரத்தை மதிப்பிடுவது பற்றிச் சொல்லியிருக்கிறது. அதிலே,

"This is the surplus of revenue, after meeting current expenditures and transfers, which is available for capital formation."

மேலும்,

"It is more relevant in assessing Government's impact on the economy than Government's budgetary surplus or deficit on revenue account."

அந்த முறையிலே கேபிடல் பார்மேஷனுக்கு திரும்பவும் ப்ளவ் பாக் ஆகி, மூலதனமாக அமைவது எவ்வளவு? அதை வைத்து நமது பொருளாதாரத்தை மதிப்பிடுவது என்றால் அந்த வகையில் இந்த வரவு செலவு கணக்கில் ரூ. 7.48 லட்சம் கிடைக்கலாம்,

"The size of this savings and the percentage has decreased in 1960-61, mainly due to the increase in the developmental expenditure and outlays on increased emoluments for low paid Government employees."

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று, ஏற்கெனவே குறைந்த சம்பளம் வாங்குகிறவர்களான என்.ஜி.ஓ.-க்களுக்கு கொடுக்கவிருக்கும் சம்பள உயர்வால், இன்று இருக்கக்கூடிய கீழ்தா சிப்பந்திகளின் சம்பள உயர்வால், இன்று இருக்கக்கூடிய காபிடல் எக்ஸ்பெண்டிசர், ரெவின்யூ அக்கௌண்டி லிருந்து ட்ரான்ஸ்பர் செய்யக்கூடியதாக ஆகிறது. ஆகவே, அது

மேலும் குறைந்துவிடும். நம் சம்பள விகிதத்தை மற்ற அண்டை மாகாணங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நம் விகிதம் மிகக் குறைவு என்பது தெளிவாகும். கேரளாவில், ஒரு எல்.டி. கிளார்க்கின் சம்பளம் ரூ. 50—125, பாம்பேயில், ரூ. 75—220, மைசூரில், 55—120, ஒரிசாவில், 100—120 என்ற வகையில் இருக்கிறது. நம் மாகாணத்தில் அது ரூ. 45—90 ஆக இருக்கிறது. இதர எல்லா மாகாணங்களைக் காட்டிலும், நாம் கொடுக்கும் சம்பளம் குறைவு, அவர்கள் அதிகமாகக் கொடுக்கிறார்கள். அந்தச் சம்பள நிறக்கு நம்மிடம் இல்லை. அப்படிக் குறைந்த சம்பளம் வாங்குகிறவர்களுக்கு நியாயமாக மேலும் ரூ. 10, 15 கொடுக்க வேண்டும், நிதிநிலை மேலும் மோசமாகிவிடும். இந்த நிதி நிலையை எப்படி மெச்சுவது?

இன்று இருக்கக்கூடிய தொழில் வளர்ச்சியின் காரணமாக அடுத்த திட்ட காலத்தில், தேசிய வருமானம் பெருகவேண்டும். நாம் 152 கோடி என்று திட்டமிட்டு, 180 கோடியாக்கியிருக்கிறோம் என்று மகிழ்ச்சி யடைகிறோம். வரும் திட்டம் எப்படி அமையும் என்று தெரியவில்லை. அதில் தேசத்தின் ஜனப் பெருக்கத்தையும் மனதில் கொள்ளவேண்டும். இரண்டாவது திட்டத்திலே தேசத்தின் பர் காபிடா இன்கம் கணிசமாகக் கூடவில்லை. ரேட் ஆப் அட்வான்ஸ்கூட வேண்டுமானால், அதிக முதலீடு செய்தாக வேண்டும். மூன்றாவது திட்டத்திற்கு அதிகப் பணம் வேண்டும். அப்படி வரும்போது, இன்றைக்கு இருக்கக்கூடிய தீர்வையை மேலும் உயர்த்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும், நிவர்த்தி யில்லாத நிலைமை ஏற்படும். இன்று இருக்கக்கூடிய விலைவாசி உயர்வை, காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸை, எடுத்துக்கொண்டு பார்த்தால், அது இப்பொழுது 446-ஆக உயர்ந்துள்ளது. மேலும் உயர்ந்து போகக்கூடிய நோக்கில்தான் இருக்கிறது. ஹோல்சேல் பிரைஸ் இண்டெக்ஸைப் பார்த்தால், இன்று அறுவடைக்குப் பிறகும் இருக்கும் நிலைமையைப் பார்த்தால், அது இன்னும் உயர்ந்துபோகும் நிலையில்தான் இருக்கிறது. மேலும், மேலும் உயரும் அறிகுறிகள் இருக்கின்றன. நிதி அமைச்சரவர்கள் தன் உரையில் அது பற்றிக் கவலை தெரிவித்திருப்பதைப் பற்றி நன்றி; ஆனாலும், பரிகாரத்தை—அதை தவிர்க்கும் வழிவகைகளை—குறிக்கவில்லை. இன்று பேசிய ஹோம் மினிஸ்டர் அவர்களும் திட்டவட்டமாக ஒன்றும் சொல்லவில்லை. இன்னின்ன செய்யலாம், நாங்கள் சமாளித்துவிடுவோம் என்ற தன்னம்பிக்கையோடு பேச வில்லை, நிதி அமைச்சர் உரையும் அப்படி அமையவில்லை என்று வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளுகிறேன். நாட்டில் இன்ப்ளே ஷனரி டென்டென்சி இருக்கிறது, நாங்கள் ஆட்சியில் இருக்கிறோம் இன்னின்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம், என்று அவர்கள் உரையில் தன்னம்பிக்கையோடு ஒன்றும் சொல்லவில்லை. இரண்டாவது திட்டத்தில் பிஸிகல் டார்கெட்டைத் தாண்டி விட்டோம் என்றாலும், முக்கிய அம்சமான உணவு உற்பத்தி எதிர்பார்த்த அளவு உயரவில்லை. காரணம் பெர்டிலைசர், விதை போதவில்லை என்று சொல்வது ஒப்புக்கொள்ளக் கூடியதாக இல்லை. பெர்டிலைசர் அகில இந்திய ரீதியில் பெறக்கூடிய பொருள்கள்.

16th March 1960] [Sri K. Sattanatha Karayalar]

அது ஏன் திட்டப்படி உற்பத்தியாகவில்லை? அதனுல் மூன்று லட்சத்திற்கு அதிகம் விளைவு குறைந்துவிட்டது என்பது சரியல்ல.

விவசாயிகளுக்குக் கொடுக்கப்போகும் கடன் அசதிகளைப் பற்றி நிதியமைச்சரவர்கள் விசேஷமாகக் குறிப்பிட்டிருக்கிறூர்கள். கூட்டுறவு இயக்கத்தின் மூலம் 22.5 கோடி ரூபாய் கடனுக அளித்து வசதி செய்யப்போகிறூர்கள். இன்று நாட்டில் இருக்கக்கூடிய சிறிய, பெரிய சங்கங்கள் மூலமாக, நில அடமான பாங்குகள் மூலமாகச் செய்யப்போகிறூர்கள் என்று நினைக்கிறேன். நான் ஒரு நில அடமான பாங்கு டைரக்டர் ஆக இருந்ததின் அனுபவத்தைக்கொண்டு சொல்லுகிறேன், குறைந்த பட்ச சதவிகிதம்கூட இன்று சமாளிகக் முடியவில்லை; அடமானம் கொடுக்கக்கூடியவர்களுக்குக் கொடுக்கும் கடன் வகைகளே அப்படியிருக்க, நிலமே இல்லாதவர்களுக்கும் சொத்து இல்லாதவர்களுக்கும், கடன் வசதி செய்து தரப்போகிறேூம் என்றுல், எப்படி நம்புவது. அதற்காக எவ்வளவு பணம் என்ற வரையரையில்லை. இன்னின்ன ஜில்லாவுக்கு இவ்வளவு டார்கெட் என்று வரையரையில்லை. அதைக் குறிப்பிடுவது அவசியம். அல்லாத வரை, சேலம் ஜில்லா போன்ற, கூட்டுறவு இயக்கத்தில் முன்னணியில் இருக்கக்கூடிய ஜில்லா வாசிகள், பெரும் நன்மையை அடைவார்களே தவிர, இதர ஜில்லாக்காரர்கள் முழுதும் புறக்கணிக்கப் படுவார்கள். எல்லா இடத்திற்கும், பரவலாக கிடைக்காமல் போய்விடும். பரவலாக எல்லா ஜில்லாக்களுக்கும், தாலுகாக்களுக்கும் என்று திட்டமிட்டால், 4, 5 கோடி அதற்கு மாத்திரம் தேவைப்படும். அதில் சந்தேகமில்லை. அதை சர்க்கார் செய்யுமா?

இர்ரிகேஷனைப் பொருத்தமட்டில், மேஜர் இர்ரிகேஷன் முக்கியமாக அதிகம் இல்லை என்று சொல்லியிருக்கிறூர்கள். எல்லாவற்றையும் முடித்து விட்டோம் என்பது உண்மைதான். ஆனுல், அதே நேரத்தில், மைனர் இர்ரிகேஷன் துறையில், அதிகம் செலவு செய்யவில்லை. மைனர் இர்ரிகேஷன் இனத்தில், 1957-58-ல் ரூ. 70 லட்சமும், அதன் பிற்பாடு 36, 27 என்று குறைந்திருக்கிறது. இந்த ஆண்டில், ரூ. 35 லட்சம் என்று போடப்பட்டிருக்கிறது. ஆனுல், 1956-57-ம் ஆண்டில், ரூ. 70 லட்சம் செலவானதற்கு பிரத்தியேகமான காரணங்கள் இருக்கலாம், அவசரமான திட்டங்கள் இருந்திருக்கலாம், ஆகவே, செலவழிக்க நேர்ந்திருக்கலாம். இப்பொழுது, நாட்டிலே மராமத்து செய்யவேண்டிய குளங்கள், ஏரிகள் எவ்வளவு, அவைகளின் ஆயக்கட்டுகள் எவ்வளவு என்பதையெல்லாம் பரிசீலனை செய்து, அந்த நீர் நிலைகளையெல்லாம் சீர் செய்யவேண்டும். அந்த முறையில் ஒரு ஐந்து வருஷ காலத்திற்குள்ளாக நிறைவேற்றுவதற்குரிய திட்டம் இருக்கவேண்டும்.

அப்படிச் செலவு செய்வதற்கு தொகையை இதைப்பார்க்கிலும் மூன்று பங்கோ, நான்கு பங்கோ அதிகம் ஒதுக்கி குறித்த காலத்திற்குள்ளாக எல்லாக் குளங்களையும் செப்பனிட்டு உற்பத்தியை பெருக்குவோம் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடுவேன்று

முறையில் பல குறிப்புகளைக் கொடுத்திருக்கவேண்டும். அப்படி மந்திரி அவர்கள் கொடுக்கவில்லை. அதற்காக நிதியை கூடுதலாக ஒதுக்கவேண்டியது மிகமிக அவசியம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அமைச்சர் அவர்கள் ரோடுகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் பல காலமாகவே டெம்பரரியாக இருக்கின்றவர்கள் சீக்கிரத்திலேயே பர்மனென்ட் ஆக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். கழிந்த இரண்டு ஆண்டு காலமாக அவர்களில் யாரும் 10 சதவிகிதம்கூட பர்மனென்ட் செய்யப்படவில்லை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வொர்க் சார்ஜ்ட் எஸ்டாப்ளிஷ்மென்டின் கீழ் ஐந்து வருடம், பத்து வருடம், பதினைந்து வருடமாக காயம் செய்யப்படாமலேயே வேலை செய்து கொண்டிருக்கின்ற தற்காலிக தொழிலாளர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். ஆகவே அவர்களை எல்லாம் காயம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொழில் துறையைப்பற்றி ஒரு வார்த்தையைச் சொல்ல அவாவுருகிறேன். நமது தொழில் துறையில் ஒரு குறிப்பிட்ட பேப்பர் கம்பெனி ஆரம்பிப்பதற்கு 4 கோடி ரூபாய் கொடுத்தது பற்றி இந்தச் சபையில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒன்று காகிதத் தொழிற்சாலை உங்களுக்கு வேண்டுமா அல்லது உங்களுக்கு அந்தத் தொழிற்சாலை வேண்டாமா என்ற முறையில் பேசினார்கள். அதிலுள்ள அர்த்தம் என்ன? 2 கோடி ரூபாய் கடன் அமெரிக்கா கொடுப்பது ஒரு கட்டுப்பாடோடு கூடியதாக இருக்கிறது. சர்க்காருடைய காரண்டி அந்த கம்பெனிக்கு வேண்டும். அதாவது நமது மாகாண சர்க்கார் அதற்கு உறுதி கொடுக்கவேண்டும் என்கிற கண்டிஷன் ஒன்று. இரண்டாவது அது தனித் துறையில்தான் இருக்கவேண்டும், சர்க்கார் துறையில் இருக்கக்கூடாது என்பது. இவ்வித நிர்ப்பந்தத்தோடு கடன் கொடுப்பது என்பது ஒரு ஸ்ட்ரிங் அட்டாச்டு (string attached) ஆக இல்லையா? இது மிகவும் வருத்தப்படவேண்டிய விஷயம். கடன் கொடுப்பவர்கள் கண்டிஷன் போடுவது என்பது வருத்தத்தைத் தரக்கூடிய விஷயமாக இருக்கிறது. நம் கொள்கையையே பாதிப்பதாக இருக்கிறது.

அடுத்தபடியாக நம்முடைய திட்டங்களை எல்லாம் குறிப்பிட்ட காலத்திற்குள், குறிப்பிட்ட எஸ்டிமேட்டுக்குள்ளாகவே நிறைவேற்றித்தர கடமைப்பட்டவர்கள் நமது என்ஜினியர்கள். அவர்கள் நல்ல முறையில் தங்களுடைய கடமையை நிறைவேற்றிக் கொடுத்துக்கொண்டிருப்பதற்காக பாராட்டுகிறேன். அவர்கள் நம்முடைய பாராட்டுக்குரியவர்கள். மேலும் உத்தியோகஸ்தர்களைப் பாராட்டும்போது அவர்களும் மக்களோடும் தொழிலாளர்களோடும் நல்ல முறையில் தொடர்புகொண்டு அவர்களுடைய தேவைகளை, வசதிகளைப் பார்த்து எல்லாக் காரியங்களையும் செய்து கொடுக்கும்படியாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்காரிடத்தில் தங்களுக்கு

16th March 1960] [Sri K. Sattanatha Karayalar]

அதிகச் செல்வாக்கு இருக்கிறது என்ற காரணத்தினால், தொழிலாளர்களை நடத்தும் முறையில் குறை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதற்கு இடமில்லாதபடி நிர்வாகத்தைச் சரியான முறையில் நடத்தவேண்டும் என்று நான் கோருகிறேன்.

கடைசியாக டிரான்ஸ்பர்டு பர்சனல்களைப் பற்றி ஒரு வார்த்தை. இன்னமும் அவர்களுடைய உத்தியோகத் தரம் நிர்ணயிக்கப்படவில்லை. அவர்கள் இங்கு வந்து பல ஆண்டுகள் ஆனபோதிலும்கூட அவர்களுடைய சர்வீஸ், ஊதியம் போன்றவைகள் சரியான முறையில் இங்குள்ளவர்களைப் போல நிர்ணயிக்கப்படாதது மிகவும் வருந்தக்கூடியதாகும். கன்னியா குமரி டிஸ்ட்ரிக்டில் இன்னும் பி.டி. படித்தவர்களுக்கு 50 ரூபாய் அடிப்படைச் சம்பளம், மற்ற பகுதியில் 85 ரூபாய் சம்பளம் என்று இருப்பது மிக மிக மோசம். இவற்றையெல்லாம் சீர்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தம் பிரசங்கத்தில் "நம்முடைய ஆயுள் காலத்திற்குள்ளாகவே ஒரு சோஷலிஸ சமுதாயத்தைக் காணவேண்டும்" என்று சொன்னார்கள். அந்த லட்சியத்தை அடையவேண்டும் என்றால் அதற்கு ஏற்ற வழிவகைகளை நாம் இப்பொழுதே கையாள வேண்டும். நம்முடைய கனவை நனவாக்கும் திட்டங்களில் ஈடுபடவேண்டும். திண்மையாக, உறுதியாக அதற்கு ஏற்ற காரியங்களைக் கையாள முன்வராவிட்டால் அந்த லட்சியம் ஈடேறாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த லட்சிய அடிப்படையில் சாதாரண மக்கள்கூட இன்றையதினம் சீரான வாழ்க்கை வசதிகளைப்பெற்று வாழ்வதற்கு வேண்டிய அடிப்படையில் நம்முடைய நிதிநிலை அறிக்கை அமைந்திருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRIMATHI HEMALATHA DEVI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் நான்கு ஆண்டுகளில் செய்த காரியங்களையும், இனி வரப்போகிற ஆண்டில் செய்யவேண்டிய காரியங்களையும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியிருப்பதோடு 1960-61-ம் ஆண்டு நிதி நிலையைப் பற்றியும் விரிவாக தம்முடைய அறிக்கையில் தெரிவித்திருப்பதைப் பாராட்டி அவருடைய உரையை நான் வரவேற்கிறேன். காங்கிரஸ் ஆட்சியினர் வரி போட்டு விட்டார்கள் என்று மக்களிடையே சென்று அவர்களுக்குப் பரிந்து பேசுவது போல அரசாங்கத்தைக் குறை கூற எண்ணிக்கொண்டிருந்தவர்கள் ஏமாறும் வகையில் புதிய வரி எதுவும் போடாமல், மேலும் அழுகுப் பொருள்களின் மீது இருந்த விற்பனை வரியையும் ரத்து செய்திருப்பதானது மிகவும் பாராட்டுவதற்குரியது. என்றாலும் பால், நோய்வாய்ப்பட்டு இருப்பவர்களுக்கும், மற்றும் குழந்தைகளுக்கும் ஒரு அத்தியாவசியமான முக்கியமான உணவுப் பொருளாக இருப்பதால் பாலுக்கும் அந்த விற்பனை வரி விதி விலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அளிப்பார்கள் என்றும் நம்புகிறேன்.

[Srimathi Hemalatha Devi] [16th March 1960

நாட்டை வளப்படுத்தவேண்டும் என்றால் விவசாயத்தை வளப்படுத்தவேண்டும் என்பதை உணர்ந்து, உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவேண்டும் என்று கருதி, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை அநேகமாக முடித்து இனி சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்கிற குறிப்பானது அமைச்சர் உரையில் அடங்கியிருப்பதானது மிகவும் வரவேற்கத் தகுந்தது. என்றாலும் இப்போது சேலம் ஜில்லாவிலே குறிப்பாக தர்மபுரி தாலுகாவில் தின்னுறு என்ற அணைக்கட்டு திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே நிறைவேற்றித் தரவேண்டும் என்று மக்கள் கோரினார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வரவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அது சேர்க்கப்பட்டிருப்பதாக உணருகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப காலத்திலேயே அதை ஏற்று நடத்தித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு நெருப்பூர், மக்களாபள்ளம் என்ற இடத்தில் ஒரு சிறிய அணை கட்டவேண்டும் என்ற உத்தரவு இருக்கிறது. அதையும் விரைவில் செய்து முடிக்கவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு சேலம் ஜில்லாவில் தர்மபுரி தாலுகாவில் பாலக்கோட்டு பிர்க்காவில் சனத்குமார நதி இருக்கிறது. அந்த நதிக்கு அக்கரையில் ஒரு கிராமம் இருக்கிறது. இக்கரையில் உள்ள கிராமத்தில் சந்தை நடக்கிற காரணத்தினால் அவர்கள் இங்கே வந்துவிட்டு காய்கறிகளை வாங்கிக்கொண்டு போகும்போது திடீரென்று வெள்ளம் வருவதன் காரணமாகப் பலர் உயிரை இழந்து இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். எனவே அந்த ஆற்றுக்கு கோட்டூர் என்ற ஊரில் ஒரு சிறிய பாலத்தை அமைத்துக் கொடுக்கவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப்படி அறிக்கையில் 131 பாலங்கள் கட்டவேண்டும் என்பதில் 95 பாலங்கள் கட்டி முடிந்து விட்டதாகவும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. எனவே பாக்கி 36 பாலத் திட்டங்களே இருப்பதனால் அதில் சனத்குமார நதிக்கு கோட்டூரில் ஒரு பாலம் கட்டுவதைச் சேர்த்து கட்டி முடித்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பெருவழிகள் சம்பந்தப்பட்டமட்டில் சர்க்கார் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். என்னைக் கேட்டால் புளி ஏப்பக் காரனுக்குச் சாப்பாடு போடுவதைவிட, பசி ஏப்பக்காரனுக்குச் சாப்பாடு போடுவது சிறந்தது என்பது யாவரும் அறிகின்ற உண்மை. ஆகவே ஏற்கனவே கப்பி ரோடாக இருப்பதை, தார் ரோடாகவும், சிமிண்டி ரோடாகவும் போடுவதில் அதிக கவனம் செலுத்துவதைக் காட்டிலும் ரோடுகளே இல்லாது இருக்கிற இடங்களுக்கு முதலில் ரோடுகள் போடவேண்டும். குறிப்பாக பெண்ணாகரத்தில் இருந்து தர்மபுரி-நாகமரை வரைக்கும் ஒரு ரோடுகூட இல்லை என்று கடந்த இரண்டாண்டுகளாகத் தெரிவித்திருக்கிறோம். ஆனாலும் இதுவரையில் அந்த ரோடு போடப்படவில்லை. நாகமாக அந்த மலைப்பகுதியில் வாழ்கிற மக்கள்

16th March 1960] [Srimathi Hemalatha Devi]

அடைகிற துன்பத்தைத் துடைப்பதற்கு முதற்படியாக அந்த மாதிரியான ரோடுகளை எல்லாம் போடவேண்டுமே தவிர கப்பி போடுகிறோம், தார் போடுகிறோம், சிமிண்டு போடுகிறோம் என்று ஏற்கனவே நல்ல ரோடு போடப்பட்டிருக்கும் இடங்களிலேயே கவனம் செலுத்திக்கொண்டிருக்கக் கூடாது. இதைக் கருத்தில் கொண்டு பென்னுகரத்தில் இருந்து நாகமரை வரைக்கும் ரோடு போட்டுத் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காடுகள் என்ற தலைப்பில் பார்க்கும்போது, காடுகளை வளப்படுத்தவேண்டும், உயர் ரக மரங்களை உற்பத்தி செய்யவேண்டுமென்று சொல்லும்போது, காடுகளில் விறகுக்கு கூப் எடுக்கிறார்கள். அப்படி எடுக்கும்போது 100 ஏக்கர்களை எடுத்து விட்டு பக்கத்திலுள்ள 250 ஏக்கர்களில் உள்ள சந்தன மரங்கள், தேக்கு போன்றவைகளை மறைமுகமாக வெட்டிக் கொண்டு போகிறார்கள் என்று தெரிய வருகிறது. அப்படி யிருப்பதால், நாம் காடுகளை வளப்படுத்துவது எவ்வளவு உசித மாகயிருக்கும் என்பதைப் பற்றி சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். காட்டு இலாகா கீழ்தரச் சிப்பந்திகளின் உதவியால் தான் இவைகள் எல்லாம் நடைபெறுகிறது என்று வதந்தி நிலவுகிறது. ஆகவே, அவர்களைக் கண்டித்து நாடுகளிலுள்ள நல்ல விலை உயர்ந்த தர மரங்களை நன்கு பாதுகாக்கவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும். அடுத்தபடியாக, சேலத்தில் இரும்பு தொழிற் சாலையும், காகித தொழிற்சாலையும், அலுமினியம் தொழிற்சாலையும் ஏற்படுத்த முற்பட்டிருப்பது குறித்து அமைச்சரவையை நான் பாராட்டி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு தொழில் வளர்ச்சிக்காக, தொழிற் கல்லூரிகள் ஆங்காங்கு ஏற்படுத்துகிறார்கள். அது வரவேற்கத்தக்கதே. ஆனால் சேலத்தில் ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது. அதில் ஆண்களும், பெண் களும் சேர்ந்து படிக்கவேண்டியிருக்கிறது. தற்காலத்தில் ஆண் களோடு பெண்களும் சேர்ந்து படிப்பது அவ்வளவு உசிதமாக யிருக்காது என்பது பெரும்பாலோரின் கருத்து. நமது நிதி யமைச்சர் அவர்களும் அதை ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இதில் அக்கரை செலுத்தி, பெண்கள் உயர் நிலைப் படிப்பு முடிந்து பிறகு கல்லூரிகளில் சேர வேண்டுமானால் பிற ஜில்லாக்களுக்கு போகவேண்டியிருக்கிறது. அந்த நிலையிருப் பதனால் சேலம் ஜில்லாவிலுள்ள பெண்களுக்கு மேற்படிப்பு படிக்க முடியாமல் போய்விடுகிறது. நடுத்தர குடும்பங்களில் உள்ள பெண்கள் பணமில்லாத காரணத்தால் வேறு ஜில்லாவிற்கு சென்று படிக்க முடிவதில்லை. ஆகவே படிப்பை அதோடு நிறுத்திவிட வேண்டியிருக்கிறது. ஆகவே சேலம் ஜில்லாவில் பெண்களுக்கு என்று ஒரு தனி கல்லூரி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிதி, கல்வி இரண்டு இலாக்காக்களும் ஒரே அமைச்சர் அவர்களிடத்திலே இருப்பதால், அவர்கள் இதைக் கவனித்து சேலத்திலுள்ள பெண்கள் முன்னேறுவதற்காக வழியைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, சேலத்தில் பெண்களுக்கு என்று ஒரு தனி கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கதர், அம்பர் சர்க்கா பரிசிரமாலயங்கள் ஆங்காங்கு இருக்கின்றன. அதில் பயிற்சியளிக்கிறவர்கள் ஆண்கள். பயிற்சி பெறுகிறவர்கள் பெண்கள்தான் அதிகம். ஆகவே பயிற்சி பெற்ற பெண்கள் யாராவது அதில் பயிற்சி அளிக்க முன் வந்தால் அவர்களுக்கு இன்ஸ்ட்ரக்டர்ஸ் வேலை கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, நம் நாடு வளம் பெற வேண்டுமென்றால் அதற்கு அடிப்படையாக சமுதாய நலத் திட்டங்கள், ஜில்லா அபிவிருத்தி சபைகள் இவைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டங்கள் போற்றத்தக்கதே. சமுதாய நலத் திட்டங்களில் ப்ரைமரி ஹெல்த் சென்டர்ஸ் உடனடியாக ஏற்படுத்தவேண்டும். பெண்ணுகரம் பிர்க்காவில், பெண்ணுகரம் வட்டார வளர்ச்சித் திட்டம் என்று இருந்தாலும் அந்த இடத்தில் ப்ரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்தப்படாமல் இருப்பது வருந்தத்தக்கது. ஆகவே, உடனடியாக பெண்ணுகரம் வட்டார வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் அங்கு ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டரும் அதற்கு தொடர்ந்தாற்போல் நான்கு ரூரல் சென்டர்ஸும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படியாக, நாட்டின் வளர்ச்சிக்காக நல்ல பல திட்டங்களை போட்டு அவைகளை நடத்தி வரும்போது, வரி போட்டால் போட்டு விட்டார்களே என்கிறார்கள், வரியை நீக்கி விட்டால் மக்களை ஒட்டகத்திற்கு ஒப்பிட்டு இருக்கிற கல்லில் இரண்டை இறக்கி விடுவதற்கு ஒப்பிடுகிறார்கள். இப்படி கதை சொல்லுவதை கைவிட்டு எல்லாக் கட்சியினரும், நாடு நலமுற வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRIMATHI SAVITHRI SHANMUGHAM: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நமது நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையை பாராட்டி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் அறிக்கை பொது மக்களால் பாராட்டத் தக்கதாகும். நிதிநிலை அறிக்கை என்று வரும்போது பொதுமக்கள் மிகவும் ஆவலோடு எதிர்பார்ப்பது, புது வரிகளை அமைச்சர் அவர்கள் போடுவார்களோ என்றுதான் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த முறையில் இல்லாமல் மிகவும் மகிழ்ச்சி அடையக்கூடிய விதத்தில் புது வரிகள் எதுவுமின்றி இருப்பதும், அழுகும் பொருள்களுக்கும், நாட்டு செக்கு எண்ணெக்கும் ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த வரியிலிருந்து விலக்கு அளித்திருப்பதும் பாராட்டத்தக்க விஷயங்களாகும் என்று சொல்லிக்கொண்டு அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக நமது ராஜ்யம் பிற ராஜ்யங்களுக்கு வழிகாட்டியாக இருப்பதோடு மட்டும் இல்லாமல் வெளி நாடுகளிலிருந்து வரக்கூடியவர்கள்கூட நமது ராஜ்யத்தின் அம்சங்களைப் பார்த்து, அவைகளின் முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார்கள். அதற்காக பாராட்டவும் செய்கிறார்கள். ஒரு நாட்டின் நிதிநிலையைப் பொறுத்துத்தான் அங்குள்ள மக்களின் முன்னேற்றம் இருக்கிறது என்பதை

16th March 1960] [Srimathi Savithri Shanmugham]

எல்லோரும் உணருவோம். அதோடு நமது சர்க்காருக்கு பொது மக்களின் ஆதரவும் இருக்கிறது. எப்படியிருக்கிறது என்ருல், நமது ராஜ்யத்தில் சில சமயங்களில் பல திட்டங்களை நிறைவேற்று வதற்கு பொதுமக்களிடமிருந்து கடன்கள் எழுப்பி குறிப்பிட்ட தொகையை வசூல் செய்கிருேம். அப்படி வசூல் செய்யும்போது நமது ராஜ்யத்தைப் பொறுத்தளவில் பொதுமக்கள் நல்ல ஆதரவு கொடுக்கிருர்கள் என்பதிலிருந்து நமது ராஜ்யத்தின் நிதியும், நிர்வாகமும், நல்லபடியாகயிருக்கிறது என்பதோடு நம் அமைச்சர்கள் பொறுப்பான முறையில் காரியங்கள் செய்வதையும் தான் அது எடுத்துக்காட்டுகிறது. இந்த அறிக்கை பற்றி பல அங்கத்தினர்கள் பலவிதமாக பேசினுர்கள். வேண்டிய எல்லா அம்சங்களும் கவனிக்கப்பட்டு, அதுவும் கல்வி விஷயத்தில் நமது அமைச்சர் அவர்கள் நிதி, கல்வி இரண்டு இலாகாக்களையும் பொறுப்பாக எடுத்து நடத்தக்கூடிய நமது அமைச்சர் அவர்கள் கல்விக்காக கணிசமான ஒரு தொகையை ஒதுக்கி கிராமப்புறங் களிலும், நகரப்புறங்களிலும் ஏராளமான கல்விச்சாலைகள் அமைத்து வருங்காலத்தில் வளரக்கூடிய குழந்தைச் செல்வங்கள் நல்ல முறையில் கல்வி கற்பதற்கு பல நல்ல திட்டங்களை வகுத்து, முக்கியமாக பகல் உணவுத் திட்டம், பள்ளிச்சீரமைப்புத் திட்டம் போன்ற பல திட்டங்களை வகுத்து நல்ல முறையில் நம் நாட்டில் கல்வி முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறது. இதில் குறிப்பாக பெண்களைப்பற்றி நான் ஒன்று கூற விரும்புகிறேன். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இன்னும் அதிகமாக பெண்களுக்கு இருக்கவேண்டும். நமது ராஜ்யத்தில் ஆங்காங்கு பள்ளிகளை அதிகப்படியாக ஆரம்பிக்கும்போது அதற்கு தகுந்தாற்போல் ஆசிரியர்கள் தேவையாயிருக்கிறது. அந்தக் கமிட்டியில் நான் ஒரு அங்கத்தினராக இருப்பதால் எனக்குத் தெரியும், ஆயிரக் கணக்கான மனுக்கள் வருகின்றன. அவர்களில் 100 அல்லது 120 பேர்களைத்தான் ஒரு சமயத்தில் எடுக்க முடிகிறது. மனுப் போட்டவர்கள் எல்லோரும் அங்கு வரும்போது கண்ணீர் வடிக்கும் பெண்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன். ஆகவே, பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சி வசதி செய்வதோடு மட்டு மின்றி . . .

DEPUTY SPEAKER: The general discussion will continue in the afternoon and the hon. Member may continue her speech then. The House will now rise for lunch and meet again at 3 p.m.

The House then adjourned.

After lunch—3 P.m.

V.—ANNOUNCEMENT *RE* THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) AMENDMENT BILL, 1960

DEPUTY SPEAKER: I have to announce that the Governor has given his recommendation for the consideration of the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1960, in the Madras Legislative Assembly.

16th March 1960]

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1960 (L.A. Bill No. 1 of 1960) be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration.'

Clause 2.

DEPUTY SPEAKER : The motion is— 4.00 p.m.

'That clause 2 do stand part of the Bill.'

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment standing in my name :—

'In the proposed amendment to sub-section (3) of section 1 of the Madras Buildings (Lease and Rent Control) Act, 1949, for the expression "30th September 1960" ***substitute*** the expression "30th September 1965".'

SRI M. KALYANASUNDARAM : Sir, I second the amendment.

DEPUTY SPEAKER : If the hon. Member, Sri N. K. Palanisami wants, he can speak.

SRI N. K. PALANISAMI : Sir, I have already spoken about it.

The amendment was put and lost.

The clause was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

'That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1960 (L.A. Bill No. 1 of 1960) be passed.'

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1960 (L.A. Bill No. 1 of 1960) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1960-61—*cont.*

DEPUTY SPEAKER : Now we shall continue the general discussion on the Budget. The hon. Member, Srimathi Savithri Shanmugham, will now continue her speech.

SRIMATHI SAVITHRI SHANMUGHAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின்மீது நான் காலையிலே பேசிக் கொண்டிருந்தபொழுது சபை ஒத்தி வைக்கப்பட்டது. இப்பொழுது மேலும் தொடர்ந்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். புதிய வரிகள் எதுவும் இந்த அறிக்கையில் இல்லை. அதே சமயத்தில் சில பொருள்களின் மீதிருந்த வரி நீக்கப்பட்டிருக்கிறது. அதிலும் முக்கியமாக உருளைக் கிழங்கிற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்

பட்டிருக்கிறது. ஆனால் மற்ற கிழங்கு வகைகள், அதாவது மர வெள்ளிக் கிழங்கு, கருணைக் கிழங்கு போன்றவைகள் இதில் சேர்க்கப்படவில்லை என்று நான் நினைக்கிறேன். அப்படி சேர்க்கப் படவில்லையென்றால், அவைகளையும் அதில் சேர்த்துக்கொள்ளுமாறு நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப் போலவே பிஸ்கட்டுக்கு இப்பொழுது 3 சதவிகிதம் வரி இருக் கிறது. ஆனால் பிஸ்கட்கள் முக்கியமாக சிறு குழந்தைகளுக்கும், நோயாளிகளுக்கும் அதிகமாக உபயோகப்படுத்தக்கூடிய ஒரு திண்பண்டம். ஆகவே, ரொட்டிக்கு விதிக்கப்பட்டிருக்கும் 2 சத விகித வரியைப் போலவே, பிஸ்கட்களுக்கும் 2 சத விகிதம் வரி விதிக்க வேண்டுமென்று நான் இந்தச் சபையிலே கேட்டுக் கொள்ளுகிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில் நாம் நல்ல ஒரு முன்னேற்றம் கண்டிருப்பதைப் பற்றி நான் முதலிலேயே பேசிவிட்டேன். ஆனால், முக்கியமாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இன்னும் அதிகப்படியாக நம்முடைய ராஜ்யத்தில் இருக்கவேண்டும் என்பதை மட்டும் குறிப்பாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்த அளவிலே, இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் முழு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு, பல பெரிய, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு; அதன் மூலம் விவசாயிகள் உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நல்லதோர் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுடைய குடும்பத்தினர் நல்ல ஒரு முன்னேற்றத்தை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். விவசாயத்தில் மற்றுமொரு முக்கியமான அம்சம் மின்சாரத் திட்டம். நம்முடைய ராஜ்த்தில் மிக அதிக வேகத் துடன் மின்சாரத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அம் மாதிரி திட்டங்கள் காரணமாக கிராமப் பகுதிகளில் மின்சாரம் நல்ல முறையிலே விவசாயத்திற்கு பயன்பட்டு வருகிறது என்பதை நான் இந்த இடத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, வீட்டு வசதிகள் என்பதைப் பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கோவைநகரத்தைப் பொறுத்த அளவிலே, தொழில் துறையில் மிகவும் முன்னேற்றம் அடைந்துகொண்டிருக்கும் கோவை நகரத்தில் வீட்டு வசதி மிகவும் மோசமாக இருந்துகொண்டு வருகிறது. முக்கியமாக ஒரு வீட்டைச் சொந்தமாக வாங்கி ஒருவர் குடியிருக்கவேண்டுமென்று நினைத்தாலும்கூட இப்பொழுது கொண்டுவரப்பட்ட மசோதாவின் காரணமாக பலர் திண்டாடுகிறார்கள். ஆகையினால் பல துறை களிலே இருப்பவர்களுக்கு, அலுவலகங்களில் வேலை செய்யக்கூடிய அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு வீடுகள் வசதியாக கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் இந்த இடத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர்களுக்கு இன்று நல்ல வசதியான விடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அதுபோல நெசவாளர் குடும்பங்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஆனால், கோவையில் நெசவாளர் குடும்பங்கள் அதிகமாக இருப்பதன் காரணமாக

இன்னும் விரிவான முறையிலே கோவைநகரத்திலே வீட்டு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று இந்த இடத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதாரத்தைப் பொருத்த அளவிலே கோவையைப் பற்றி நான் ஓரிரண்டு வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். சுகாதார, வைத்திய வசதிகள் முக்கியமாக நாம் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டிய விஷயம். கோவை நகரத்தைப் பொறுத்த அளவிலே, ஒரு நகரத்தில் நல்ல குடிதண்ணீர் வசதி இருந்தால் அங்கே சுகாதாரம் நன்றாக இருக்கும் என்பதை இந்த இடத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடிக்கடி இந்தச் சபையில் நாங்கள், கோவையைச் சேர்ந்தவர்கள், சிறுவாணித் திட்டத்தை விரிவு படுத்த வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறோம். அதை மீண்டும் ஒரு முறை வற்புறுத்துகிறேன். கோவை நகரத்திலே இப்பொழுது புதியதாக கட்டக்கூடிய வீடுகளுக்கு பைப் கனெக்ஷன் கொடுக்க முடியாது என்று நகர சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், நகர சபையில் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு லைசென்ஸ் கொடுத்துவிட்டு, அதே சமயத்தில் குடிதண்ணீர் வசதிக்கு "பைப் கனெக்ஷன்" கொடுக்க முடியாது என்று சொன்னால், அது பொதுமக்களை பெரிதும் பாதிக்கிறது. முக்கியமாக கோவை நகரத்தில் வருஷத்தில் 2 மாதங்களுக்குத்தான் குடிதண்ணீர் கஷ்டம் இருந்துவரும். கடந்த ஒரு ஆண்டில் கோவைநகரம் வளர்ந்து கொண்டே வருவதன் காரணமாக, பல துறைகளில் முன்னேற்றம் அடைந்து வருவதன் காரணமாக குடிதண்ணீர் பிரச்னை மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் இந்தத் திட்டத்தை கூடியசீக்கிரம் நிறைவேற்றுவதற்கு முழு முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கோவை நகரத்தில் உள்ள தலைமை ஆஸ்பத்திரியில் இப்பொழுது பல கட்டிடங்கள் வந்துக் கொண்டிருந்தாலும்கூட, இடம் மிகவும் நெருக்கடியாக இருந்து கொண்டு வருகிறது. ஆகவே, நாங்கள் கடந்த ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில் அங்கத்தினர் எல்லோரும் ஒருமுகமாக சில கருத்துக்களை சொல்லியிருக்கிறோம். என்ன கருத்துகள் என்றால், மீண்டும் அதே இடத்தில் தலைமை ஆஸ்பத்திரிலேயே கட்டிடங்கள் கட்டுவதற்குப் பதிலாக 'கோஷ் பார்க்' என்ற கவர்மெண்டுக்குச் சொந்தமான இடத்திலே புதிதாக ஆஸ்பத்திரிக்கு வேண்டிய கட்டிடங்களை கட்ட வேண்டுமென்பதுதான். கூடியசீக்கிரம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழாவது கோவை ஜில்லாவிற்கு கோவை நகரத்திலே ஒரு வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறி குடும்பத்தினருக்கு இன்று அரசாங்கம் பல துறைகளிலே அவ்வப்பொழுது அவர்களுடைய கஷ்டங்களை அறிந்து தகுந்த நிவாரணம் அளித்து வருவதுபற்றி நாங்கள்

மகிழ்ச்சி அடைகிறோம். கதர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அம்பர் ராட்டை பயிற்சி நிலையங்கள் முக்கியமாக கிராமப் பகுதிகளில்தான் ஆரம்பிக்கப்பட்டு வந்தன. ஆனால் அந்தத் திட்டம் கோவை நகரத்தில் ஆரம்பிக்கப்பட்டு 100 பெண்களுக்கு மேல் அங்கே அம்பர் ராட்டை பயிற்சி பெற்று, அவர்கள் குறைந்த ஊதியமாவது பெறுவதற்கு கொஞ்சம் வசதியாக
4 p.m இருக்கிறது. இன்னும் அம்பர் ராட்டைப் பயிற்சிக்கு, காலையில் கனம் ஹேமலதாதேவி அவர்கள் சொன்னதுபோல், வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சிறிய கைத்தொழில்கள் மூலம், மக்களுக்கு வெகுவாக ஊதியம் கிடைக்கும் வாய்ப்பு இருப்பதால், அவற்றை நல்ல முறையிலே செய்வதற்கு அதிக ஊக்கமும், உற்சாகமும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI A. S. DURAISWAMI REDDIAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜட்டை மனப் பூர்வமாக ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 1960-61 பட்ஜெட்டில், ரூ. 34 லட்சம் துண்டு விழுந்திருந்தும், புதிய வரி ஒன்றும் போடாமல், பழைய வரியையும் சில பொருள்களுக்கு விலக்கி, சம்பளக் கமிஷன் ரிப்போர்ட் வந்தால் கொடுக்க வேண்டிய அதிக ஊதியத்திற்காக அவசியம் இருந்தும், புதுவரி ஏதும் போடாமல், பட்ஜட்டை சமர்ப்பித்திருப்பதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வருமான வரியிலிருந்து இன்னும் பல லட்சக் கணக்கான வரும்படி வர வழி இருக்கிறது. அதேபோல் செய்தால், வரிமூலம் வருவாய் அதிகமாக வரும். இப்பொழுது அந்த வரிமூலம் ரூ. 1,585 லட்சம் வருகிறது. உணவு தானியத்திற்கு வரியை நீக்கி விடவேண்டும் என்று கேட்கிறார்கள். சர்க்கார் நீக்க மாட்டார்கள் என்று தெரியும். காமதேனு போன்ற ஸேல்ஸ் டாக்ஸை அவர்கள் எடுக்க மாட்டார்கள். ஆனால் நான் ஒன்று சொல்லுகிறேன். அதனால் உற்பத்தியாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தொல்லை குறையும். இப்பொழுது இருக்கும் பலமுனை வரியை, ஒருமுனை வரியாக செய்தால், சர்க்காருக்கு அதிக வரிவரும். பலமுனை வரியென்பதால் வியாபாரிகள் பல ஐடங்களை கணக்கில் காட்டுவதில்லை. உண்மையாக ரோட்டில் போகும் தானியங்கள் லாரிகளின் மூலம் போகின்றன. வழியில் சோதனை செய்கிறார்கள். அப்பொழுது லாரிக்காரர்கள், யாரோ ஒரு வியாபாரியின் பேரைச் சொல்லி அவருக்கு தானியம் போவதாகச் சொல்லிவிடுகிறார்கள். அவர்கள் உண்மையான வியாபாரியின் பெயரைச் சொல்வதில்லை. ஸேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள், கொடுத்த பெயருள்ள வியாபாரியின் கடையைச் சோதனை செய்கிறார்கள். அங்கே மூட்டை இறங்கவில்லையென்று தெரிகிறது. ஆகவே, ரைஸ் மில்லிலேயே, ஒருமுனை வரியானல், ஒரு சதவிகிதமாயிருப்பதை மூன்று சதவிகிதம் என்று ஆக்கினாலும், அது எல்லோருக்கும் சௌகரியமாக இருக்கும்; சர்க்காருக்கு ஏமாற்றமில்லாமல் அதிக வருவாயும் வரும். இம்மாதிரி சர்க்கார் செய்யலாம் என்பது என் அபிப்பிராயம்.

விலைவாசிகள் பற்றிச் சொல்கிறார்கள். அது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஏன் விலை இறங்கவில்லை என்று முறையிடுகிறார்கள். சர்க்காரும் பாடு படுகிறார்கள். எதிர்கட்சிகளுக்கு இருக்கும் அக்கரையை விட, ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கும் அதிக சிரத்தை இருக்கிறது. முக்கியமாக விலைவாசிகள் ஏறியிருப்பதற்குக் காரணம் என்ன என்று யாரும் சொல்லவில்லை. திராவிட கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், மேல் நாட்டிலிருந்து நிபுணரை வரவழைத்து பரிசிலனை செய்யலாம் என்று. எந்த மேல் நாட்டு நிபுணர் வந்தாலும் சரி, நமக்கு தேவை அதிகப்பட்டால், எப்பொழுதும் கஷ்டந்தான். தேவைக்குத் தகுந்த தானியம் இல்லை. தேவைக்குத் தகுந்த அளவு வேண்டுவது அவசியம். நமக்குப் பக்கத்தில், கேரள ராச்சியத்தையும், மைசூர் ராச்சியத்தையும், பற்றாக்குறை மாகாணங்களை வைத்துக் கொண்டிருந்தால் என்றைக்குமே கஷ்டந்தான். அதைச் சொன்னால் மத்திய சர்க்கார் ஒத்துக் கொள்ளவில்லை. அவைகள் நம் மாநிலத்தோடு சேர்ந்திருப்பதால் நாம் கஷ்டப்படுகிறோம். வெளிநாடுகளுக்குப் போவதால் கஷ்டம் ஏற்படுகிறது, பற்றாக்குறை ஏற்படுகிறது. ஏற்கெனவே சர்க்கார் கொள்முதல் செய்த காலத்தில் விலை அதிகமாக இருந்தது. சர்க்கார் கொள்முதல் செய்ய ஆரம்பித்ததுமே, பஜாருக்கு சரக்கு வரவில்லை. கொள்முதல் செய்தால் பழையபடி தானியம் கிடைக்காது. விலை கண்ட்ரோல் செய்தார்கள். கண்ட்ரோல்படி எந்த வியாபாரியும் விற்கவில்லை. கண்ட்ரோல் செய்வதானால், பூராவும் கண்ட்ரோல் செய்ய வேண்டும். சில பாகம் கண்ட்ரோல் செய்தால் வியாபாரிகள் கஷ்டப்படுகிறார்கள். மில் ஓனர்கள் கஷ்டப்படுகிறார்கள். மில்களை மூடிவிடுகிறார்கள். கடைகளை மூடிவிடுகிறார்கள். செய்தால் பூராவாகச் செய்ய வேண்டும், இல்லாவிட்டால், பிரீயாக விட்டுவிடவேண்டும். கொள்முதல் செய்தால் தானியம் மார்க்கெட்டுக்கு வருவதில்லை. இது இயற்கை. எங்கு ஒரு ரூபாய் அதிகமாகக் கிடைக்கிறதோ, அங்கு வியாபாரி தானியத்தைக் கொண்டு போகிறார்கள். ஒரு சமயம் சரக்கு வராவிட்டால், விலை ஏறுகிறது. இதெல்லாம் இயற்கை.

உரக்குறைவைப்பற்றிச் சொல்கிறார்கள். நெய்வேலி திட்டத்தால் வேண்டிய அளவு உரம் கிடைக்கும் என்று நம்புகிறோம். இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நல்ல நஞ்சை நிலங்களில் சவுக்குச் செடிகளை நட்டு விடுகிறார்கள். ஆதலால் தானிய உற்பத்தி குறைகிறது. சவுக்கும் விறகுக்கு வேண்டியதுதான். ஆனால், நஞ்சை நிலத்தை அதற்கு உபயோகிக்காமல் இருக்க வேண்டும். வீணாக கிடக்கும், மணற்காடுகளில் சவுக்கைப் பயிரிட்டால் விவசாயம் பாதிக்கப்படாமல் இருக்கும். மதுராந்தகம் தாலுக்காவில் நஞ்சை நிலங்களில் சவுக்கைப் பயிரிடுவதால், சுமார் ரூ. 1,000 வரை ஏக்கராவுக்குக் கிடைக்கிறது. ஆனால் அந்த அளவுக்குத் தானியம் குறைகிறது. ஆகவே அம்மாதிரி நிலங்களில் சவுக்கு நடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மீன் பிடிப்பவர்கள் வசம் சமுத்திர ஓரத்து நிலங்களைக் கொடுத்து, சவுக்குச் செடிகள் வைக்கச் சொன்னால், உணவு தானியக் குறைவு ஏற்படாது, சவுக்குப் பயிரும் நன்றாக வரும்.

கைத்தொழில்கள் நம் நாட்டில் முன்னேறவில்லை என்று சொல்லுகிறார்கள். செங்கல்பட்டு ஜில்லாவில் எல்லாக் கைத் தொழில்களும் இருக்கின்றன என்று சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். சென்னைக்கு சமீபத்தில், கிண்டி, தாம்பரம், வண்டலூர், ரெட்ஹில்ஸ் வரை பலவகைத் தொழில்கள் பரவியிருப்பதைப் பார்த்தால், அங்கத்தினர்களுக்குத் தெரியும். என்னென்ன கைத் தொழில்கள் இருக்கின்றனவோ, அவ்வளவு தொழில்களும் செங்கல்பட்டில் இல்லாமல் இல்லை என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகிறேன். ஸ்டாண்டர்ட் மோட்டார் கம்பெனி, டைப்ரைடிங் மெஷீன்கள் என்ற பல பாக்டரிகள் இருக்கின்றன. கிண்டியிலே இருக்கும் தொழில் பண்ணையில் பல தொழில்களும் நடக்கின்றன. நம் சர்க்கார், தனியார் துறையிலும் சரி, சர்க்கார் துறையிலும் சரி எவ்வளவோ செய்திருக்கிறார்கள், எவ்வளவோ கைத் தொழில்கள் வளர்ந்திருக்கின்றன. சென்னையிலிருந்து வண்டலூர் வரை எவ்வளவோ பரவியிருக்கிறது. ஏழைமக்கள் குடியிருப்பு வீட்டு வசதியில்லாமல் தவிக்கிறார்கள். குடிதண்ணீர் வசதியும் இல்லை. இவைகளையெல்லாம் சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். தாம்பரம் முதலான இடங்களும் அப்படித்தான் இருக்கின்றன. செங்கல்பட்டு ஜில்லா தலைமை அதிகாரிகள் எல்லாம் சென்னையிலேயே இருக்கிறார்கள். கார்ப்பரேஷன் எல்லைக்குள்ளேயே இருப்பதனால் அவர்களுக்கு அங்குள்ள நிலைமை தெரிவது இல்லை. செங்கல்பட்டு ஜில்லா கலெக்டர் வெளி நாட்டிலிருந்து வருகிறவர்கள், போகிறவர்கள் இவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனிப்பதிலேயே ஈடுபடவேண்டி யிருக்கிறது. ஆகவே அதற்குப் பதிலாக வேறு ஒரு அதிகாரியை நியமித்துவிட்டு அந்த ஜில்லா சம்பந்தப்பட்ட காரியங்களைமட்டும் அந்த ஜில்லா கலெக்டர் செய்யும்படியாக வைத்து மேலும் செங்கல்பட்டு ஜில்லா கலெக்டருடைய தலைமை நகரமாக காஞ்சி புரத்தையும் செய்துவிட்டால் நன்றாக இருக்கும். ஜில்லா போலீஸ் சூப்பிரண்டு நிலைமையும் அப்படித்தான். பரங்கிமலை போலிஸ் ஸ்டேஷனில் ஒவ்வொரு நாள் ஒரு கான்ஸ்டபிள் கூட இருப்பது இல்லை. கேட்டால் எல்லோரும் பந்தோபஸ்து ட்யூடிக்குப் போய் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதையும் கவனித்து இப்படி வருகிறவர்கள், போகிறவர்கள் இவர்களைக் கவனித்துக் கொள் வதற்கு தனியாக ஏற்பாடு செய்துவிட்டு அந்த ஜில்லா அதிகாரிகள் அங்குள்ளவர்களின் நலனில் அக்கறை கொண்டு காரியங்களைச் செய்யும்படியாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI A. GOVINDASAMY : கனம் உதவி சபாநாயகர் அவர்களே நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற வரவு செலவுத் திட்டமானது பொதுமக்களுக்கு நம்பிக்கை ஊட்டுகின்ற முறையில் அமையவில்லை என்ற காரணத்தினால், அவருடைய வரவு செலவுத் திட்டத்தை நான் வரவேற்கும்படியான நிலைமையில் இல்லையென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் வரவு செலவுத் திட்டத்தைப் பாராட்டிப் பேசியவர்கள் எல்லாம் "வரியே கிடையாது, சில அழுகு பொருள்களுக்கு இருக்கின்ற விற்பனை வரியைக்கூட ரத்து செய்துவிட்டார்கள்"

16th March 1960] [Sri A. Govindasamy]

என்ருர்கள். எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் உணவுப் பொருள்கள் மீது ஒட்டுமொத்தமாக இருக்கிற எல்லா விற்பனை வரியையும் எடுத்துவிடவேண்டும் என்று வற்புறுத்தியும்கூட இன்றைக்கு ஒரு அளவுக்குத்தான் காய்கறிகளுக்கு இருந்த வரியை நீக்கியிருக்கிருர்கள். நீக்கிய வரியிலும் வெங்காயத்திற்கும், பச்சை மிளகாய்க்கும் வரி நீக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்கிற சந்தேகம் காய்கறி வியாபாரிகளுக்கு இருக்கிறது. வெங்காயம் பச்சை மிளகாய் இரண்டும் அழுகக்கூடிய பொருள்களின் இனத்தில் சேர்ந்ததா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். காய்கறிகளோடு அதுவும் அடங்குமானுல் அவற்றிற்கு தனியாக வரியை நீக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. இல்லாவிட்டால் அவற்றுக்கு உள்ள வரியையும் நீக்கிவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாலுக்குப் பரிவு காட்டுங்கள், ஆண்டவன் அபிஷேகத்திற்கு உபயோகப்படக்கூடியது பால், குழந்தைகளுக்கு இன்றியமையாத உணவாக இருக்கிறது என்பதாக எல்லாம் அதன் பேரில் இருக்கக்கூடிய வரியை நீக்கவேண்டும் என்பதற்கு காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களே வற்புறுத்திக் கேட்டுக் கொண்ட போதிலும்கூட, இன்னும் அதை நீக்கவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு வரவில்லை என்றுல் அதை என்னுல் கண்டிக்காமல் இருக்க முடியாது.

வரியே போடவில்லையே என்பதாகப் பலர் சொல்லிப் பாராட்டினுர்கள். பல ராஜ்ய அரசாங்கங்கள் வரியே போடாமல் பல நல்ல காரியங்களைச் செய்யவில்லையா? இன்னும்கூட கனிசமான அளவு வரிச் சுமையை நீக்கிப் பல நல்ல காரியங்களைச் செய்து வருகிருர்கள் என்பதை என்னுல் எடுத்துக் காட்ட முடியும். இன்றையதினம் ராஜஸ்தான் சர்க்கார் வரவுசெலவுத் திட்டம் வெளி வந்திருக்கிறது. அவர்கள் விவசாய வருமான வரியையே நீக்கியிருக்கிருர்கள். அதே நேரத்தில் பீகார் மாகாணத்தை எடுத்துக்கொண்டால் அங்கே வரி போடவில்லை. என்.ஜி.ஓ.-க்களுக்கு 250 ரூபாய் வரை சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கு 10 ரூபாய் பஞ்சப்படியில் உயர்த்திக்கொடுத்திருக்கிருர்கள். மைசூர் ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால் வரியே போடவில்லை. என்.ஜி.ஓ.க்-களுக்கு 5 ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறது. அது போல மற்ற ராஜ்யங்களுடைய நிலைமையையும் இங்குள்ள நிலைமையோடு ஒத்திட்டுப் பார்க்கிறபோது இங்கே மட்டும் வரி போடாமல் பிரமாண்டமான காரியத்தைச் சாதித்திருப்பதாக பெருமைப் படுவதற்கு இடமில்லை. இனி எந்த வரியையும் தாங்க முடியாத அளவுக்கு மத்திய சர்க்கார் வரியைப் போட்டிருக்கிருர்கள். இனி வரி போட்டால் அதைத் தாங்கமாட்டாது நிச்சயம் மக்கள் கிளர்ச்சி செய்வார்கள் என்று அஞ்சியேதான் வரி போடத் துணிவு இல்லாமல் விட்டிருக்கிருர்கள். தாங்கக்கூடியவர்களுக்கு வரி போடுவதை நாங்கள் எப்போதுமே ஆட்சேபித்தது இல்லை. எதிர்த்தது கிடையாது. ஆனுல் ஏழை எளியவர்களுக்கு, உணவுப் பொருள்களுக்கு வரி போடுவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

"வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்று சொல்கிருர்களே என்றுல் நாங்கள் வெறும் வாய் அளவில் அதைச் சொல்லவில்லை. அதற்கு தகுந்த புள்ளிவிவரங்களோடு எடுத்துக்

காட்டத் தயாராக இருக்கிறோம். இன்றைக்கு உத்திர பிரதேசத்தில் இருக்கக் கூடியவர்களுடைய சராசரி வருமானம் 551 ரூபாய் அகில இந்திய வருமானத்தை எடுத்துக் கொண்டால் 440 ரூபாயாக இருக்கிறது. நமது ராஜ்யத்தின் சராசரி வருமானம் என்ன? அவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அப்படிப் பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

இன்னும் வடக்கு வாழ்கிறது என்பதற்குப் பல ஆதாரங்கள் என்னால் கொடுக்க முடியும். இங்கே நான்கு சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்தப் போகிறோம் என்று மந்திரி அவர்கள் பெருமைப் படுகிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் ஏற்கனவே இங்கே இருந்த சர்க்கரை ஆலைகள் எவ்வளவு? நான்கைந்து சர்க்கரை ஆலைகள்தான் இருந்தன. பிறகு 3 சர்க்கரை ஆலைகள். கூட்டுறவு முறையில் ஏற்படுத்தப்பட்டது. இப்போது நான்கு ஆலைகள் வரப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னாலும் மூன்று ஆலைகளுக்குத்தான் சிபார்சு செய்திருப்பதாக சொல்லப்படுகிறது. வளவனூரில் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டும், பெண்ணாடத்தில் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். சர்க்கரை பற்றாகுறை இருப்பதாக சொல்லப்படுகிறது. கரும்பு உற்பத்தியில் பற்றாகுறை இருக்கிறதா என்று பார்த்தால் அதைப்பற்றிச் சொல்லவில்லை. கரும்பு உற்பத்தி நம் மாகாணத்தில் ஏராளமாக இருக்கிறது. ஆனால் உற்பத்தியாகின்ற கரும்புகளை சர்க்கரையாக மாற்றக்கூடிய ஆலைகள்தான் இல்லை. கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலை வைக்கவேண்டுமானால் ஏற்கனவே பத்து லட்சம் வேண்டும் என்று சொல்லப்பட்டது, அப்புறம் 15 லட்சம், இப்போது 25 லட்சம் கொடுத்தால்தான் முடியும் என்று சொல்லி, இயந்திரங்களும் வரவழைப்பதில் சங்கடம் இருக்கிறது என்று சொல்லித் தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்கள். அதுவும் தனியாருக்கே விடப்பட வேண்டும் என்கிறார்கள். வடாற்காடு ஜில்லா திருவண்ணா மலையில்கூட ஒரு சர்க்காரை ஆலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே சர்க்கரைப் பஞ்சத்திற்குக் காரணம் நம் மாகாணத்தில் கரும்பு உற்பத்தி போதுமானதாக இல்லை என்பது அல்ல. போதுமான சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தப்படவில்லை என்பதுதான். நம் ராஜ்யத்திற்கு போதுமான அதிகாரம் இல்லாததுதான்.

மத்தியப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் அங்கே 69 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. பீகார் மாகாணத்தில் 23 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. சமீபத்தில் உத்தரப் பிரதேசம் சென்று வந்தோம். அங்குள்ள கரும்பு நிலை, சர்க்கரை உற்பத்தி எல்லாவற்றையும் நேரில் பார்க்க முடிந்தது. டெல்லியில் நடந்த உலக விவசாய கண்காட்சி சென்று பார்க்கிறபோது இவை யெல்லாம் தெரிந்தது. அந்த மாகாணங்களில் எல்லாம் அவ்வளவு சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும்போது நம் மாகாணத்தில் மட்டும் போதுமான சர்க்கரை ஆலை ஏற்படுத்த வில்லை என்றால் காரணம் என்ன? நம் அரசாங்கத்திற்குத் துணிவு

16th March 1960] [Sri A. Govindasamy]

வேண்டும். துணிவு இல்லாத காரணத்தினாலேயே, டெல்லியைக் கண்டு பயப்படுகிறார்கள். அதனால் இங்கே சர்க்கரை ஆலையை உண்டாக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே என்ன என்னவோ புள்ளிவிவரங்களைக் கொடுத்து அமைச்சர் அவர்கள் ஏமாற்றிவிட முடியாது.

கடந்த எட்டு ஆண்டு காலமாக அவரது போக்கைக் கவனித்து வருகிறேன். நான் எதிர்த்துச் சொல்லிக்கொண்டும்தான் வந்திருக்கிறேன். இந்த ஆண்டும் அவர் கொடுத்திருக்கிற புள்ளி விவரங்களைப் பார்த்தால், நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடிய திட்டங்களைப் பற்றியா சொல்லியிருக்கிறார்கள் என்று பார்த்தால் ஏதோ புள்ளிவிவரங்களைக் கொடுத்து ஏமாற்றவேதான் செய்திருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டைச் சொல்ல முடியும். அவர்கள் ஏற்கனவே கொடுத்த புள்ளிவிவரங்களின்படி காரியங்களைச் செய்திருக்கிறார்களா என்றால் இல்லை.

சென்ற ஆண்டில் கொடுத்த புள்ளி விவரப்படி "360 விதைப் பண்ணைகளைத் துவக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் இத்திட்டம் 59-60-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் முடிவு செய்திருந்தோம். அதையொட்டி நடப்பு ஆண்டில் 180 புதிய விதைப்பண்ணைகளைத் திறப்பதெனவும் திட்டமிட்டிருந்தோம்" என்று குறிப்பிட்டார்களே அப்படிச் செய்தார்களா? மதிப்பீட்டுக் கமிட்டியில் அங்கே பரிசீலனை நடத்திய காலத்தில் அதில் உள்ள ஊழல்கள் பல சுட்டிக்காட்டப்பட்டன. அதன்காரணமாக துவக்கப்பட்ட பண்ணைகள்கூடக் கைவிடப்பட்டன. இவர்கள் நல்ல நிலங்களை எடுக்கவில்லை, அதுவும் அவசரப்பட்டு மந்திரிகளுக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் வேண்டியவர்களுடைய நிலங்களை எடுத்தார்கள், அதிகப்பணம் கொடுத்தார்கள், நீர் வசதி இல்லாத நிலங்களைக்கூட குத்தகைக்கு எடுத்து, அதிகக் கிரயம் கொடுத்து அந்தப் பண்ணைகள் சரியான முறையில் நடக்க முடியாதபடி செய்தார்கள். ஆகவே இவர்கள் சொன்னபடி செய்வதில்லை. சரியான முறையிலும் செய்வதில்லை. ஆகவே இப்போதும் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களின்படி காரியங்கள் செய்வார்கள் என்கிற நம்பிக்கையே உண்டாகவில்லை. மாறாக இவற்றைக் காட்டி ஏமாற்றுவதற்குத்தான் முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் சமுதாய நலத்திட்டத்திலே 360 ப்ளாக்குகள் பிரித்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் எடுத்துக் கொள்ளப் போவதாகச் சொன்னார்கள். 211 ப்ளாக்குகளே கொண்டு வர முடிந்தது. பாக்கி இருக்கிற ப்ளாக்குகள் முடிவதற்கு இன்னும் மூன்று ஆண்டுகள் ஆகலாம். இந்த ஆண்டில் 32 ப்ளாக்குகள் உண்டாக்கப் போவதாகச் சொல்கிறார்கள்.

சமுதாய நலத்திட்டத்தில் இருக்கிற குறைபாடுகளைச் சொல்லும் போது அவர்கள் வேதனை அடைகிறார்கள். சமீபத்தில் பங்களூரில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் சமுதாயநல திட்டத்திலிருக்கும் அவர்கள் கட்சிக்காரர்களே பேசியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் சாலையம்பாளையம் சேரியில் பள்ளிக்கூடம்

கட்டுவதற்கு என் தலைமையில் கலெக்டர் அவர்கள் அஸ்திவாரக் கல் நாட்டினார்கள். இன்றைக்கும் அந்தக் கல் எங்கே போயிற்றோ தெரியவில்லை. ஆதித்திராவிடர் ஒருவருக்குக் கொடுத்திருந்த அந்த கண்டிராக்டை மாற்றி வேறு ஒருவருக்குக் கொடுத்து விட்டார்கள். அதைப்பற்றிக்கூட இப்போதுதான் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறேன், அமைச்சரிடம்.

கைத்தறி நெசவாளர்களுடைய விஷயத்தில் அதிக அக்கறை காட்டவேண்டும் என்று சொல்கிறார்கள். உண்மையில் எதிர்க் கட்சியில் உள்ள நாங்கள்தான் கைத்தறி ஆடைகளை வாங்கி ஆதரிக்கின்றோமே தவிர ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதரிப்பது இல்லை. ஆனால் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று சர்வ கட்சித் தலைவர்களை சர்க்கார் தரப்பில் பலமுறை கேட்கப்படுகிறது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டு களாக கைத்தறி வாரவிழாவில் எதிர்கட்சிகளை அழைத்து பேச அனுமதிக்கவில்லை. இதுதான் எதிர்கட்சிகளுடன் ஒத்துழைப் பதா? கைத்தறியாளர்கள் துயர்நீங்க நூல் விலையை இரக்கியும் சாயத்தை மலிவான விலைக்கு கொடுத்தும் கைத்தறியாளருக்கு நிவாரணம் அளிக்க வேண்டுகிறேன். சமுதாய நல திட்டம் காங்கிரஸ் கட்சி நலனுக்காகவும் விளம்பரத்திற்காகவும் பயன் படுத்தப்படுகிறது.

குற்றச்சாட்டை நிரூபித்துக் காட்ட, அவர்களது போக்கே நிரூபித்துக் காட்டுகிறது. சமுதாய நலத் திட்டம் நல்ல முறையில் வெற்றி பெற வேண்டுமென்று நான் அதிகமாக வேலை செய்து வருகிறேன். அமைச்சர்கள் அடிக்கடி எங்கள் தொகுதிக்கு வருகிறார்கள். அவர்களே இதை ஒத்துக்கொள்வார்கள். காங்கிரஸை ஆதரிக்கும் அதிகாரிகள்தான் வேண்டும், கதர் போட்டுக் கொள்ளும் அதிகாரிகள்தான் வேண்டும், கதரைத்தான் கட்டவேண்டும் நிர்ப்பந்தம் செய்யும் நிலையில் இருக்கிறது. ஒரு அமைச்சர் என் தொகுதிக்கு வந்தபோது அங்குள்ள கிராம சேவக்கிடம், உன் தொகுதி எம்.எல்.ஏ. யார் என்று கேட்டார்கள், அதற்கு அவர், கோவிந்தசுவாமி என்று சொன்னவுடன் அவருக்கும் உனக்கும் என்ன உறவு என்று கேட்டார். அந்த கிராம சேவக்-க்கு என் பெயர் தெரியாவிட்டால் இந்தத் தொகுதி யிலுள்ள எம்.எல்.ஏ.-யின் பெயரே தெரியாத கிராம சேவக் என்ன கிராம சேவக் என்று கேட்கிறார்கள். கோவிந்தசாமிக்கு வோட்டு போட்டீர்களே, அவர் சப்தம் போட்டு விட்டால் ஏரிகளில் தண்ணீர் வந்துவிடுமோ என்று மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களே கேட்டார்கள். எதிர் கட்சிக்காரர்களின் கடமையை நாங்கள் செய்து வருகிறோம். ஆனால் ஆளும் கட்சி யானது கஜானா, அதிகாரம் போன்றவைகளை வைத்துக் கொண்டும் ஒன்றுமே செய்வதில்லை, மக்களின் நலனுக்காக. இந்தக் குற்றச் சாட்டை நான் இந்த மன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் முன்பும் கூறுகிறேன் என்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI K. PONNIAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1960-61 வருடத்திற்கு கனம் நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப் பட்டிருக்கிற நிதி நிலை அறிக்கையை ஆதரித்து நான் ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொதுவாக,

பொதுமக்கள் எல்லோரும் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறார்கள். வியாபாரிகள், வியாபாரிகள் அல்லாதார், பணக்காரர்கள், பணக்காரர்கள் அல்லாதார் ஏகமாகவே எல்லோரும் இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்கிறார்கள். எதிர்கட்சிக்காரர்கள் தான் இதை எதிர்த்துப் பேசுகிறார்கள். அவர்கள் நமக்கு முத்தம் கொடுக்கமாட்டார்கள். சபாஷ் என்று அவர்கள் சொல்ல மாட்டார்கள். அவர்கள் எதிர்கட்சியில் இருக்கிறார்கள். ஆகவே எதிர்த்துத்தான் பேசுவார்கள். ஆகவே அதைப் பற்றி சங்கடப் படவேண்டியதில்லை. இதை, பற்றாக்குறை நிதி நிலை அறிக்கை என்று சொல்கிறார்கள். வளரும் நாட்டில், அபிவிருத்தி அடையும் நாட்டின் பட்ஜெட் பற்றாக்குறையாகத்தான் இருக்கவேண்டுமென்று நிபுணர்கள் கருதுகிறார்கள். இந்த பட்ஜெட்டில் விவசாயம், பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், பெரிய கைத்தொழில்கள், சிறிய கைத்தொழில்கள் பிற்பட்ட மக்களுக்கு செய்யவேண்டிய சலுகைகள் எல்லாவற்றையும் கவனித்து பட்ஜெட்டை தயார் செய்திருப்பதற்காக எனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். பெரிய நீர்ப்பாசனம் குறித்து ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் முதன்மை வாய்ந்தது. அதுபற்றி நமது சர்க்கார் கேரள சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்தி, சீக்கிரம் ஒரு முடிவிற்கு வந்து ராஜ்ய முதலமைச்சர் காமராஜ் அவர்கள் தலைமையில் நமது நாட்டுப் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அவர்கள் கல் நாட்டு விழா நடத்தும்படி மிகத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே நடந்த பேச்சு வார்த்தைகளில் இரண்டு ஆறுகள், அதில் இடம் பெற தவறிவிட்டன. ஆனையாறு, இட்டிலியாறு இந்த இரண்டு ஆறுகளையும் சேர்த்து பேச்சு வார்த்தை நடத்தி ஒரு முடிவுக்கு வந்தால் நலமாக இருக்கும். அந்தத் திட்டம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்தவன் நான். அதை ஆறு ஏழு பிரிவுகளாகப் பிரித்து என்ஜினியர்கள் உற்சாகத்தோடு வேலை செய்து வருகிறார்கள். அப்படி வேலை செய்து வரும்போது கேரள சர்க்கார் திடீர் திடீரென்று குண்டு போட்டால் என்ஜினியர்களுக்கு உற்சாகமாக வேலை செய்ய ஆவல் இருக்குமா ? என்று கேட்கிறேன். பரம்பிக்குளத் திட்டம் பற்றி நமது சர்க்காருக்குக்கும் கேரள சர்க்காருக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. ஒரு பேப்பரில் கேரள சர்க்கார் பரம்பிக்குளத் தண்ணீரை கொடுக்க மறுப்பதுபோல் படம் போட்டிருந்தார்கள். இது குறித்து சர்க்கார் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டு, கூட்டு என்பது நமது நாட்டிற்கு புதிதல்ல. எனது முன்னோர்கள் பழங்காலத்தில் குடியானவர்களாக வேலை செய்து வந்தார்கள். என் தாத்தா இருக்கிறார்கள். அவர் சொல்வது ஐம்பது வருடங்களுக்கு முன்பு பண்ணையார்களும், குடியானவர்களும் கூட்டுச் சேர்ந்துதான் பண்ணை நடத்தி வந்தார்கள் என்று. பத்தில் இரண்டு பங்கு, ஆறில் ஒரு பங்கு, நாலில் ஒரு பங்கு என்று இப்படியாக, உற்பத்தி எவ்வளவு கிடைக்கிறதோ அதில் பங்கு கொடுத்து வந்தார்கள் குடியானவர்களுக்கு. பிற்காலத்தில் கம்மெர்ஷியல் க்ராப்ஸ்,

[Sri K. Ponnian] [16th March 1960]

பருத்தி, புகையிலை, மிளகாய் போன்றவைகளை பயிர் செய்து ஏராளமான பணம் கிடைத்ததும் அதையனுசரித்து குடியானவர்களுக்கு கூட்டுக் கொடுக்க இறுக்கவே இன்று நம் நாட்டில் விவசாயம் சீர்கெட்டு விட்டது என்று தைரியமாக சொல்வேன். கூட்டுறவு பண்ணை வந்தால் அதனால் ஹரிஜனங்கள்தான் முழுக்க முழுக்க முன்னேறுவார்கள். காரணம், எவ்வளவு பெரிய பண்ணையாராக இருந்தாலும், அவர் போய் பூமியில் மண் வெட்டவோ அல்லது ஏறு பிடிக்கவோ முடியாது. அவற்றை முழுக்க முழுக்க அரிஜனங்கள்தான் செய்யவேண்டும். ஆகவே கூட்டுறவுப் பண்ணை வருமானால் அதனால் பயன் அடைபவர்கள் முழுக்க முழுக்க ஹரிஜனங்களேயாவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. ஆகவே வரக்கூடிய தொடர் கூட்டத்தில் கூட்டுறவு பண்ணை மசோதா வரப் போகிறது. அதை கனம் அமைச்சர்களும், மற்ற ஏனைய அங்கத்தினர்களும் ஆதரித்து அதற்கு ஆதரவு கொடுப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. அடுத்தபடியாக, நான் வால்பாறைப் பிராந்தியத்தைச் சேர்ந்தவன். அங்கு சிந்தி மாடுகள் நன்றாக வளர்கிறது. சிந்தி மாடுகள் என்று சொல்லும்போது எனக்கு மற்ற மாடுகள் மீது விரோதம் ஒன்றுமில்லை. அங்குள்ள சீதோஷ்ண நிலை சிந்தி மாடுகளுக்கு ஒத்ததாக இருக்கிறது. அங்கு புல் மலைகள் இருக்கின்றன. அந்த புல் மலைகளில் மாடுகளை வளர்த்து வருவதற்கு வசதி இருக்கிறது. ஆகவே அங்கு இன்செமினேஷன் வில்லேஜ்ஜாய் வைத்து பால் கறந்து வால்பாறைக்கு கொண்டு வரலாம். இது முக்கியமானதாகும். சிந்தி காளைகள் பாகிஸ்தானில்தான் அதிகம். நம் நாட்டில் அதிகம் கிடையாது. வால்பாறை மிகவும் வளப்பமான இடமாகும். ஆகவே அங்கு சிந்தி மாட்டுப் பண்ணையை அவசியம் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இதற்கு முன் மலைப் பிரதேசங்களுக்கு வந்தால் அவர்களுக்கு ஹில் அலவன்ஸ் என்றோ அல்லது அண் ஹெல்தி லொக்காலிட்டி அலவன்ஸ் என்றோ கொடுத்து வரப்பட்டது. இப்பொழுது ஒன்றிரண்டு இடங்கள் தவிர மற்றயிடங்களை பப்ளிக் ஹெல்த் டிப்பார்ட்மென்ட் ஹெல்த்தி லொக்காலிட்டீஸ் என்று சொல்லிவிட்டதால் அந்த உத்தியோகஸ்தர்களுக்கு கொடுத்து வந்த அலவன்ஸ்ஸை கட் செய்து விட்டார்கள். அவர்களுக்கு கிடைத்து வந்த சம்பளத்தில் 30, 40 ரூபாய் என்று கட் செய்து விட்டார்கள். இப்பொழுது அதனால் அவர்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். இந்த அலவன்ஸ் கொடுக்கா விட்டாலும் மலைப் பிரதேசங்களில் கம்பளிகள், ஊலன்க்ளோத்திங் இவைகள் அவசியம். ஆகவே, வார்ம் க்ளோத்திங் அலவன்ஸ் ஆவது அங்குள்ளவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக உதவி சபாநாயகர் அவர்களே, வால்பாறை பிரதேசம், தேயிலை தோட்டங்கள், புகையிலைத் தோட்டங்கள் உள்ள பிரதேசமாகும். அங்கு தொழிலாளர்களைத் தவிர வேறு யாரும் கிடையாது. வியாபாரிகள் வந்தாலும் சரி அல்லது உத்தியோகஸ்தர்கள் வந்தாலும் சரி அவர்கள் தொழிலாளர்களை நம்பித்தான் வாழ வேண்டும். அங்கு ஒரு பெரிய பஞ்சாயத்து இருக்கிறது. வருடம் ஒன்றுக்கு மூன்று லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. அவ்வளவு வருமானம்

16th March 1960] [Sri K. Ponnian]

கிடைத்தும்கூட எங்களுக்கு போதுமான வசதி அந்த ஊரில் கிடையாது. அதை ஒரு டௌன்ஷிப் கமிட்டியாக மாற்ற வேண்டுமென்று கடந்த ஆண்டு முதற்கொண்டே கேட்டுக் கொண்டிருக்கிறோம். முதலமைச்சர் அவர்களிடமும், நிதி அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறோம், அதை ஒரு டவுன்ஷிப் கமிட்டியாக மாற்றினால்தான் அதை டெவலப் செய்ய முடியுமென்று. டவுன்ஷிப் கமிட்டிக்கு என்னென்ன க்வாலிபிக் கேஷன்ஸ் வேண்டுமோ அவைகள் எல்லாம் இருக்கிறது வால்பாறை பிரதேசத்திற்கு. ஆகவே அதை ஒரு டவுன்ஷிப் கமிட்டியாக மாற்ற வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் வந்த பிறகு பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், பல்லடம் இந்த நான்கு தாலுகாக்களிலும் பதினைந்து இருபது வருடங்களாக உழைத்துக் கொண்டிருந்த ஹரிஜனங்கள் இன்று அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். காரணம் என்ன வென்றால் அவர்கள் உழைத்து கொண்டிருக்கும் இடங்களில் வாய்க்கால்கள் வெட்ட வேண்டிவருமென்று சொல்லி அவர்களை என்ஜினியர்கள் வெளியேற்றி விட்டார்கள். ஆகவே, நான் வேண்டுவது என்னவென்றால், பரம்பிக்குளத் திட்டம் முடிந்த பிறகு, இன்று எந்தெந்த ஹரிஜனங்கள் எல்லாம் வெளியேற்றப் பட்டார்களோ அவர்களுக்கு ப்ரொவைட் செய்து, நிலம் கொடுத்து அவர்களுக்கு வாழ்க்கை வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அடுத்தப்படியாக இப்பொழுது நீங்கள் பட்டா கொடுக்காவிட்டாலும் கவலையில்லை. அதற்கு ஒரு பிரத்தியோக ஜீ.ஓ. இருக்கிறது. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் முடிகிற வரையில் யாருக்கும் பட்டா கிடையாது என்று சொல்லப் பட்டிருக்கிறது. அது முடிந்த பிற்பாடும் அந்த ஹரிஜனங்களுக்கு பட்டா கொடுக்காவிட்டாலும், அவர்கள் வாழ்வதற்கு சில நிலங்கள் உழைப்பதற்காக விட்டுக் கொடுத்து வாழவைக்க வேண்டுமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : டைமாகி விட்டது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ T. S. ராமஸ்வாமி பிள்ளை பேசுவார். 4-30 p.m.

* SRI T. S. RAMASWAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையைப் பற்றி நான் பேசும் போது அதை நான் ஒரேயடியாக எதிர்க்கவும் முன்வரவில்லை, அதே நேரத்தில் ஒரே அடியாக ஆதரிக்கவும் முன்வரவில்லை. (ஒரு குரல்: அப்படியானால் இரண்டுங்கெட்டான் நிலையா?) இரண்டுங்கெட்டான் நிலமையிலும் இல்லை. ஆதரிக்கவேண்டிய விஷயங்களை ஆதரித்து வரவேற்கிறேன். அதே நேரத்தில் இதிலுள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்த நிலையில் நான் சட்ட சபைக்கு வந்த உடனே, நிதி அமைச்சர் நிதி நிலை அறிக்கையைத் தந்தவுடனே, முதன் முதலாக எனது உள்ளத்தில் பட்ட விஷயங்கள் இரண்டு. ஒன்று இந்த ஆண்டு ஊட்டிக்குப் போகவில்லை என்பது, இரண்டாவது

[Sri T. S. Ramaswami] [16th March 1960

அழுகும் பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரியானது ரத்து செய்யப்பட்டிருக்கிறதென்பது. இந்த இரண்டிற்கும் நான் அரசாங்கத்தை பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக இதிலே இன்னும் 3 அல்லது 4 விஷயங்கள், முக்கியமான விஷயங்கள், பொதுமக்களை பாதிக்கக்கூடிய விஷயங்கள், நல்ல விஷயங்கள் செய்திருக்கிறார்கள். ஒன்று நம்முடைய கிராமங்களில் வேலை செய்யக்கூடிய டாக்டர்களுக்கு அலவன்ஸிலே 100 ரூபாய் அதிகப்படுத்தியிருக்கிறார்கள் என்பது. பல காலமாக மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது செய்திருக்கிறார்கள். டாக்டர்கள் நிச்சயமாக கிராமங்களுக்குப் போவதற்கு இது மிகுந்த உற்சாகமளிக்கும் என்று நான் கருதுகிறேன்.

இன்னொரு விஷயம், உர வினியோகத்தைப் பொருத்த வரையில் எல்லா ஜில்லாக்களிலும்—கன்னியாகுமரி ஜில்லா தவிர—புகார்கள் இருந்து வந்தன. இந்தப் புகார்களை அகற்ற வேறு முறைகள் கையாளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது இனிமேல் உரமாவது கூட்டுறவு முறையில் வினியோகிக்கப்படும் என்பதைப் பொறுத்த வரையில் நிச்சயமாக நான் வரவேற்கிறேன். அந்த முறையைக் கையாண்டால், எத்தனையோ குறைகள் கூட்டுறவு முறையில் இருந்தாலும், எத்தகைய ஊழல்கள் இருந்தாலும், தனி நபர் நடத்துவதைவிட நிச்சயமாக குறைவாக இருக்கும், கண்காணிப்பு அதிகமாக இருக்கும்.

அடுத்தபடியாக இன்னும் இரண்டு மூன்று விஷயங்களைப்பற்றி கூறிவிட்டு வேறு விஷயங்களுக்கு வருகிறேன். நமது உணவுப் பிரச்னையைப் பொறுத்த வரையில் நமது விவசாய இலாகா அதனுடைய இலக்கை எட்டவில்லை அது நம்முடைய தோல்வியை ஒப்புக்கொள்வதாகும். 9 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்ய வேண்டும் என்று இலக்கு இருக்கும்போது 6 லட்சம் டன் தான் வரமுடியும் என்று கூறியிருக்கிறார்கள். நாம் இன்றைய தினம் என்ன பார்க்கிறோம்? ஒரு புறம் சொஷலிஸ்டிக் பாட்டர்ன் ஆப் சொஸைடி என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். வெல்பேர் ஸ்டேட் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அப்படி இருந்தும் ஜனநாயகம் என்பது சாதாரணமாக தேர்தலிலும், சட்ட சபையிலும்தான் இருக்கிறதே தவிர வேறு இல்லை. சட்ட சபை விதிகளிலேகூட பல மாற்றங்கள் செய்யவேண்டியிருக்கிறது. பாராளுமன்ற விதிகளின்படி பார்த்தாலும், மற்ற அண்டயநாட்டு விதிகளின்படி பார்த்தாலும் நம்முடைய விதிகளில் எவ்வளவோ மாற்றங்கள் செய்யவேண்டியிருக்கின்றது. அந்த விதிகளின்படி பார்த்தால் கேள்வி நேர விஷயத்திலும், மற்ற விஷயங்களிலும் நாம் இன்னும் அதிக உரிமை பெற முடியும் என்று கருதுகிறேன். சட்ட சபையில் ஏதோ ஜனநாயகம் இருந்தாலும்கூட, நிர்வாகத் துறையிலும் வேறு துறையிலும் இன்னும் ஜனநாயகம் புகுத்தப் படவில்லை. அன்றையதினம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்த போது எந்த நிர்வாக விதிகள் இருந்ததோ, அவைகள் அப்படியே இன்னும் இருந்து வருகிறது. மக்கள் பிரதிநிதிகள்கூட அரசாங்க

16th March 1960] [Sri T. S. Ramaswami]

நிர்வாகம் பற்றிய சில தகவல்களை அறிவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. இன்றைக்குப் பல வருஷங்களுக்கு முன்னால் இங்கே முதலமைச்சராக இருந்த திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஒரு சுற்றறிக்கை விட்டதாக அறிந்தேன். அதிலே சட்டசபை அங்கத்தினர்கள் அதிகாரிகளிடம் சென்று ஏதாவது தகவல்கள் கேட்டாலும், அவர்களுக்கு தகவல்கள் கொடுக்கவேண்டியதில்லை என்று சொல்லியிருந்ததாக நான் அறிந்தேன். அதே நிலைமை இன்னும் நீடிக்கிறதோ என்று தோன்றுகிறது. இந்த சட்ட சபையிலே பாருங்கள்.—பல அங்கத்தினர்கள் பல கேள்விகள் கொடுக்கிறார்கள். இங்குள்ள விதிகளின்படி அரசாங்கம் விரும்பினால் தகவல்கள் கொடுக்கலாம். அல்லது 5 வருஷங்கள் பதில்கள் கொடுக்காமலேயே இருந்து விடலாம். அத்தகைய முறையில் இருக்கிறது. நமது பாராளுமன்றத்திலே எப்படி இருக்கிறது? அங்கே ஒரு கேள்விக்கு பதில் வேண்டுமானால் 10 நாள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அந்த அங்கத்தினர் எந்த நாளில் பதில் வேண்டுமென்று விரும்புகிறாரோ அந்த நாளிலேயே பதில் அளிக்கப்படும். அந்த நாளில் எத்தனை கேள்விகள் இருந்தாலும் அவைகளுக்கெல்லாம் பதில் சொல்லியாகவேண்டும். ஆயிரம் கேள்வி இருந்தாலும் ஒரு மணி நேரத்தில் பதில் சொல்லப்பட்டது போக மீதமுள்ள கேள்விகளுக்கு பதில்களை எழுதி கையில் கொடுத்து விட வேண்டும் என்று இருக்கும்போது, இந்த ராஜ்யத்திலுள்ள விதிகள் எப்படி இருக்கிறது என்றால் ஒரு மணி நேரத்தில் கிடைக்கக்கூடிய தகவல்களைத் தவிர வேறு தகவல்கள் கிடைக்க முடியாத நிலை இருக்கிறது. சமீபத்திலே சட்டசபை இலாகாவிலிருந்து அங்கத்தினர்களுக்கு ஒரு ஜீ.ஓ. வந்தது. அந்த ஜீ.ஓ.-வை எல்லா இலாகாக்களுக்கும் அனுப்பினார்கள். அங்கத்தினர்களுக்கு அரசாங்க நிர்வாக சம்பந்தமாக ஏதாவது தகவல்கள் வேண்டியிருந்தால் அந்தந்த இலாகாக்களுக்கு நேராக எழுதி அனுப்புங்கள், அவர்கள் நேராக தகவல்களை அனுப்புவார்கள் என்று எழுதியிருந்தார்கள். நமது போரூர் தொகுதி அங்கத்தினர் நூற்றுக்கும் மேற்பட்ட கடிதங்களை எழுதியிருக்கிறார்கள் அதிகாரிகளுக்கு. அதில் ஒரு சிலவற்றைத் தவிர மற்றவைகளுக்கு பதில் கிடையாது. எவ்வளவு தூரம் இருக்கிறது ஜீ.ஓ.? அரசாங்க அதிகாரிகள் இந்த ஜீ.ஓ.-வை எப்படி மதிக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இன்றையதினமும் துருப்பிடித்த அந்த டாட்டன்ஹாம் முறைதான் இருந்து வருகின்றது. பிரிட்டிஷ் எகாதிபத்தியம் இருந்தபோது கையாண்ட முறைதான் இன்றும் கையாளப்பட்டு வருகிறது. அதாவது 'Government are considering he matter" என்று ஒரே வாக்கியத்தில் பதில்கள் கொடுக்கப்படும். அதே பாட்டை இன்றும் நாம் பாடிக்கொண்டு வருகிறோமென்றால் ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைக்கவோ அல்லது க்ஷேம நல அரசாங்கமாக இயங்கவோ முடியாது. நிச்சயமாக நமது நிரவாக யந்திரம் மாற்றியமைக்கப்படவேண்டும். பழைய துருப்பிடித்த முறைகளை நாம் நிச்சயமாக மாற்றியாகவேண்டும். அப்படியில்லையென்றால் நாம் நிச்சயமாக நமது இலக்கை எட்டிவிட முடியாது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒன்பது லட்சம் டன் உற்பத்தியாக வேண்டும் என்று இலக்கு

இருந்தும் 6 லட்சம் டன் தான் வருகிறது என்ருல் இதுதான் முதல் காரணம். இன்றைய தினம் இதையெல்லாம் யார் "செக்" செய்வது. யார் நல்ல வேலை செய்கிருர்களோ' என்று கவனிக்கிருர்கள்? இப்போது மேலதிகாரிகளுக்குச் சௌகரியமாக நடந்தால் அது எபிஷியென்ஸி ஆகிவிடும். இப்போதுள்ள நிலைமை திறமையைப் பொறுத்து எபிஷியென்ஸி இல்லை என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணமாக, நேற்றைக்கு முன் தினம் 8,600 பவுண்டு நெல் விளைவித்த ரத்தின சாமி நாடார் என்பவருக்குப் பரிசு வழங்கப்பட்டது. ஒரு ரத்தினசாமி நாடார் 8,500 பவுண்டு நெல் விளைவித்தால், கல்லூரியில் படித்து, எம்.எஸ்ஸி., பி.எஸ்ஸி. பட்டம் பெற்றவர்கள் விதைப் பண்ணைகளில் ஏன் அந்த அளவு கூட உற்பத்தி செய்ய முடியவில்லை? ஏன் என்ருல் அவர்களுக்கு வேண்டிய சௌகரி யங்கள் செய்யப்படவில்லை. சரியான கண்காணிப்பு இல்லை. ஒரு ரத்தினசாமி நாடார் இந்த அளவு உற்பத்தி செய்யும்போது நமது இலாகா அந்த அளவுக்காவது உற்பத்தி செய்ய தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இலாகாவில் உத்தியோக உயர்வு கொடுப்பதனல், ஒரு விதைப் பண்ணைக்கு அவரை சார்ஜ் ஆகப் போட்டு, நல்ல உற்பத்தி காட்டிருல்தான் உத்தியோக உயர்வு கொடுப்பது என்ற முறையை வைத்துக் கொள்ளவேண்டும். வேலைக்குத் தகுந்தபடி ப்ரொமோஷன் கொடுக்க வேண்டும். சரியாக வேலை செய்யாதவர்களுக்கு ப்ரொமோஷன் கொடுக்கக் கூடாது.

எல்லா விஷயங்களிலும் இதே போலத்தான். கல்வி இலாகா வாஞலும் சரி, அல்லது மற்ற துறைகளாயிருந்தாலும் சரி, பழைய விதிகளையே இன்னும் வைத்திருப்பதால் நாம் போடக்கூடிய இலக்குகளை எட்டிப் பிடிக்க முடியவில்லை. பல காலமாக எத்தனை யோ கடிதங்களுக்கு பதில் இல்லை. ஏன் இல்லை என்று யார் கண் காணிக்கிருர்கள்? உண்மையாக சொல்ல வேண்டுமாஞல் அமைச் சரவையைச் சொல்ல வேண்டும். அவர்களுக்கு கண்காணிக்க வசதி இருக்கிறது. அமைச்சர்கள் எல்லோரும் எல்லா இடங்களை யும் சுற்றிக்கொண்டிருக்கிருர்கள். சுற்றட்டும். போகட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. மாலைகள் போட்டுக்கொள் கிருர்கள். உண்மையிலேயே நான் மாலைகள் போடுவதை வரவேற் கிறேன். அதே நேரத்தில் அவர்களுக்கு கடமை உண்டு. கட்சிப் பிரசாரத்திற்காக தெற்கே கன்னியாகுமரி வரையில் வந்து விட்டுப் போஞல் போதாது. ஒவ்வொரு அமைச்சரும் அரசாங்க நிர் வாகத்தை கவனித்தாக வேண்டும். அமைச்சர்கள் காரியதரிசி களிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்து விட்டுப் போகிருர்கள். இப்போது பார்த்தால் அவர்களே ஆட்சி நடத்துகிருர்கள் என்று சொல்லவேண்டும். அமைச்சர்கள் ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனிக்கவேண்டும். 12 மாதத்தில் 10 மாதம் சுற்றுப் பிரயாணம். அந்த நிலைமையில் எல்லாம் இங்கே இருக்கிறது. வேண்டுமாஞல் முதலமைச்சர் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கட்டும். மற்ற அமைச்சர்களெல்லாம் இங்கேயே உட்கார்ந்து நிர்வாக விஷயங்களை கவனிக்கட்டும். கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் 3 அல்லது 4 வருடங்களாக இன்னும் இன்டெக்

ரேஷன் பூர்த்தியாகவில்லை. அதிலே எத்தனையோ ஊழல்கள். இந்த இன்டேக்ரேஷனில் அதிகமாகப் படித்தவர்கள், சீனியராக இருக்கக்கூடியவர்கள் தாழ்ந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு ஜூனியர்களாக இருந்தவர்கள் அவர்களுக்கு மேல் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமை பப்ளிக் ஹெல்த் டிபார்ட் மெண்டில் உள்ளது. இன்னும் எத்தனையோ குறைகள் இருக்கின்றன. இவர்கள் எல்லாம் இன்னும் 'இன்டெக்ரேஷன்'-ல் வரவில்லை. அரசியல் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள 45-வது ஷரத்து கூறும் திட்டத்தை தாங்கள் நடைமுறையில் நிறைவேற்ற முடியவில்லை என்று கூறுகிறார்கள். அச்சட்டம் இயற்றப்பட்டு பத்து ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகும், அதை நிறைவேற்ற முடிய வில்லை என்று சொல்வது மிகவும் வருந்தத்தக்கது. 20 வருடங் களுக்கு முன்பு 'ஸோஷலிஸ்டிக் பாட்டர்ன் ஆப் சொஸைடி' அமைக்க வேண்டும் என்று சொல்லவில்லை, டைரக்டிவ் ப்ரின்ஸிபில் ஆப் தி கான்ஸ்டிட்யூஷன் எதுவும் இருக்கவில்லை. அப்போது திரு வாங்கூர் கொச்சி ராஜ்யத்தில், அந்த ஒரு சிறு ராஜ்யத்தில் கட்டாயக் கல்வி திட்டம் நிறைவேற்றப்பட முடிந்திருக்கிறது என்றால், அது இங்கே என் முடியவில்லை? அதை நிச்சயமாக நம்மால் செய்ய முடியும். நாம் பிரச்னைகளை சரிவர ஆராய்ந்து செவ்வையான முறையில் செயல்படுவோமானால் அது நிச்சயமாக சாத்தியமானது.

மேலும், நிர்வாகத்திலும், இன்டெக்ரேஷனுக்குப் பிறகு கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு ஸ்கேல் ஆப் பே, மற்ற ஜில்லாக் களில் ஒரு ஸ்கேல் ஆப் பே. இதை என் மாற்றியமைக்கக் கூடாது? இதற்கு என் இவ்வளவு தாமதம்? அங்கே வரும் மந்திரிகள் "இதை நிச்சயம் கவனிக்கிறோம்" என்று சொல்லி மூன்று வருஷங்களுக்கு மேல் ஆகின்றது. இவைகளையெல்லாம் நன்றாக பரிசீலித்து, நிர்வாக இயந்திரத்தையும், விதி முறைகளை யும் சரியானபடி ஸோஷலிச பாணிக்கு உகந்த முறையில் மாற்றி யமைத்தால், நிச்சயமாக நமக்கு ஊக்கம் அதிகரிக்கும், பொது மக்களும் சர்க்காருக்கு ஒத்துழைப்பை அதிகமாகத் தருவார்கள் என்று கூறி, என் பேச்சை முடிக்கிறேன்.

SRI V. ARUNACHALA THEVAR : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நமது மதிப்புக்குரிய நிதி அமைச்சர், 1960-61-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை நல்ல முறையில் சமர்ப் பித்திருக்கிறார். கடந்த எட்டு வருட அனுபவத்தின் பேரில் இந்த வருஷம் அவர் வரவு-செலவுத் திட்டத்தை மிக நல்ல முறையில் சமர்ப்பித்திருக்கிறார். இதில் புது வரி எதுவும் போடாமல் இருப்ப தற்காகவும் அவரை நான் பாராட்டுகிறேன். நமது ராஜ்யத்தில் நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில் 9 நீர்த் தேக்கங்கள் நல்ல முறையில் கட்டி முடிக்கப்பட்டு லட்சக்கணக்கான நிலங்கள் சாகு படிக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. கண்மாய்களின் மராமத்தை பொறுத்த வரையில் ஏராளமான கண்மாய்கள் நல்ல முறையில் செப்பனிடப் பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும், மேஜர் இனம், மைனர் இனம் கண்மாய்கள் நல்லபடி மராமத்து செய்யப்படவில்லை

[Sri V. Arunachala Thevar] [16th March 1960

இதன் காரணமாக, அதிகமாக மழை பெய்யும் காலங்களில் நன்ருக ரிப்பேர் செய்யப்பட்ட கண்மாய்களும் தூர்ந்து போகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அவசியமான காண்டிரிப்யூஷன் கொடுக்கப் படாததால் மேஜர் இனம், மைனர் இனம் கண்மாய்கள் செப்ப னிடப்படவில்லை. அந்தக் கண்மாய்களையெல்லாம் அரசாங்கமே மராமத்து செய்து பின்னர் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து காண்டிரிப்யூஷனை தாராளமாக வசூலித்துக் கொள்ளலாம். அவர்களும் கொடுக்கத் தயாராக இருக்கிருர்கள். இதைத் தவிர, பெரும்பான்மையான ஏரி மராமத்து வேலைகளை நான்கு இலாகாக் களால் கவனிக்கப்பட்டு வருகின்றன. அவைகளை பொது மரா மத்து இலாகாவும், உணவு இலாகாவும் எடுத்துக்கொண்டால் அவை சம்பந்தமான வேலைகள் நன்ருக நடக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

நமது மாநிலத்தில் 9 நீர்ப்பாசனத் திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டிருப்பதின் காரணமாக அநேக ஜில்லாக்களில் விவசாயிகள் நல்ல பலனை அடைகிருர்கள். ஆனல் எங்கள் புதுக் கோட்டைப் பகுதியைப் பொறுத்தவரையில், மன வருத்தத்துடன் தான் சில வார்த்தைகள் சொல்ல வேண்டியிருக்கிறது. கடந்த மூன்று வருடங்களாக இந்த சபையில் புதுக்கோட்டை நிலைமையை நான் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அங்கே சுமார் 10 வருடங் களாக சரிவர மழை பெய்யாததால் மணப்பாறை, புதுக் கோட்டை, பட்டுக்கோட்டை வரையிலும், திருப்பத்தூரிலிருந்து பக்கத்தில் புதுக்கோட்டை, செங்கிப்பட்டி, தஞ்சாவூர் ஜில்லா ஆரம்ப வரையிலும் மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கிருர்கள் என்பதை இந்த சபையில் நான் அடிக்கடி கூறுவதுண்டு ; அந்த விஷயத்தை கனம் அமைச்சர் களிடமும் தெரிவித்திருக்கிறேன். நேற்றுக் கூட திருமயம் தாலுகாவிலிருந்து ஸ்பெஷல் ரெமிஷன் கோரி எனக்கு தந்திகள் வந்திருக்கின்றன. ஜில்லா கலெக்டர் அவர்களும் ரெமிஷன் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு ஜனவரி மாதமே எழுதியிலிருந்த போதிலும், இன்று வரையிலும், புதுக்கோட்டைப் பகுதி ரெமிஷன் கொடுக்கலாம் என்று அரசாங்கத்திடமிருந்து உத்தரவு வரவில்லை என்று கலெக்டர் இந்த மாதம் 9-ம் தேதி தெரிவித்தார். இந்த ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய நான்கு மாதங்களிலும் கிஸ்தி வசூலித்துவிட்டுப் பிறகு ரெமிஷன் உத்தரவு போடாமல் முன்னலேயே ரெமிஷன் உத்தரவைப் போட வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். ரெமிஷன் கொடுத்தாலும் கிராம மக்கள் என்ன சொல்கிருர்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் "சர்க்கார் கருணையோடு எங்களுக்கு ரெமிஷன் கொடுக்கிறது. ஆனல் நாங்கள் இந்தப் பத்தாண்டு காலமாக, நன்ருக விளையாததால், மிகவும் கஷ்டப்படுகிறேம். எங்களுடைய இந்தக் கஷ்டத்தை அரசாங்கத்தார் கவனிக்கவில்லையே" என்று சொல்கிருர்கள். என் தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு நான் செல்லும்போது "கிஸ்தி வஜா செய்யும்படி ஏற்பாடு செய் கிறேன். கடன்களை திரும்ப வசூலிப்பதை இரண்டு, மூன்று

வருஷங்களுக்கு நிறுத்தி வைத்துப் பின்னர் வசூலிக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று சொன்னாலும், அவர்கள் "அதனால் எங்களுக்கு என்ன பலன்? அவைகளை வசூலிப்பதை இப்போது நிறுத்திவைத்தாலும் பிறகு நாங்கள் அவைகளைக் கொடுத்துத் தானே தீர வேண்டும். குளங்களில் தண்ணீர் இல்லை. பாசன வசதிக்கு ஏற்பாடு செய்யவேண்டாமா? அந்த வசதிகள் செய்யப் படாததால், நாங்கள் ரெமிஷனால் தகுந்த பலனை அடையமுடிய வில்லையே" என்று சொல்கிறார்கள். எனவே அங்கே அரசாங்கம் நீர்ப்பாசன வசதிகளை செய்து கொடுத்தாகத்தான் வேண்டும். இப்போது தேசிய விஸ்தரிப்பு திட்டம் நடந்து வருகிறது. அங்கே திருவாங்குளத்தில் செங்கீரை, குன்னண்டார் கோவில் ஆகிய பகுதிகளில் இந்தத் திட்டம் வரப்போகிறது. இந்தத் திட்டங்களுக்கு அங்குள்ள மக்கள் 50 சதவிகிதப் பங்கைக் கொடுப்பதற்கு கதியற்றவர்களாக இருக்கிறார்கள். அரசாங்கம் சலுகை அளிக்க வேண்டும். "எங்களுக்கு உண்பதற்கே வழியில்லாதபோது, எப்படி 50 சதவிகிதப் பங்கை நாங்கள் கொடுக்க முடியும்" என்று அவர்கள் கேட் கிறார்கள். நாங்கள் எவ்வளவுதான் சொன்ன போதிலும் அவர்கள் இதே பல்லவியைத்தான் சொல்கிறார்கள். "எங்களுக்கு ஆற்றுப் பாசன வசதியாவது, ஊற்றுப் பாசன வசதியாவது செய்து கொடுக்க வேண்டும்" என்று அவர்கள் கண்ணீர் விட்டுப் பேசுகிறார்கள். மணப்பாறையிலிருந்து புதுக்கோட்டை முதல் அறந்தாங்கி வரையிலும் உள்ள சுமார் 7½ லட்சம் ஜனங்கள் இவ்விதக் கஷ்ட நிலையில் இருக்கிறார்கள். எந்த விதத்திலாவது இவர்கள் குறையைப் போக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, அவர்கள் விவசாய காலத்தில் நாற்று நட்டால் அந்தப் பயிர்களை பூச்சிகள் உடனடியாக பீடிக்கின்றன. கையில் பணம் உள்ளவர்கள் அவைகளுக்கு மருந்து தெளிக்கிறார்கள், பணம் இல்லாதவர்கள் பூச்சி மருந்து தெளிப்பதில்லை. இதன் காரணமாக மருந்து தெளிக்காத வயல்களிலுள்ள பூச்சிகள் மருந்து தெளிக்கப்பட்ட வயல் களிலுள்ள பயிர்களுக்கும் வந்து தின்றுவிடுகின்றன. எனவே அரசாங்க செலவிலேயே எல்லா வயல்களுக்குமே பூச்சி மருந்தை தெளிக்கும்படி செய்தால் இந்தக் கஷ்டம் நீங்கும் என்பது என் தாழ்மையான கருத்து.

SRI R. J. SUNDER SINGH : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1960-61-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து இந்தச் சபையில் என் முதல் பேச்சை இன்றைய தினத்தின் கடைசிப் பேச்சாளனாக ஆரம்பிக்கின்றேன். கனம் பாண்டியராஜனும் நானும் இந்தச் சபைக்கு வந்ததும் அழுகும் பொருள்களுக்கு வரி விலக்கு வந்திருப்பது, குருவி உட்கார பனம்பழம் விழுந்தது போல் இருந்தாலும் நான் சந்தோஷப்படுகிறேன்.

நாட்டின் பொருளாதாரத்தில் விவசாயம் ஒரு முக்கியமான அம்சம். நிதிநிலை அறிக்கையில் கண்டபடி பெரும் அளவில் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று திட்டமிட்டு பல அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன.

[Sri R. J. Sunder Singh] [16th March 1960

மக்களுக்கு விவசாயத்தில் ஒரு ஆர்வமும், உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற ஒரு உற்சாகமும் பிறந்திருக்கிறது. திருநெல்வேலியைப் பொருத்தமட்டில் இப்போது தண்டத் தீர்வை விதித்திருப்பது இந்த ஆர்வத்தையும், உற்சாகத்தையும் பாதிப்பதாக உள்ளது. "இரிகேஷன் செஸ் டாக்ஸ்" படி போட்டிருந்த போதிலும் மக்கள் ஏதோ பணம் செலுத்த வேண்டுமென்று சொல்லும்போது அவர்களுடைய ஆர்வமும், உற்சாகமும் குறைந்து போகிறது. புஞ்சை நிலங்களில் நஞ்சை சாகுபடி செய்வது, இரு போகம் சாகுபடி செய்வது ஆகியவைகளுக்காக தண்ணீரைத் தடுத்து விநியோகம் செய்வது என்பது அதன் நோக்கம். இதில் மாகாணம் முழுவதுக்கும் உள்ள செஸ் ரூல்ஸ்படி 1958-59-ம் வருஷத்திற்கும் சேர்த்து அந்தத் தீர்வையை வசூலிக்கும்படி உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். இது அவர்களைப் பெரும் அளவில் பாதிக்கிறது. 1936-ல் இருந்தே சிலர் சுமார் 20,000 ஏக்கர் நிலங்கள் தாம்பிரபரணி தீரத்தில் புஞ்சைகள் நஞ்சைகளாகவோ, ஒருபோக நஞ்சையில் இரண்டு போகமோ சாகுபடி செய்து வருகிறார்கள். இவர்களுக்குத் தண்ணீர் தாம்பிரபரணி தீரத்தில் இருந்து கிடைத்து வருகிறது. இந்த 20,000 ஏக்கரும் நடைமுறைத் தீர்வையில் சாகுபடி செய்வது சாத்தியமா என்பதை அரசாங்கம் பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் தொகுதியில் லைசென்ஸ்தாரர்கள் கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அவர்கள் அதிக நிபந்தனைகளை வைத்திருக்கிறார்கள். அதனால் புதிதாக மின்சாரம் விஸ்தரிக்கப்படவேண்டிய பகுதியில் உள்ள மக்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. லைசென்ஸ்தாரர்களும் மின்சாரத்தை விஸ்தரிக்கத் தயங்குகிறார்கள். அந்த மக்கள் அரசாங்கமே அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆகவே, அரசாங்கம் லைசென்ஸ்தாரர்கள் எல்லைக்கு உட்பட்ட கிராமங்களிலும் அரசாங்கமே மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தூத்துக்குடியைப் பொருத்தமட்டில் துறைமுகத் திட்டத்தை நிறைவேற்ற, அதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் கேட்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் இந்த நிதிநிலை அறிக்கையை அளித்துள்ள கனம் நிதியமைச்சர் அவர்களை பாராட்டி, என் நன்றியைக் கூறி முடித்துக் கொள்ளுகிறேன். (ஆரவாரம்)

DEPUTY SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ எழுமலை ஐந்து நிமிஷத்திற்குள் முடித்துவிட வேண்டும்.

* **Sri T. P. ELUMALAI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். சென்னைக்கு குடி தண்ணீர் கொடுக்கும் பகுதியிலிருந்து நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். சென்னை மக்களுக்கு மின்சார வசதி கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். புதிதாக

16th March 1960] [Sri T. P. Elumalai]

குடி தண்ணீர் ரெட் ஹில்ஸ் கிராமத்தில் இருந்துதான் தண்ணீர் வருகிறது. சென்னைக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய கிராமமாக இருக்கக்கூடிய அந்தக் கிராமத்து விவசாயிகள் விவசாயத்துக்குத் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஏறக்குறைய 800 ஏக்கர் நிலத்தில் அங்கிருக்கும் விவசாயிகள் விவசாயம் செய்து இருக்கிறார்கள். அந்த நிலங்களில் விளையும் தருவாயில் இருக்கும்போது தண்ணீர் அந்த ஏரியிலிருந்து வருவதை நிறுத்தி விடுவதனால் அங்கு அத்தனை பயிர்களுக்கு பலனின்றிப் போகும் நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, சென்னைக்கு ஓரளவு குடித் தண்ணீர் கொடுத்தாலும், அந்தப் பயிர்களுக்கும் தண்ணீர் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குறிப்பாக, இங்கே பேசிய தலைவர்கள் தொழில்களைத் தேசிய மயமாக்க வேண்டுமென்பதைப் பற்றி அதிகமாக வலியுறுத்திப் பேசினார்கள். ஒரு தொழிலை தேசிய மயமாக்க வேண்டுமென்று சொன்னால் அந்தத் தொழிலின் நிலையும், தொழிலாளர்களுடைய நிலையும் உயரக்கூடிய அளவு பக்குவ நிலை இருக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அப்படியிருந்தால்தான் தேசிய மயமாக்கும் தன்மையை மக்கள் உணருவார்கள் என்று நம்புகிறேன். அந்த முறையில் சென்னையில் நடக்கக்கூடிய பஸ் போக்குவரத்தை எடுத்துக் கொண்டால், அங்கிருக்கும் தொழிலாளர் நிலை எல்லா வகையிலும் உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். அது சர்க்காருடைய குற்றம் என்று சொல்லவில்லை. குறிப்பாக, தேசிய மயம் என்று சொன்னால் அதிலே பல தொந்தரவுகள் இருக்கின்றன. அந்தத் தொந்தரவுகளையெல்லாம் தேசத்தின் முன்னேற்றத்தை உத்தேசித்துச் சமாளித்துத்தான் ஆகவேண்டும். ஒரு தொழிலை தேசிய மயமாக்கி நடத்தும் தன்மையில் நாம் இருக்கிறோமா என்று பார்க்க வேண்டும். இப்போது குறிப்பாக எல்லா பஸ்களையும் தேசிய மயமாக்க வேண்டுமென்று எல்லோரும் வற்புறுத்துகிறார்கள். என்னுடைய தொகுதியில் வில்லிவாக்கம் பஸ் ரூட்டை தேசிய மயமாக்கி விட்டார்கள். பஸ் போக்குவரத்து சரியாக இல்லாமல் அங்கிருக்கும் பகுதி மக்கள் என்னிடத்தில் சொல்வதைக் கேட்டு ஆவன செய்யலாமென்று அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டாலும் நல்ல பலனாக நடக்கவில்லை. புதிய பஸ்களை விடவேண்டுமென்று சொன்னாலும் உடனே முடியவில்லை. இதனால் எல்லாவற்றையும் தேசிய மயமாக்குவதினால் எந்த வித பிரயோஜனமும் இல்லையென்று சொல்லப் பிரியப்படுகிறேன். தேசிய மயமாக்கவேண்டுமென்ற கொள்கையில் அடிப்படையில் முதலில் சிறு தொழில்கள் அத்தனையும் தேசியத்தின் அஸ்திவாரமாக எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. காலப் போக்கில் பெரிய தொழில்கள் தானாகவே தேசியமயமாகிவிடும். எப்படி இன்று நாட்டிலே இருக்கக்கூடிய நிலங்களுக்கெல்லாம் உச்ச வரம்பு விதிக்கின்றோமோ அதே போல் பெரிய மயமாக்கிக் கொள்ளலாம். மேலும் ஏதாவது சர்க்காருக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டேயிருக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் சிலர் தேசிய மயத்தை சொல்லிக் கொண்டு வருகிறார்கள். சர்க்கார் இந்த தேசிய

மயமாக்கும் பிரச்னையை இப்போது எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த ஆண்டிலே ரோடு ஓரங்களிலே இருக்கும் ஏழை மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக, சென்னையில் ரோடு ஓரங்களிலே இருக்கக்கூடிய மக்களைப் பார்க்கும்போது தலை குனியும் நிலைமை ஏற்படுகிறது. இதைக் கவனித்து சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: நேரம் ஆய் விட்டது.

SRI T. P. ELUMALAI: தலைவர் அவர்களே, நான் ஏதோ கடைசி பேச்சாளியாக நிற்கிறேன். எனக்கு ஐந்து நிமிஷம்தான் பேசக் கொடுத்திருக்கிறீர்கள். நாளைக்கு ஒரு ஐந்து நிமிஷ நேரம் பேச எனக்கு அனுமதி கொடுத்துவிட்டால் ரொம்ப சுலபமாக இருக்கும் என்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: நாளைக்கு நேரம் கிடையாது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், சபை முதல்வரும் நாளைக்குப் பேச இருக்கிறார்கள்.

SRI T. P. ELUMALAI: கதர் அபிவிருத்தி என்று சொல்லும் நிலையில், ஒவ்வொரு தனிப்பட்ட முதலாளியினிடத்திலும் வேலை செய்யும் ஆயிரக்கணக்கான தொழிலாளிகளுக்கும் எப்படி சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கடனைக் கொடுக்கின்றார்களோ, அதே நிலையில் கதர்த் துணி கடனைக் கொடுக்க வகை செய்யவேண்டும். அப்படிக் கடனைக் கொடுத்து பணத்தை மாதத் தவணைகளில் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் பல விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டியிருந்தாலும், என்னை இந்தக் கடைசி நேரத்திலாவது கொடுத்து பேசச் சந்தர்ப்பம் கொடுத்தமைக்காக உதவி சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வணக்கத்தைச் சொல்லி என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

·01 p.m. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again tomorrow at 8-30 a.m.

The House then adjourned.

VIII—.PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules nd Orders.

*61. *Amendment to rule* 110 *of the Madras Motor Vehicles Rules,* 1940 *issued in G.O. Ms. No* 3386, *Home, dated 30th November* 1959. [*Laid on the table of the House under section* 133 (3) *of the Motor Vehcles Act,* 1939 (*Central Act IV of* 1939.]

* 62. *Notification issued with G.O. Ms. No.* 134, *L.A., dated 29th January* 1960, ***extending the term of office of the members*** *of the Santhiyur–Attayampatti Panchayat (Salem district) under section* 10 (1) *of the Madras Village Panchayats Act,* 1950. [*Laid on the table of the House under section* 113 (4) *of the Madras Village Panchayats Act,* 1950 (*Madras Act X of* 1950).]

* 63. ***Notification issued with G.O. Ms. No.*** **132,** ***L.A*** **, *dated*** **29th January 1960.**